THE SUDAROLI

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

30.00

பக்கங்கள் -28

வார சஞ்சிகை

ஒக்ரோபர் 24- ஒக்ரோபர் 30, 2012

October 24- October 30, 2012

## அரசியல்வாதிகளை அச்சுறுத்தும் அமெரிக்கப் பணம்





## சம்மேளனம் அமைப்பது சாத்தியமா?



## அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்களின் எதிர்பார்ப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால் -**

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்தினருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகளை அச்சுறுத்தும் அமெரிக்க டொலர்



> இலங்கையில் விடுதலைப்புலிகள் ஒழிக்கப்பட்டாலும் அவர்கள் வெளிநாடுகளில் தீவிரமாக இயங்கிவருவதாகவும் அவர்கள் இலங்கையில் நீதிச் சேவைக்குள் ஊடுருவி விட்டதாகவும் நாட்டைப் பிளவு படுத்தும் நோக்குடன் அமெரிக்க டொலருக்கு பயன்படுத்தப்படுவதாகவும் பசில் ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார். அதாவது நீதிச் சேவைக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையே நிலவும் முறுகலுக்கு புலம் பெயர் தமிழரும் அமெரிக்காவும் இணைந்து மேற்கொள்ளும் சதியே காரணம் என்ற வகையில் கருத்து வெளியிட்டுள்ளார் அவர்.

• சந்திரசேகர ஆசாத்

அமெரிக்கா ஒரு ஏகாதிபத்திய நாடு என்பதிலோ உலகை தனது மேலாதிக்கத்துக்குள் கட்டி வைக்க எந்த ஒரு முறைமீறல்களையும் செய்யத் தயங்காத ஒரு நாடு என்பதிலும் எவ்வித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை. தனது மேலாதிக்க வரம்புக்கு வெளியே செல்லும் எந்த ஒரு நாட்டின் ஆட்சியைக் கவிழ்ப்பதிலோ, ஆட்சியாளர்களைக் கொல்வதிலோ அது இராணுவச் சதிப்புரட்சி முதல் படையெடுப்பு வரைப் பல்வேறு வழிகளைக் கையாண்டு தனது நோக்கங்களை நிறைவேற்றி வருவதை வரலாறு முழுவதுமே காணமுடியும். ஆட்சியாளர்கள் மீது மக்கள் வெறுப்புற்று நடத்தும் போராட்டங்களையும் அது தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதுண்டு.

கொங்கோவில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட லுமும்பாவின் ஆட்சி சதிப்புரட்சி மூலம் கவிழ்க்கப்பட்டு அவரும் கொல்லப்பட்டார். இவ்வாறே பாக்கிஸ்தானில் பூட்டோ, சிலியன் அலண்டே ஆகியோரும் கொல்லப்பட்டு அந்த நாடுகளில் சதிப்புரட்சி மூலம் இராணுவ ஆட்சிகள் கொண்டு வரப்பட்டன.

இப்படியான சதிப்புரட்சிகள் சாத்தியமற்ற போது நேரடியாகவே படையெடுப்புகளை மேற்கொண்டு ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவதுண்டு. ஆப்கானிஸ்தான், ஈராக் போன்றவை இதற்கான உதாரணங்களாகும்.

அதே போன்று ஆட்சியாளர்கள் மேல் வெறுப்புற்ற மக்கள் பேராட்டங்களை நடத்தும் போது அவற்றைச் சாதகமாக்கி அமெரிக்கா தனக்குச் சாதகமான ஆட்சிகளை உருவாக்குவதுண்டு. எகிப்து, லிபியா ஆகிய நாடுகளின் ஆட்சிகள் இம்முறையிலேயே கவிழ்க்கப்பட்டன. சிரியா, ஈரான் ஆகிய நாடுகள் தற்சமயம் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. எனவே, உலகின் விடுதலை விரும்பும் மக்கள் அமெரிக்காவை எப்போதுமே ஒரு ஆக்கிரமிப்பாளனாகவும், எதிரியாகவுமே பார்க்கின்றனர். அவர்கள் அமெரிக்கா நமது நாட்டின் இறைமைக்கு எப்போதுமே ஒரு அச்சுறுத்தல் என்றே நோக்குகின்றனர்.

எனவே அமெரிக்க எதிர்ப்பு என்பது ஒரு முற்போக்கான நியாய பூர்வமான ஒரு வழிமுறையாகவே கருதப்படுகிறது.

ஆனால் பல ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கா நாடுகளின் ஆட்சியாளர்கள் தங்களின் சர்வாதிகாரப் போக்குகளையும் மக்கள் விரோத நடவடிக்கைகளையும் மூடி மறைப்பதற்கு அமெரிக்க எதிர்ப்பு என்ற வசனத்தைப் பாவித்து வருகின்றனர். மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளையும் இதற்கான போராட்டங்களையும் அமெரிக்கச் சதி எனக்கூறி அவற்றை நிராகரிப்பதுடன் இவர்கள் மீது ஒடுக்கு முறை களையும் கட்டவிழ்த்து விடுகின்றனர். இன்னொரு புறம் அத்தகைய போராட்டங்களைப் பயங்கரவாதம் எனப் பட்டம் சூட்டி மேற்குலகின் முன்பும் தம்மை நியாயப்படுத்தி வருகின்றனர். அத்தகைய ஏமாற்று வித்தைகள் செல்லுபடியாகாத போது அமெரிக்க எதிர்ப்பு தேசப்பற்று போன்ற கோசங்களை முன்வைக் கின்றனர்.

அண்மையில் இலங்கையில் நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதிச்சேவைக்குமிடையே ஒரு முறுகல் நிலை தோன்றியது. இருபகுதியினரும் பகிரங்கமாக விமர்சனங்களை முன்வைக்குமளவுக்கு பனிப்போர் தொடர்கிறது. இதன் உச்சக் கட்டமாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலர் மஞ்சுள திலகரத்தின பட்டப்பகலில் நடு வீதியில் இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் தாக்கப்பட்டு ஒரு வாரம் கடந்த நிலையிலும் இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை. அதே நாளில் முன்னணி சோஷலிசக் கட்சியின் முக்கியஸ்தர் திமுக்தி ஆட்டிகல யாழ்ப்பாணத்தில் வைத்து கழிவு ஒயில் வீசப்பட்டு இனம் தெரியாதவர்களால் தாக்கப்பட்டார். தாக்குதல் மேற்கொண்டவர்களின் ஆளடையாளங்கள், வாகன இலக்கம் என்பன கொடுக்கப்பட்டு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. இவர் ஏற்கனவே இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு பின்பு அவுஸ்திரேலியத் தூதரகத்தின் அழுத்தத்தின் பேரில் விடுவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறே நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணி இராணுவத்தால் அபகரிக்கப்பட்டது தொடர்பாகப் பொலிசில் முறைப்பாடு செய்து விட்டுத் திரும்பி வரும்போது நல்லூர் பிரதேச சபைத் தலைவர் இனம் தெரியாதவர்களால் நையப் புடைக்கப்பட்டார்.

அதாவது கடந்த காலங்களைப் போன்றே நியாயங்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் இனந்தெரியாதவர்களால் இலக்கு வைக்கப்படுகின்றனர். இதில் நீதிச்சேவை ஆணைக்குழுவினர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், சாதாரண பொதுமக்கள் என சகல தரப்பினரும் பெரும் உயிர் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலருக்கு அடி விழுந்த கையுடனேயே உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநயக்காவும், வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவும் அது வெளிநாட்டுச்சதி என அறிவித்து விட்டனர். அவர்களைப் பொறுத்தவரை மாணவர் ஆர்ப்பாட்டம் செய்தாலோ அல்லது பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்தாலோ எல்லாமே வெளிநாட்டுச் சதிதான்.

ஆனால் அச்சம்பவங்கள் இடம்பெற்ற பின்பு பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ச வெளியிட்ட கருத்து எவ்விதத்திலும் அலட்சியப்படுத்தக்கூடியதல்ல. ஒரே கல்லில் பல மாங்காய்களை அடிக்கும் முயற்சியாகவே அவரின் கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன.

அதாவது இலங்கையில் விடுதலைப்புலிகள் ஒழிக்கப்பட்டாலும் அவர்கள் வெளிநாடுகளில் தீவிரமாக இயங்கிவருவதாகவும் அவர்கள் இலங்கையில் நீதிச் சேவைக்குள் ஊடுருவி விட்டதாகவும் நாட்டைப் பிளவு படுத்தும் நோக்குடன் அமெரிக்க டொலருக்கு பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கருத்துவெளியிட்டுள்ளார். அதாவது நீதிச் சேவைக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையே நிலவும் முறுகலுக்கு புலம் பெயர் தமிழரும் அமெரிக்காவும் இணைந்து மேற்கொள்ளும் சதியே காரணம் என்ற வகையில் கருத்து வெளியிட்டுள்ளார் அவர்.

இக் கருத்தின் உள்நோக்கம் புலம்பெயர் தமிழர்களாலும் அமெரிக்காவாலும் பெரும் ஆபத்து ஏற்படுத்தப்படுகின்றது எனவும் இதற்கு நீதிச்சேவையினர் துணை போகின்றனர் எனவும் அவர் சிங்கள மக்களை நம்ப வைக்க முயல்கின்றார் என்பதே அடிப்படை உண்மையாகும்.

ஐக்கிய நாடுகள் சபையோ, அமெரிக்காவோ அல்லது மேற்கு நாடுகளோ இலங்கையில் இடம்பெற்ற இறுதிப்போரின் போது தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமைமீறல்கள் தொடர்பாகவோ சில நடவடிக்கைகள் எடுக்க முற்படும்போது அவை ஏகாதிபத்தியச் சதி எனவும் இலங்கையில் இறைமையில் தலையிடுவது எனவும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. அதாவது ஏகாதி பத்திய எதிர்ப்பு என்ற போர்வையில் இலங்கை அரசின் மனித குல விரோதச் செயற்பாடுகள் மறைக்கப் பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அது பெரிய அளவில் இலங்கைக்குச் சாதகமான நிலைமைகளை ஏற்படுத்த முடியாவிட்டாலும், இந்திய உதவியுடன் அதன் வீரியத்தைக் குறைக்க முடிந்தது. எனினும் அவ் விஷயத்தில் ஏகாதிபத்தியச் சதி என்ற கூக்குரல் இன்னும் ஓயவில்லை.

தற்சமயம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச அதிகாரங்கள் கூடப் படிப்படியாகப் பறிக்கப்பட்டு வருகின்றன. அதாவது முழு அதிகாரங்களையும் மத்தியில் குவித்து நிறைவேற்று அதிகாரத்தின் கீழ்கொண்டு வரப்பட்டு ஒரு பிரகடனப்படுத்தப்படாத சர்வாதிகாரத்தை உருவாக்கும் வகையில் ஒவ்வொரு நகர்வுகளையும் மேற்கொள்ளப்படுகின்றது. ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்படும் நிலையில் உயர் நீதிமன்றமும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவும் தமது [illegible] சில முடிவுகளை எடுக்கவேண்டிய நிலை எழுந்தது. உயர் நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ள நிலையில் நீதிச் சேவைகள் ஆணைக்குழு எவ்வித விட்டுக்கொடுப்பையும் மேற்கொள்ள முடியாது.

இந்த நிலையில் தான் ஜனாதிபதி நாட்டின் அபிவிருத்திக்கு ஒவ்வாத சட்டங்கள் மாற்றப்பட வேண்டுமெனவும் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச 13 வது அரசியலமைப்புத் திருத்தம் அகற்றப்பட வேண்டும். அல்லது நிறுத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். இப்படியான நிலையில் சிங்கள மக்கள் மத்தியில் நீதித்துறை பற்றிய ஒரு நம்பிக்கை யீனத்தை ஏற்படுத்தும் முகமாகவே பசில் ராஜபக்சவின் கருத்து வெளியிடப்பட்டது.

அதாவது புலம்பெயர் தமிழர்களும் அமெரிக்காவும் அமெரிக்க டொலர் மூலம் நீதித்துறைக்குள் ஊடுருவி விட்டனர் என்ற அபத்தமான கருத்தைச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்புவதே அடிப்படை நோக்கமாகும். இன்று ஒவ்வொரு நாளும் விலைவாசிகள் ஏறிக் கொண்டிருக்கின்றன. வாழ்கைச்செலவு சாதாரண மக்களால் சமாளிக்கக்கூடிய அளவில் இல்லை. நாட்டின் 20 வீத மக்கள் ஒரு நாளைக்கு 1 டொலரையும் 40 வீதமான மக்கள் 2 டொலர்களையுமே வருமானமாகப் பெறுகின்றனர். நாட்டின் தேசிய வருமானத்தில் 82 வீதமான தொகை வருடாவருடம் கடன் தவணைகளையும் வட்டியையுமே கட்ட செலவிடப்படுகிறது. இந்நிலையில் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. அண்மையில் கூட மது, கோழி இறைச்சி, சீமேந்து என்பவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டு விட்டன. எரிபொருள் விலையும் அதிகரிக்கப்படும் ஒரு சாத்தியம் உண்டு. இப்படியான ஒரு நிலையில் நாட்டில் அமைதியின்மை தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே, இன்று அவற்றிலிருந்து தப்ப அமெரிக்காவினதும் புலம் பெயர்ந்த தமிழர்களினதும் வெளிநாட்டுச் சதி எனக்கூறி நீதிச்சேவைகள் பிரச்சினைகளை புலம்பெயர்தமிழர்களுடன் தொடர்புபடுத்தல் போன்ற பிரசாரங்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. சிங்கள மக்களிடம் இயல்பாக உள்ள ஏகாதிபத்திய எதிர்புணர்வைத் தட்டியெழுப்பி அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பவே இவை மேற்கொள்ளப்படுகின்றன.

அது மட்டுமின்றி எல்.ரீ.ரீ என்பதைச் சொல்லிச் சொல்லி இராணும் தொடர்ந்து பலப்படுத்தப்படுகிறது. தமிழ் மக்களின் காணிகள் பறிக்கப்பட்டு முகாம்கள் விரிவாக்கப்படுகின்றன. அதாவது நிறைவேற்று அதிகாரம் என்ற பெயரில் சகல அதிகாரங்களும் ஒரு சிலரின் கைகளில் குவிக்கப்பட்டு ஒரு பிரகடனப்படுத்தப்படாத சர்வாதிகாரம் உருவாக்கப்பட்டு வருகின்றது.

வறுமை, வேலையின்மை, வாழ்க்கைச் செலவு உயர்வு என்பவற்றுக்கு எதிராக மக்கள் வாய்திறக்க முடியாத அளவுக்கு தலைகளுக்கு முன் துப்பாக்கிகள் நீட்டப்படும். அமெரிக்காவையும் புலம்பெயர் தமிழர்களையும் காட்டிக் காட்டியே இலங்கையில் ஒரு சர்வாதிகார ஆட்சி உருவாக்கப்படுகிறது என்பதே உண்மையாகும். சிங்கள மக்கள் இந்த உண்மையைப் புரிந்து கொண்டு விழித்தெழும் போது காலம் கடந்துவிடும். நாடு பொருளாதாரம் அதல பாதாளத்திற்கு தள்ளப்பட்டு, பட்டினிச்சாவு மலியும் நிலையே ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னதமான சிற்பங்கள்...!




**த**மிழ்நாட்டில் கல்லிலே வடித்த சிற்பங்களுக்குப் பெயர்பெற்ற இடம் மகாபலிபுரம். கருங்கற்களின் மீதில் உரசும் உளிகளின் ஓசைகளோடு உருமாறுகின்ற கற்கள் ஒளிதூவும் சிலைகளாகிக் காட்சி தருகின்றன.


விநாயகரின் எழிலான கோலங்கள் தொடக்கம் வில்லேந்தும் வீரன் வரையான பழைடைய கலைவடிவங்களும் நடன மங்கையரின் பல்நிலை அபிநய ஆடல் தோற்றங்கள் தொடக்கம் நவநாகரிக இன்றைய புதுமை மங்கையர் வரையான வடிவு கொண்ட கற்சிலைகளும் கண்களைக் கவருகின்றன.

ஒரு கையிலே உளியும் மறுகையிலே சிறிய சுத்தியலும் கொண்டு கல்லாய்க் கிடந்த பொருள் சிற்பிகளின் எண்ணத்தால் செய்கைகளால் சிலைகளாகி நிற்கின்றன. சுட்டெரிக்கும் மதிய வெயிலிலும் அந்தக் கற்பாறையின் மேல் வீழ்ந்து பரவும் வெப்பத்தையும் ஏந்தி வியர்வை சிந்தும்



அந்தச் சிற்பிகளின் பொழிவோசை காண்போர் செவிகளில் வீழ்ந்து இனிமை தருகிறது. கல்லில் அமர்ந்திருந்தே கருகி உழைக்கும் சிற்பிகளால் உலகம் வியக்கும் உன்னதமான சிலைகள் உருவாகுகின்றன. கருங்கற்கள் கலைவடிவம் பெறுகின்றன. அவை வணக்கத்துக்குரிய தெய்வங்களாகவும் வாழ்ந்துலகை வளம்செய்த அறிஞர்களாகவும் உருமாறுகின்றன. அத்தகைய சிலைகள் போற்றப்படும் வகையில் நிலைநின்று ஒளிர, அவற்றைச் செய்த சிற்பிகள் பலரும் காணாமற் போகின்றனர். சிலைகளோ தனித்து நிற்கின்றன. ஆனால் சிற்பியின் பெயரும் முகவரியும் போற்றப்படும் வகை சிற்பத்தின் சிறப்பு அழியாது நிலைபெறுகிறது. இந்த மகாபலிபுரத்துச் சிற்பிகள் கற்களைச் செதுக்கும் உளிகளின் ஓசைகள் இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

இந்தச் சிற்பிகளுக்கும் எங்கள் பள்ளிச் சிறுவர்களைப் பண்புடையோராக்கும்



ஆசிரியர்களுக்கும் நிறையவே ஒற்றுமை உள்ளது. பிள்ளைப் பருவத்திலிருந்து இளைஞனாய் வளர்ந்து உயர்ந்து பெரியவனாகும் போது, அவனது செய்கைகள் அவன் கற்ற பாடசாலையைக் காட்டிக் கொடுக்கின்றது. அவனைக் கற்பித்த ஆசிரியரை இனங்காட்டுகிறது.

ஒருவன் செய்யும் செயல்களை அவதானித்த பின்னர், எல்லோருமே அவனிடத்தில் "நீ எங்கே படித்தாய்?" என்றோ அல்லது "யாரிடம் கற்றாய்?" என்றோதான் கேட்கிறார்கள்.

அந்த வகையிலேதான் அவனை மனிதனாகச் செதுக்கியவன் யார்? என்பதை அறிய வினாக்களை எழுப்புகின்றனர். பாடசாலையையும் ஆசிரியரையும் இனங்காண்பதன் மூலம் அவனது அறிவையும் பண்பின் அழகையும் மதிப்பீடு செய்கிறார்கள் ஒவ்வொரு மாணவனும் தனது வாழ்க்கையின் மூலம் தனக்குக் கற்பித்த ஆசிரியரைக் காட்டிக் கொடுக்கிறான். சிறந்த அழகிய சிற்பம் எவ்வாறு சிற்பியின் திறமையை வெளிப்படுத்தி மிளிர்கின்றதோ அவ்வாறே நல்ல பண்புடைய ஆசிரியரிடம் கற்றோர் பண்புடையோராக ஒளிர்தல் வேண்டும்.

"அந்தநாளைய வாத்திமார் போல இந்த நாளைய வாத்திமார் இல்லை" என்கின்ற பேச்சும் எமது காதுகளில் விழுகின்றது.

அதுபற்றி இன்றைய புதிய ஆசிரியர் ஒருவரிடம் கேட்டேன் "பாடசாலைகளில் இப்பொழுது ஒவ்வொரு பாடங்களுக்குமான பாடத்திட்டத்திற்கு அமைவாகவே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவையும் பரீட்சையில் சித்தியெய்தும் நோக்கத்துடனேயே போட்டிகளையும் பொறாமைகளையும் வளர்த்தபடியே கற்பிக்கப்படுகின்றன. அதிலே பண்புகளுக்கு பிரத்தியேகமான இடமோ பாடத்திட்டமோ இருந்தால் படிப்பிக்கலாந்தானே?" என்றார் அவர்.

அவரது பதிலில் பாடங்களும் பயிற்சிகளும் பண்புகளை வளர்க்கப் பயன்படவில்லை என்பது தெரிகிறது. அத்துடன் பரீட்சைக்குத் தோற்றிச் சித்திபெற ஏற்ற பாடமாகவே பண்புகளையும் கற்பிக்கலாம் எனச் சிந்திப்பதாகவும் தோன்றுகிறது. எமது கல்விக் கொள்கையில் உன்னதமான ஒழுக்கம் மறைந்துவிட்டதான மயக்கம் காணப்படுகிறது. கற்பிக்கும் பாடங்களோடு இயந்திரமயமாகிவிட்ட ஆசிரியர்கள் உழைப்பையே கருத்தில் கொண்டு ஒழுக்கத்தை மதிக்காத நிலைமை வளர்ந்துவிட்டதோ என ஐயுறவேண்டியதாகவும் உள்ளது. போலியான பாராட்டுக்களோ இன்று பவனிவருவதாக அறியமுடிகிறது.

எனினும் மாணவர்களைப் பார்த்தே அவர்களின் ஆசிரியர்களை மகிமைப்படுத்தும் காலம் வரவேண்டுமென்ற பார்வை இன்றும் எம்மவரிடத்தில் உள்ளதென்றே நம்புகிறேன்.

**நெடுந்தீவு மகேஷ்**

# கொள்ளிக் கண்

**கவிஞர்- ஸ்ரீ பிரசாந்தன்**

**பெ**ற்றோருக்குப் பிள்ளை ஆற்றவேண்டிய கடன்களை ஒழுங்குற நிறைவேற்றும் போதுதான் ஒவ்வொரு பிள்ளைக்கும் மனச்சாந்தி ஏற்படுகிறது. அந்த வகையில் பெற்றெடுத்த அன்னையையும் தந்தையையும் தவிக்கவிட்டு - தனித்திருக்கவிட்டு விலகிஇருக்கச் செய்த விதியை எண்ணிக் கலங்குகிறார் ஒரு கவிஞர். அவரது நினைவுகளை விட்டுக் கலையாத அந்தத் துயரமான நாள்களை எண்ணி எண்ணியே வேதனைப்படுகிறது அவரின் மனம். கொள்ளி வைக்கும் வாய்ப்பையும் கெடுத்து, கொலைவெறி கொண்ட கொள்ளிக் கண்ணர்களின் கொடுமைக்குள் மாண்ட உறவுகளை எண்ணிக் கலங்குகிறார் அவர்.

*அந்த அவலப் பொழுதில்*
*நான் உடனிருக்கவில்லை*
*நீங்கள் சொல்ல நினைத்த*
*நிறைவுச் சொற்களை*
*அறியேன்*

அன்று நீங்கள் அந்தக் கொடிய வன்னிப் போருக்குள் அகப்பட்டு அவலப் பட்டபோதில் என்னால் உடனிருக்க முடியவில்லை. அந்தக் கடைசி நேரத்தில் நீங்கள் எதனை என்னிடம் சொல்ல நினைத்தீர்களோ, எதனையுமே என்னால் அறிய முடியவில்லையே என்ற ஏக்கம் இன்றும் தொடர்கிறது.

*விடைபெற்ற புன்னகையைப்*
*பார்க்கவில்லை*
*தொலைபேசி வழியே*
*அனல் உருக வழிந்த செய்திக்கு*
*உடன் ஓடி வரமுடியாமல்*
*தடுப்புச் சுவர் எழுப்பியது*
*போர்*

இவ்வுலகைவிட்டு விடைபெற்ற தந்தையின் புன்னகையைப் பார்க்க முடியவில்லை. தொலைபேசி ஊடாக எனக்கு வந்து சேர்ந்த, மனம் கொதிக்கும் செய்தி கேட்டு ஓடிவரும் வேகம் இருந்தும் என்னால் வரமுடியாமல் போய்விட்டதே என அங்கலாய்க்கிறார். அத்துடன் எல்லாவற்றையும் தடுத்துக் கொலைவெறி ஆடியதே போர் என்கிறார் கவிஞர்.

*மகனின் இறுதிக் கடமைகளை*
*ஏற்காமலே புறப்பட்டீர்கள் அப்பா!*

மகனாகிய என்னை இறுதிக் கடமைகளைக் கூடச் செய்யவிடாமல் தடுத்துவிட்டார்களே, அப்பா! நீங்களும் நான் செய்ய வேண்டிய கடமைகளை ஏற்காமலே சென்றுவிட்டீர்களே! என்று ஆதங்கப்படுகிறார் அவர்.

*இன்று*
*பிணக்காடான தேசத்தில்*
*செல்ல நேரும் ஒவ்வொரு இழவு*
*வீட்டிலும்*
*நீங்களே படுத்திருக்கிறீர்கள்*
*வைக்காத கொள்ளியால்*
*சுட்டபடி என் நெஞ்சை.*

இன்று தேசமோ பிணக்காடாகி விட்ட நிலையில்; நான் போகின்ற ஒவ்வொரு செத்த வீட்டிலும் மக்கள் வீழ்ந்து கூடி அழுகின்ற ஒவ்வொரு உடலின் மீதும் அப்பா உங்களின் முகமே எனக்குத் தெரிகிறது. நீங்களே சடலமாகக் கிடப்பதாகவே பார்க்கிறேன். நான் உங்களுக்கு இறுதியில் வைக்க இயலாமற் போன அந்தக் கொள்ளி இப்பொழுது என்னையும் என் நெஞ்சத்தையும் சுடுகிறது என்று வேதனைப்படுகிறார் கவிஞர் ஸ்ரீ.பிரசாந்தன்.




ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளராகப் பணிதொடர்பவர். 'நிமிர்நுனை' 'அந்தரத்து உலவுகிற சேதி' ஆகிய நூல்களின் ஆசிரியர். 'சுந்தரராமசாமி 75' கவிதைப் போட்டியில் பரிசு பெற்றவர். 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள்' எனும் கவிதை நூலின் தொகுப்பாசிரியர்.

அவரது ஓவியம் செதுக்கிய பாடல் எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து பெறப்பட்ட கவிதையே இது. அவர் தொடரும் கவிதைப் புனைவுகளால் தமிழின் பெருமையை உயர்த்த வாழ்த்துகிறோம்.

**மைதில் தேவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நச்சுக்குழிக்குள் விவசாயம்!

இன்றைக்கு 2500 வருடங்களுக்கு மேலாக சிறிலங்காவின் பொருளாதாரத்தில் விவசாயமும், விவசாயிகளும் முக்கிய பாத்திரத்தை வகித்துவருவது மட்டுமன்றி, விவசாயிகள் சித்திரைப்புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் போன்ற தேசிய விழாக்களைக் கொண்டாடிவரும், ஓர் தனித்துவமான நாகரீகமான பண்பாடுகளைக் கொண்ட சமூகமாகவும் இருந்து வருகின்றனர்.

இது குறித்து சர்வதேசப் புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான றொபேட் நொக்ஸ் 17 ஆம் நூற்றாண்டு காலப் பகுதியில் எழுதிய வரலாற்று நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். 'விவசாயியின் முதுகில் அப்பியுள்ள சேறு கழுவி நீக்கப்படும்போது அவன் அரசனாக இருப்பதற்கு பொருத்தமுடையவனாகின்றான்' என்பதே அதுவாகும்.

ஆனால், பெரும்பாலும் அது காற்றோடு மறைந்து போய் விட்டதாகவே உள்ளது. அது மட்டுமல்லாது எமது தற்போதைய நாட்டுத் தலைவர்கள், அண்மைய தசாப்தங்களில் அத்தன்மையைக் காற்றில் விதைத்துவிட்டுச் சூறாவளியினையே அறுவடை செய்கின்றனர்.

வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வாழும் விவசாயிகள் இன்னும் சேற்றுக் குழிக்குள்ளேயே உள்ளனர்.

எமது நாட்டின் பண்டைய கால மன்னர்கள் அந்நாட்களில் வியக்கத்தக்க வகையில் பராக்கிரமசமுத்திரம் போன்ற ஆயிரக்கணக்கிலான குளங்களையும் நீர்ப்பாசன வடிவமைப்புக்களையும் கட்டுவதற்கு எமது பொறியியலாளர்களை ஊக்குவித்தனர். மழைக்காலங்களில், மழைநீரினைத் தேக்கிவைத்து வரட்சிக் காலத்தின்போது அந்நீரினை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்காகவே அந்நாட்களில் அமைக்கப்பட்ட இவற்றின் தொழில்நுட்பத்தினை இன்னமும் பெரும்பாலான மக்கள் உண்மையில் புரிந்துகொள்ளவேயில்லை. இதனால் இன்னும் பல குளங்கள் சேதமடைந்தும், சீரமைக்கப்படாமலும் உள்ளதோடு களத்து நீரை வீண்விரயம் செய்வதுமான நிலைமையும் நீடித்துவருகின்றது. ஒரு காலத்தில் சிறிலங்கா 'ஆசியாவின் அரிசிப் பாத்திரம்' என்ற கௌரவத்தைப் பெற்று விளங்கியது. ஆனால் இன்றோ அந்நிலை மாறி, பெரும்பாலான அரிசி வகைகள் சுவை அற்றனவாக மாறிவிட்டன.

கடந்த வருடத்தில் நாட்டில் என்றுமில்லாத வகையில் நிலவிய மிக மோசமான வரட்சி பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் நெல்வயல்களையும் மற்றும், ஏனைய பயிர்ச்செய்கைகளையும் நாசமாக்கி பெருமளவிலான விவசாயிகளை பிச்சைக்காரர்களாக்கியது மட்டுமன்றி பட்ட கடன்களை அடைக்கமுடியாதவர்களாகவும் அல்லலுறவைக்கும் நிலைக்கு உள்ளாக்கிவிட்டது.

கடந்த மாகாண சபைத் தேர்தல்களின் பிரச்சாரக்காலப்பகுதியில் அரசாங்க தரப்பினரால் பாதிப்படைந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு ஒரு இலட்சம் ரூபா நட்டஈடாக வழங்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டது. அதுவும் கூட சரிவர வழங்கப்படவில்லை. ஆனால், மாகாணசபைத் தேர்தலில் வாக்குவேட்டைக்காக ஒரு சிலருக்கு அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி நட்டஈடுகள் வழங்கப்பட்டதாக அங்குள்ள விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர். அத்துடன் விவசாயிகளின் அவதிகளைத் தமது அரசியல் நன்மைகளுக்காகப் பயன்படுத்திக்கொண்டனர் எனவும் அவர்கள் விசனிக்கின்றனர்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போலவும், மேலும் விவசாயிகளைச் சேற்றுக்குழிக்குள் வலிந்திழுப்பது போலவும், வரட்சியினால் பாதிப்படைந்த விவசாயிகளை அவர்கள் வங்கிகளில் பெற்றிருந்த கடன்களை மீளச் செலுத்தும்படி வங்கி அதிகாரிகளும் நிர்ப்பந்திக்கின்றனர்.



இதனால் விவசாயிகள் தம்வசமுள்ள நகைகளையோ அல்லது ஏனைய பெறுமதியான பொருட்களையோ அடகு வைத்தும் விற்றும் கடன்களை அடைப்பதாகத் தெரியவருகின்றது. இருப்பவற்றையும் இழந்து அவர்கள் மென்மேலும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இத்தகைய மோசமான நிலையின் மத்தியில் சுகாதார அமைச்சு, உலக சுகாதார நிறுவனம் மற்றும் பல்கலைக்கழக விஞ்ஞான நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் மூலமாக வடக்கு, கிழக்கு மத்திய, ஊவா மற்றும் ஏனைய மாகாணங்களில் உள்ள விவசாய சமூகத்தினரில் 15 வீதமானோர் சிறுநீரக வியாதியால் பீடிக்கப்படும் அவல நிலைக்குள்ளாகியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அத்தகையவர்கள் 15 வயதிற்கும் 70 வயதிற்கும் இடைப்பட்ட வயதுள்ளவராகக் காணப்படுகின்றனர் எனவும், இது குறித்து பயனளிக்கக் கூடிய விதத்தில் அவசரமானதும் துரிதமானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் மிகமிக அவசியமானதெனவும், தவறின் சிறுவர்கள் கூட அந்நோயின் தொல்லைக்குள்ளாவார்கள் எனவும் ஆராய்ச்சியாளர்களும் விஞ்ஞானிகளும் எச்சரித்துள்ளனர். கடந்த 2008 ஆம் ஆண்டில் சுகாதார அமைச்சினால் உலக சுகாதார நிறுவனத்தின் ஒரு குழுவினர் நீடித்துவரும் இச்சிறுநீரக வியாதிகளுக்கான காரணத்தைக் கண்டறியவென இங்கு வரவழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களது அறிக்கைகள் கடந்த வருடத்திலும், இவ்வருடம் ஆனி மாத்திலும் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்பட்டன. ஆயினும் அதற்கான ஓர் தெளிவான முடிவு எதனையும் உறுதியாகக்கூற முடியாத நிலையே உள்ளது. எனினும் உலக சுகாதார நிறுவனம் அடுத்தமாத இறுதிக்குள் மேலும் உறுதியான தீர்மானமான அறிக்கையை வழங்குவதாகத் தெரிவித்துள்ளது.

எனினும் பல்கலைக்கழக விஞ்ஞானிகளும் மற்றும் ஆய்வாளர்களும் நச்சுத்தன்மையுடைய ஆர்சீனிக் மற்றும் கட்மியம் போன்றவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டுள்ள உரங்கள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளின் மிதமிஞ்சிய பாவனையே இதற்கான மூலகாரணமென நம்புகின்றனர்.

> **ஆராய்ச்சிகளின் மூலமாக வடக்கு, கிழக்கு மத்திய, ஊவா மற்றும் ஏனைய மாகாணங்களில் உள்ள விவசாய சமூகத்தினரில் 15 வீதமானோர் சிறுநீரக வியாதியால் பீடிக்கப்படும் அவல நிலைக்குள்ளாகியிருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அத்தகையவர்கள் 15 வயதிற்கும் 70 வயதிற்கும் இடைப்பட்ட வயதுள்ளவராகக் காணப்படுகின்றனர் எனவும், இது குறித்து பயனளிக்கக் கூடிய விதத்தில் அவசரமானதும் துரிதமானதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் மிகமிக அவசியமானதெனவும், தவறின் சிறுவர்கள் கூட அந்நோயின் தொல்லைக்குள்ளாவார்கள் எனவும் ஆராய்ச்சியாளர்களும் விஞ்ஞானிகளும் எச்சரித்துள்ளனர்.**

இவ்வாறாக உரங்கள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளில் சேர்ந்திருக்கும் மிகைப்பட்ட நச்சு மூலப்பொருட்கள் நிலத்தடி நீரை மாசுறவோ அல்லது நஞ்சூட்டவோ செய்கின்றன. அதனால் மாசுற்ற அந்நீரை அருந்துபவர்களும், உணவை உண்ணும் மக்களும் இத்தீங்கான சிறுநீரக வியாதிக்குள்ளாக்கப்பட்டு விடுகின்றனர் என அவர்கள் தெரிவிக்கின்றனர். உலக சுகாதார நிறுவனமும் உரங்கள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளின் காத்திரத்தினைக் குறைத்து கட்டுப்படுத்துமாறு அழைப்பு விடுத்துள்ளது.

மிக அண்மையில்கூட ஆளும் கூட்டணியின் ஒரு தரப்பினர் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் விவசாயிகளுக்கு வருடாவருடம் குறைந்த தரத்திலான விவசாய இரசாயனப் பொருட்களை மானியமாக வழங்குவதற்காகச் செலவிடும் நம்பமுடியாத பெருந்தொகையான 55 பில்லியன் ரூபாவையும் மீளாய்வு செய்யுமாறு கோரிப் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

விவசாயத்துறை நிபுணர்கள் இது ஓர் நீண்டகால முயற்சியின் வழியாகவே காணப்படவேண்டிய தீர்வாகக் கருதுகின்றனர். அத்துடன் அரசாங்கம் கமக்காரர்களுக்கு இயற்கை உரப்பாவனை குறித்த விழிப்புணர்வு மற்றும் ஊக்குவிப்புப் பணச் சலுகைகள் என்பனவற்றை வழங்குதல் வேண்டுமெனவும் நம்புகின்றனர்.

அத்தோடு நின்றுவிடாது, அரசாங்கம் ஏனைய பிறநாடுகளில் உள்ள விவசாயத்துறையின் முன்னேற்றமடைந்துள்ள கொள்கைகள் பற்றி அணுகி ஆராய்ந்து அவற்றில் சிறிலங்காவிற்குப் பொருத்தமானவற்றை இங்கும் அமுல்படுத்த வேண்டிய தேவைமிக முக்கியமானது. இதுவும் ஓர் விதத்தில் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதில் உதவியளிக்கும்.

மேலும், இங்கு பரவலாக நிலவும் சந்தைப்படுத்தலின் பற்றாக்குறையினையும், கிராமப்புறங்களில் விவசாய உற்பத்திகள் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளின்றிச் சேதமுறுவதையும் தடுத்துப் பாதுகாத்து அவற்றினை பாவனையாளர்களுக்கு அல்லது உணவுப் பொருள் உற்பத்திச்சாலைகளுக்கும் சென்றடைவதற்கான வழிவகைகளையும் மேற்கொள்ளுதல் அவசியமானதாகும்.

இவையனைத்தும் பெரிதளவில் செய்யப்பட்டால் எம்மிடம் மாசடைந்த உணவுப் பொருட்கள் மற்றும் குடிநீர் பிரச்சினையும் இல்லாமற்போய்விடும். அத்துடன் தரம்குறைந்த, ஆபத்தையுண்டாக்கும் ஆர்சீனிக் கலந்த விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதில் விரயமாகும் நூற்றுக்கணக்கிலான மில்லியன் டொலர்களையும் சேமித்துக்கொள்ளமுடியும். எம்மிடம் இருப்பவற்றையே உண்ணவும் அருந்தவும் முடியும் பல நவீன மருத்துவத் தொழில்நுட்பங்கள் இருக்கின்ற போதிலும் மாசற்ற உணவை உண்பதாலும் மாசடைந்த குடிநீரைப் பருகுவதாலுமே மக்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றனர் என ஊட்டச்சத்து நிபுணர்களும் மற்றும் ஏனைய ஆய்வாளர்களும் தெரிவிக்கின்றனர்.

இலாபத்தை மையமாகக் கொண்டும், பேராசையாலும் உந்தப்பட்டுச் செயற்படும் உணவுப் பொருள் வர்த்தகர்கள் ஆபத்து மிக்க காபைட், மலத்தியோன் மற்றும் போர்மலின் போன்றவற்றைப் பழங்கள் மற்றும் மரக்கறி வகைகளைப் பாதுகாத்து வைப்பதற்காகப் பயன்படுத்தி வருவதாக அறியமுடிகின்றது சிலவேளைகளில் அத்தகைய பழங்களையோ அல்லது மரக்கறிகளையோ நீரில் கழுவாமலோ அல்லது அவிக்காமலோ உட்கொள்கின்றோம். அதுவே இறுதியில் எமக்கு மரணஆபத்தை விளைவிக்கக்கூடிய புற்றுநோய் உட்படப் பல வியாதிகளுக்குக் காரணமாக அமைகின்றது.

**சன்டேரைம்ஸ் ஆசிரியத் தலையங்கம்.**

**தமிழில் ஜஸ்ரின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

24, ஒக்ரோபர் - 30 ஒக்ரோபர், 2012

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14, டெலிபோன்: 0115738005
பக்ஸ்: 0115517944 -5

E-mail: editorial@sudaroli.com

# இரட்டை வேடம்!

கடந்த முப்பது ஆண்டுகளாக இடம்பெற்று வந்த போரில் தமிழ்மக்கள் பல்வேறு ஆயுதங்களைப் பார்த்திருக்கின்றனர். துப்பாக்கிச் சன்னத்திலிருந்து விமானக்குண்டுகள், பல்குழல்எறிகணைகள், இரசாயனக் குண்டுகள் என பல்வேறு ஆயுதங்கள் தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்டன. இதனால் ஏற்பட்ட தாக்கங்கள் அழிவுகள் என்பன சொல்லிலடங்காதவை.

போர் முடிவுற்றதன் பின்னர் வேறு வகையான விடயங்கள் ஆயுதங்களாகத் தமிழ் மக்களின் இருப்பையும் அவர்களின் எதிர்காலத்தையும் நிலை குலைய வைத்துக்கொண்டிருக்கின்றன. அரசின் வார்த்தைகளும் நடத்தைகளுமே அந்த ஆயுதங்கள்.

போரின் பின்னரான காலகட்டத்தில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக பல்வேறு எதிர்பார்ப்புக்கள் தமிழ் மக்கள் மத்தியிலும் சர்வதேச மத்தியிலும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த நம்பிக்கைகள் யாவும் நாளுக்கு நாள் சரிவடைந்து கொண்டிருக்கும் நிலைமையினையே இன்று காணக் கூடியதாகவுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு எதுவும் அரசாங்கத்திடம் இல்லை என்கிற நிலையே இப்போது வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டின் ஜனாதிபதி தமிழ் மக்களின் அரசியல் பிரிச்சினைக்கு 13ஆம் திருத்தச்சட்டத்திற்கு மேலதிகமாக வழங்கவுள்ளதாக அறிவித்திருந்தார். ஆனால், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தாபய ராஜபக்ச 13ஆம் திருத்தச்சட்டத்தையே இல்லாதொழிக்க வேண்டும் எனக் கூறியிருக்கின்றார்.

ஐக்கியத்தேசியக்கட்சி உட்பட சில கட்சிகளும். அரசில் அங்கம் வகிப்பவர்கள் சிலரும் கூட கோத்தாபயவின் இக்கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். ஜே.வி.பி. உட்பட சில கடும்போக்கு கட்சிகளும் அமைப்புகளும் இக்கருத்தை வரவேற்றுள்ளன.

ஓர் அதிகாரித் தரத்திலுள்ளவர் இப்படியான கருத்துக்களை வெளியிட என்ன அதிகாரமிருக்கின்றது என்கிற கேள்விகளும் விமர்சனங்களும் கூட எழுப்பப்பட்டுள்ளன. இவ்வாறான, அரசியலைச் சிக்கலுக்குள்ளாக்கும் கருத்துக்களை தனது அதிகாரத்தையும் மீறி அவர் முன்னரும் வெளியிட்டு வந்துள்ளார். அதனையும் இப்போது போலவே எதிர்க்கட்சிகள் சில விமர்சித்திருந்தன.

யார் என்ன விமர்சித்தாலும் அவருக்கிருக்கும் 'உறவின் பலம்' அவரை இவ்வாறு துணிந்து கருத்துக்களை வெளியிட வைக்கின்றது என்பதுதான் உண்மையானதாகும். ஒரு வகையில், தனது சகோதரரான ஜனாதிபதிக்கு தனிப்பட்ட ஆலோசகராகவும் அவர் செயற்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் ஜனாதிபதி 13 பிளஸ் என்று கூறுவதற்கும், பாதுகாப்புச்செயலர் 13ஆம் திருத்தச்சட்டமே நீக்கப்பட வேண்டும் என்று கூறுவதற்கும் இடையிலுள்ள பின்னணியைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழருக்கும் சர்வதேசத்திற்கும் ஒன்றைக் கூறுவதற்காக 13 பிளஸ் என்பதை ஜனாதிபதி குறிப்பிட்டு வருகின்றார் என்றும் ஆனால் 13 இல் அவருக்கு உடன்பாடில்லை என்றும் சிலர் கூறுகின்றனர். இதனால் கோத்தாபயவின் கருத்தே அவரது நிலைப்பாடாகவும் கூட இருக்கலாம்.

13 ஆம் திருத்தச்சட்டம் மாகாணசபைகளுக்கு சில அதிகாரங்களை வழங்கியுள்ளதெனினும் தமிழ் மக்கள் அதனைத் தீர்வாக முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் அத்திருத்தச்சட்டம் தமிழ் மக்களுக்கான அதிகாரப்பகிர்விற்கு ஒரு அடிப்படையாக அமையலாம் என்கிற அபிப்பிராயம் உள்ளது. ஆனால், இச்சட்டம் நாட்டின் இறைமைக்கும் தேசியப் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலானது என கோத்தாபய விளக்கமளித்துள்ளார். இக்கருத்து இப்போது உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளதோடு, தெரிவுக்குழு என்பதையும் கேலிக்கூத்தாக்கியுள்ளது.

இக்கருத்திற்கு இந்தியாவும் தனது விசனத்தை அரசாங்கத்திற்கு இராஜதந்திர ரீதியாக வெளிப்படுத்தியிருப்பதாகவும் தெரியவருகின்றது.

எனவே, இலங்கை அரசாங்கத்தின் இரட்டை வேடத்தை இந்தியாவும் சர்வதேச நாடுகளும் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு இது ஏற்கனவே புரிந்துகொள்ளப்பட்ட ஒன்றே.

# கடனாளிகளாகிப்போன கிளிநொச்சி வர்த்தகர்கள்!




கிளிநொச்சியூடாகப் பயணிப்பவர்கள் அதன் 'காப்பெற்' வீதியின் சொகுசை இப்போது அனுபவிக்க முடியும். இரவில் மின்னொளியின் வசீகரத்தை உணரமுடியும். வீதியில் ஊர்ந்து செல்லும் நவீன வாகனங்களைப் பார்த்து இரசிக்க முடியும். அதிகரித்துக் காணப்படும் வர்த்தக நிலையங்களைப் பார்க்க முடியும். போரின்போது கிளிநொச்சிக்கு வந்தவர்களுக்கும் இப்போது வருபவர்களுக்கும் இது ஓர் பாரிய வித்தியாசமாகவே தோன்றும்.

ஆனால், இன்று கிளிநொச்சி வர்த்தகர்களும், விவசாயிகளும் கடன்காரர்களாக மாறி தலைமுடியைப் பிய்த்துக்கொண்டிருப்பது எத்தனைபேருக்குத் தெரியும்?

இறுதிப்போர் வன்னியில் வாழ்ந்தவர்களின் உயிரழிவுகளுக்கு மேலாக உடமைகள் அனைத்தையுமே விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது. மீள்குடியமர்வுக்குப் பின்னர் கிளிநொச்சி வர்த்தகர்கள் தங்கள் வர்த்தக நடவடிக்கைகளையும், விவசாயிகள் தங்கள் விவசாயத்தையும் மீளவும் மேற்கொள்வதைத் தவிர வேறு தெரிவுகள் இருக்கவில்லை. ஆனால் அவற்றைப் பூச்சியத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டிய நிலை.

இந்நிலையில் வங்கிகளில் கடன்பெறுவதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை. வங்கிகளும் கடன்கொடுத்தன. கடைகள் மெல்ல மெல்ல எழுந்தன. அழிவடைந்த கட்டடங்களைக் கட்டுவதிலிருந்து கடைகளுக்கான பொருள் கொள்வனவு வரை வங்கியில் பெற்ற கடன் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டன. ஆனால், கடைகளுக்கு கொள்வனவாளர்கள் வருவது மிகவும் குறைவாகிவிட்டது. இதனால் வங்கிகளுக்கு மாதா மாதம் செலுத்த வேண்டிய கடன் தொகையை செலத்த முடியாத நிலை வர்த்தகர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

மீள்குடியேற்றம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் மரக்காலைகளிலும் கடினப்பொருள் விற்பனை நிலையங்களிலும் சுமாரான வியாபாரம் நடைபெற்றது. நாட்கள் செல்லச்செல்ல அவையும் இப்போது குறைந்து விட்டன. மரப்பொருட்கள் விற்பனைசெய்யும் வர்த்தகத்தில் அதிகமாக தென்னிலங்கையினரே கிளிநொச்சிப்பகுதிகளில் ஈடுபடுகின்றனர். அதனால் உள்ளூர் வர்த்தகர்களுக்கு வியாபாரம் அவ்வளவாக இல்லை.

என்ன நடந்தது என்றால்...

போரின் இறுதியில் இடம்பெயர்ந்த மக்கள் ஆறுமாதங்களுக்குப் பிறகு கட்டம் கட்டமாக மீள்குடியமர்த்தப்பட்டு வந்தனர். வீடுகளெல்லாம் அழிந்துபோன நிலையில் தங்கள் காணிகளில் தறப்பாள் கூடாரங்களையும், கொட்டில்களையும் அமைத்து குடியமர்ந்தனர். இவ்வாறு அம்மக்களின் வாழ்க்கை தொடங்குவதற்கு முன்னமே வர்த்தகர்கள் பெருமளவில் கிளிநொச்சியில் குவியத்தொடங்கினர். யார் அந்த வாத்தகர்களென்றால், வெளிப்பிரதேசங்களிலிருந்து வந்தவர்கள். கிளிநொச்சியிலிருந்த கடைக் கட்டடங்களை எல்லாம் அதிக முற்பணம் கொடுத்தும், வாடகை கொடுத்தும் வாங்குவதில் அவர்கள் போட்டி போட்டனர். இதனால் உள்ளூரில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் கூட தாங்கள் முன்னர் நடத்தி வந்த கட்டடங்களையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

மீள்குடியமர்ந்த மக்களிடம் வீடோ, வருமானமோ இல்லாத நிலையில் அவர்களுக்கான கொள்வனவுகளை எவ்வாறு மேற்கொள்ளப் போகின்றார்கள் என்பதை இந்த வர்த்தகர்கள் ஆரம்பத்தில் புரிந்துகொள்ளவில்லை. அதனால் தாங்கள் எதிர்பார்த்த வர்த்தகம் நடைபெறாததால், கடைக்கட்டடத்திற்கே வாடகைக்கொடுக்க இயலாத நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இப்போது பல வெளியிட வர்த்தகர்கள் கிளிநொச்சி நகரிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடிவிட்டு வந்த இடத்திற்கே திரும்பிச்செல்லும் நிலை ஏற்பட்டுவிட்டது. சிலர் திரும்பிச்சென்றும் விட்டனர்.

கிளிநொச்சியில் வங்கிக்கடன்களைப் பெற்று திரும்பச்செலுத்த முடியாத நிலையில் சில கிளிநொச்சி வர்த்தகர்கள் அவுஸ்திரேலியா நோக்கி படகேறிவிட்டதாகவும் தெரியவருகின்றது.

இதே போல விவசாயிகள் அவர்களின் அடிப்படைத் தேவைகளுக்காக கடன்வழங்கும் நிறுவங்களின் உதவியுடன் கொள்வனவு செய்த உழவுஇயந்திரங்கள் பல குறித்த நிறுவனங்களால் திரும்பப் பெறப்பட்டு விட்டன. காரணம் கடனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலைதான். வேறு வாகனங்களை இம்முறையில் கொள்வனவு செய்தவர்களுக்கும் இதே நிலைதான்.

மீள்குடியமர்ந்த கிளிநொச்சி மக்களின் நிதி, மற்றும் கொள்வனவு சக்திக்கு அதிகமாக வர்த்தக நிலையங்கள் பெருகிவிட்டதாகவும், இதன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டதாகவும் கிளிநொச்சி வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார்.

எது எப்படியிருந்தாலும் போர்க்காலத்தில் விடுதலைப்புலிகளின் வரிப்பிரச்சினையால் கூட இப்படியானதொரு சிக்கல் எற்படவில்லை எனவும், கடன்களை அடைக்க வழி தெரியாத நிலையில் பெரும் கஸ்டத்திலுள்ளதாகவும் அந்த வர்த்தகர் மேலும் கவலையுடன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் இருப்பும், இறைமையும்

கடந்த முப்பது ஆண்டு காலமாக ஆயுதம் தாங்கிய போராட்ட இயக்கமாக விஸ்வரூபமெடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இராணுவ பலம் முற்றாக அழிக்கப்பட்டு மூன்றாண்டுகள் கழிந்துவிட்டன. இந்த மூன்றாண்டுகளில் எட்டப்பட்ட தீர்வு முயற்சிகளை மீள்திருப்பிப்பார்த்தால் அவை பூச்சியமாகவே இருக்கின்றன. புலிகள் இயக்கம் வெற்றிகொள்ளப்பட்டுவிட்டதாக அரசு மார்தட்டி கொள்கின்றபோதிலும் 'தேசிய பாதுகாப்பு' என்ற பதத்தை தனது நாளாந்த அரசியலில், பிரச்சினைகளை ஏற்படுத்தவும் சமாளிக்கவும் பயன்படுத்தப்படும் வார்த்தைப் பிரயோகமாக அரசு பயன்படுத்தி வருகின்றது.


தமிழினத்தின் அடிப்படை அரசியல் கோரிக்கைகளை உதாசீனம் செய்து தமிழ் மக்களை அடக்குவதில் சிங்கள பேரினவாதம் தொடர்ந்தும் வெற்றிகண்டு வருகின்றது. உலக நாடுகள் நீதியான இனப்பிரச்சினைத் தீர்வுபற்றி வலியுறுத்துகின்ற போதும் அபிவிருத்தி, தேசிய பாதுகாப்பு, இறைமை ஆகிய சொற்றொடர்களைப் பயன்படுத்தி அவற்றை திசைதிருப்புவதில் அதிகாரபீடம் துரிதமாகச் செயற்பட்டு வருகின்றது. புலிகள் கேட்டதை யார் கேட்டாலும் தரமாட்டம் என அரசு கடந்த காலங்களில் கூறத்தொடங்கியது. 13ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான தீர்வைக்கூட வழங்கமுடியாது என இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. அரச அதிகாரியும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தாபாய ராஜபக்ச வெட்டு ஒன்று துண்டு இரண்டாக இதனை கூறிமுடித்துவிட்டார்.

இந்த நிலையில் எந்தவித அரசியல் எதிர்காலமும் அற்ற வெறுமையில் இராணுவ சூழலிற்குளேயே வாழ தமிழ் மக்கள் நிர்பந்திக்கப்பட்டு விடுவரோ என்கிற கேள்வி எழுந்துள்ளது. இப்போது இராணுவ நிர்வாகம் சிவில் நிர்வாகத்துடன் தாக்கத்தை செலுத்துமளவிற்கு மாறியுள்ளது. இந்த சூழ்நிலையில் இராணுவத்தினரின் ஏற்றுக்கொள்ளமுடியாத நடவடிக்கைகளும் தமிழர் பிரதேசத்தில் தொடர்வதைக் காணமுடிகிறது.

காணி அபகரிப்பு, படைமுகாம் விஸ்தரிப்பு, சிங்களக்குடியேற்றம் என நாளுக்கு நாள் விரும்பத்தகாத நடவடிக்கைகள் ஒரு புற்றுநோயைப்போல தமிழர் பிரதேசமெங்கும் வியாபித்து வருகிறது. பொதுமக்களின் காணிகள், வீடுகள் பொதுக்கட்டடங்கள் என்பனவற்றில் இருந்து படைகள் வெளியேறி வருகின்றன, கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஏதுவான உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு வருகின்றன என அதிகாரபீடம் கூறிவருகின்ற போதிலும் படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற கதையாகவே தமிழர் பிரதேசங்களின் நிலையிருப்பதாக தமிழ்க்கட்சிகள் தொடர்ந்தும் தமது சுட்டுவிரல்களை அதிகாரபீடம் மீது நீட்டி வருகின்றன. தமது காணிகளை விட்டு இராணுவம் வெளியேறும்படி கோரி மக்கள் வீதியில் இறங்கி குரலெழுப்புகின்ற போதிலும் அவர்களின் கோரிக்கைகள் மீது 'பிரிவினைவாதம்', பயங்கரவாதம் போன்ற முத்திரைகளைக் குத்தும் நடவடிக்கையில் அதிகாரபீடம் இறங்கியுள்ளது. அந்த வகையில் உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் பல பிரதேசசெயலகங்கள் மூலமாக கபளீகரம் செய்யப்பட்டு வருவதாக பொதுமக்கள் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்த கோரிக்கைகளின் நிமித்தம் பல்வேறு நாடுகளும் வடக்கு, கிழக்கு பகுதியிலிருந்து இராணுவம் குறைக்கப்பட வேண்டும், சிவில் நிர்வாக நடவடிக்கைகள் எந்தவித தங்குதடையுமின்றி சுதந்திரமாக மேற்கொள்ளப்படவேண்டும் எனஅழுத்தம் கொடுத்து வருகின்றன. ஆனால் இந்த அழுத்தங்களை பயங்கரவாதம் தேசிய பாதுகாப்பு என்பவற்றைக் காட்டி அரசு மறுதலித்து வருகின்றது.

அந்த வகையில் அண்மையில் நிகழ்த்தப்பட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் உரை இதை ஆணித்தரமாக வெளிக்காட்டி உள்ளது. அலரி மாளிகையில் இராணுவச் சிப்பாய்களுக்கு வழங்கப்படும் நல ஊதியத் திட்டம் தொடர்பான நிகழ்வொன்றிலேயே ஜனாதிபதியால் இந்தக் காட்டமான உரை நிகழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த உரை ஆட்சியாளர்களின் தற்போதைய அரசியல் போக்கை அப்பட்டமாக படம் பிடித்து காட்டியிருக்கிறது.

அந்த உரையில் வடக்கு கிழக்கிலிருந்து படைகள் ஒருபோதும் அகற்றப்படமாட்டாது எனவும், சர்வதேச நீதிமன்றத்தின் முன் படையினரை நிறுத்த முயற்சிக்கும் தரப்பே வடக்கு கிழக்கிலிருந்து படையினரை அகற்றவேண்டும்



என்ற கோரிக்கையை முன்வைத்து வருகின்றது எனவும் தெரிவித்திருக்கிறார். அத்துடன் வடக்கு கிழக்கிலிருந்து படைகளை அகற்றவேண்டுமென்பதற்காக சர்வதேசத்தின் முன் படைத்தரப்பு மீது களங்கத்தை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே யாழ் நகரப்பகுதியிலும் நெல்லியடியிலும் தெல்லிப்பளையிலும் கிளிநொச்சி முல்லைத்தீவு என பல பகுதிகளிலும் மக்கள் தமது காணிகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கோரி ஆர்பாட்டங்களை நிகழ்த்திவருகின்ற நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் குறித்த உரை பற்றிய அரசியல் பின்புலம் தமிழர்களுக்கு விளங்காத புதிராக உள்ளது. அதாவது குறித்த ஆர்பாட்டத்தை நடாத்தும் மக்கள் படையினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயல்கின்றனர் என சிங்கள மக்கள் மத்தியில் காட்டுவதற்காக இந்த உரை நிகழ்த்தப்பட்டுள்ளது என்ற சந்தேகம் தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

இதேவேளை இந்நிகழ்வில் மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி யுத்தத்தை முடித்த போதிலும் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான எமது கவனம் குறைந்து விடவில்லை. நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த, செய்ய முன்வந்த தரப்பினர் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எனது அரசு உறுதியாக உள்ளது எனவும், இதேவேளை படையினருக்கு வாழ்நாள் கொடுப்பனவு ஒன்றும் வழங்கப்படவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். வடக்கு கிழக்கிலிருந்து படையினரின் நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் அகிம்சை போராட்டங்களை முன்னெடுத்துவரும் நிலையில் ஜனாதிபதியின் இவ்வுரை பாரிய சந்தேகங்களை மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே நல்லூர் பிரதேச சபை காணி இராணுவத்தால் கபளீகரம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை மும்முரமாக இடம்பெறும் நிலையில் அதை தேசிய பாதுகாப்பு என்ற லேபிளில் முடக்கிவிடுவது ஜனநாயக ஆட்சியாளர்களின் முறையான செயற்பாடா என்ற கேள்வி எழுகின்றது. இந்நிலையில் ஆர்பாட்டங்களை நடாத்தும் மக்கள் மீது கழிவெண்ணை வீசுதலும் தமது சபையின் காணியை பாதுகாக்கும் பொருட்டு நீதிமன்றம் மூலமாக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும் மக்கள் பிரதிநிதி மீது தாக்குதல் நடாத்துவதும்தான் ஜனநாயகமா? அதுவா தேசிய பாதுகாப்பு எனக்கேட்கின்றனர் மக்கள்.

இவ்வாறான குழப்பங்கள் நிகழ்ந்துவரும் நிலையில் 2013 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு தமிழ்மக்கள் மத்தியில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது. நாட்டின் மொத்தவரவு செலவு நிதியான 133 ஆயிரத்து 500 கோடியில் சுமார் 28 ஆயிரத்து 950 கோடியே 25 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பாதுகாப்பு செலவீனமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது யுத்தம் முடிந்தபோதிலும் கடந்த வருடத்தைவிட இந்த வருடம் 34 கோடி ரூபா அதிகமாக ஏன் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்வி பொதுமக்கள் மத்தியில் எழுகின்றது. வன்னி மக்கள் உண்ண உணவின்றி தங்க தறப்பாள் கொட்டகை கூட இன்றி தவித்துவரும் நிலையில், விடாது கொட்டுகின்ற மாரிமழைக்குள் அல்லலுறும் நிலையில் பாதுகாப்பு செலவீனத்திற்கு அதிகளவு நிதியை ஒதுக்குவது தமிழ்மக்கள் மத்தியில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது. மெனிக்பாம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்த மக்கள் பஸ்களில் மந்தைகள் போல் ஏற்றிவரப்பட்டு சூரியபுரம் காட்டுப் பகுதியில் தறப்பாள் கொட்டகை கூட வழங்கப் படாமல் தவிக்கவிடப்பட்டிருக்கும் நிலையில் மெனிக் பாம் மீள்குடியேற்றம் தொடர்பில் அமெரிக்கா கவலை தெரிவித்திருக்கும் நிலையில் ஐ.நா தான் பாராட்டி வெளியிட்ட அறிக்கையை வாபஸ் பெற்றிருக்கும் நிலையில் முக்கிய ஒரு விடயமாக பார்க்க வேண்டிய மீள்குடி யேற்றத்திற்கு அற்பசொற்ப நிதியை ஒதுக்கி பாதுகாப்பு, படையினர் நலன் பேணும் திட்டம், ஆயுதக் கொள்வனவு என்பவற்றிற்கு அதிகளவு நிதி ஒதுக்குவது முறைதானா எனக் கேட்கின்றனர் மக்கள்.

இதேவேளை வன்னிமக்கள் நிவாரணம் இன்றி உண்ண உணவின்றி, தவித்துவரும் போது பெரும் செலவில் ஐந்து ஆழ்கடல் ரோந்துப் போர்க்கப்பலை இலங்கை அரசு கொள்வனவு செய்யத் தீர்மானித்திருக்கிறது. இந்தக் கப்பல்கள் விரைவில் கொள்வனவு செய்யப்படும் எனவும், அவை ஆழ்கடல் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே தெரிவித்திருக்கிறார். இத்தகவலும் போரினால் பாதிக்கப்பட்டு தெருவில் விடப்பட்டிருக்கும் மக்களை மேலும் விசனத்திற்குள்ளாக்கியுள்ளது.

■ ஹரன்

எனவே அரசு கடந்த கால வரலாறுகளில் இருந்து இன்னும் பாடங்களை கற்றுக்கொள்வதாக இல்லை தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் தமிழர் நிலங்களை கபளிகரம் செய்தலும் தமிழ் மக்களை வலிந்த துயரத்துக்குள் தள்ளுவதிலுமே அக்கறையெடுத்து செயற்படுவதாகத் தெரிகிறது.

சர்வதேச அழுத்தங்களைத் தவிர்க்கும் பொருட்டு படைக்குறைப்பு நடக்கும் என்ற செய்திகளையும் பொய்க்கதைகளையும் அரசு அவிழ்த்துவிட்ட வண்ணமுள்ளது.

படைக்குறைப்பு பற்றி ஜனாதிபதியும் இராணுவப் பேச்சாளரும் தெரிவித்த முரண்பட்ட கருத்துக்கள் இதன் பின்னணியே என மக்கள் சந்தேகம் கொள்கின்றனர்.

இது தொடர்பாக அண்மையில் கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வணிக சூரிய வடக்கு கிழக்குப் பகுதியில் இருந்து இராணுவம் குறைக்கப்பட்டு வருவதாகவும் 60 ஆயிரமாக இருந்த படையினரின் எண்ணிக்கை தற்போது அங்கு 15 ஆயிரமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஜனாதிபதியும் இராணுவப் பேச்சாளரும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்களை தெரிவித்து சர்வதேச நீதியில் ஏற்படும் அழுத்தங்களை திசைதிரும்பலாம் என எண்ணுகின்றனர் எனத் தெரிகிறது.

அரசு படைத்தரப்பை வடக்கில் இருந்து குறைத்து மக்கள் அச்சமற்ற சூழ்நிலையில் வாழவும் ஜனநாயக ரீதியில் அவர்கள் செயற்படவும் வழியை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும் பாதுகாப்பு என்ற பெயரில் அதிகளவு நிதியை அள்ளியிறைக்கும் அரசு போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைகட்டியெழுப்பவேண்டும். இதுவே இலங்கை தேசத்தின் நீடித்து நிலைக்கும் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் வழிசமைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஓடிப்போனவள்

வெறும்வாயை மெல்லுபவருக்கு அவல் கிடைத்த வகைபோல, அவளின் கதை எனக்குக் கிடைத்தது.

என்ன காரணத்தினாலோ அவள் அவனை விட்டுவிட்டு வேறொருவனுடன் ஓடிப் போய் விட்டாள். எனக்கு அவளது கணவரான சிதம்பரனின் துயரம் அப்பிய முகமே நினைவுக்கு வருகிறது. வாடிய கத்தரிக்காயாகச் சுருங்கிப் போய்த் தொங் கியது அவனின் முகம். அவனின் திருமணத் தின்போதும் ஒரு குழந்தைக்குத் தந்தையாகி அவன் குதூகலித்தபோதும் மகிழ்வையே அப்பிக் கொண்ட அவனது உளத்தில் இன்று அது இல்லையென்பதை எண்ணிப்பார்க்கிறேன்.

அவன் தனது மனைவியின் மீது கொண்டிருந்த நம்பிக்கையையும் அன்பையும் நான் நன்கு அறிவேன். அவனது கடந்தகால மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை எனக்கு ஒருவகையில் பொறா மையாக இருந்தது என்னவோ உண்மைதான். அவளைப் பற்றிய என்னுடைய கணிப்பீடு திருப்தி தருவதாக இல்லை. அவளிடத்தில் தவறான ஒழுக்கங்களே இருப்பதான அபிப்பிராயமே என்னிடத்தில் இருந்தது. பலரும் குறைகூறும் வகையில் அவள் நடந்து வந்ததாகவே எனக்குத் தோன்றியது. அவளிடத்தில் நான் கொண்டிருந்த வெறுப்பான அபிப்பிராயத்தை சிதம்பரன் எனது வகுப்பு நண்பன் என்ற வகையில் அவனுக்கு இடக்கரடக்கலாகச் சொல்ல முயன்றதுண்டு. ஆனால் நான் அவ்வாறு செய்ததில்லை. சிதம்பரன் தனது மனைவி மீது கொண்டிருந்த அன்பையும் நம்பிக்கையையும் அவனது நடத்தை களும் பலவேளைகளில் அவனது வார்த்தைகளும் எனக்குக் காட்டிக் கொடுத்ததுண்டு. அவையே எனது மன எண்ணத்தை அவனிடத்திற் சொல்ல விடாது தடுத்தன. அவள் மீது நான் கொண்டி ருந்த எண்ணத்தை நிரூபிக்கும் வகையில் இப் பொழுது சிதம்பரனையும் அவனது சின்ன மகள் தேவகியையும் தனித்திருந்து ஏங்கவிட்டு அவள் வேறொருவனுடன் ஓடிவிட்டாள் என்ற உண்மை, எனக்கு இனிப்பாக இருந்தது. ஒருவகையில் என் நண்பனின் பரிதாப நிலை என்னை மனம் வருந்தச் செய்தாலும் அந்த பெண் சிதம்பரனை விட்டு விலகிய செயல் எனக்கு நல்லது போலவே பட்டது. அதற்கு அவள் மீதில் எனக்கிருந்த கோபமே காரணமாகியது.

இப்பொழுது சில தினங்களாக என்னைச் சந்திக்கும் பலரும் இவளின் கதையையே தமது பேச்சுக்களுக்கிடையே ஒருவகை ஏளனத்தோடு விசாரிப்பது போல உணர்ந்தேன். எனக்கும் அவள் பற்றிய கதையைப் பலருக்கும் ஏளனமாகச் சொல்லுவதில் ஏதோ ஒரு நளினமான திருப்தி ஏற்பட்டதாகத் தெரிந்தது. அந்தக் கதைகளால் மனத்திலும் நிறைவு காண்பதாக நான் உணர்ந் தேன்.

'தன் முதுகு ஒருபோதும் தனக்கேதான் தெரியாது' என்பது நூற்றுக்கு நூறு உண்மைதான் என்னைப் பற்றிய உண்மைகளை நான் நினைத் துப் பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. ஆனால், அவற்றை மற்றவர்களிடத்தில் மறைப் பதில் என் கவனம் நிறையவே இருக்கிறது.

இன்று சிதம்பரனை நான் சந்தித்தபோது அவனிடம் எனது கவலையைத் தெரிவிக்க வகை தெரியாது தடுமாறினேன். அவனோ தனது வேத னைகளை மௌனமாகச் சுமந்தவாறு அமைதியாக இருந்தான். அப்பொழுது அங்கே வந்து சேர்ந்த அவனது வயது முதிர்ந்த தாயார் செல்லம்மாவைக் கண்டதும் தன்னுள்ளே அடக்கி வைத்திருந்த வேதனையை வெளிப்படுத்தி விக்கி விக்கி அழுதான். செல்லம்மாவுக்கோ அவனுடன் கதைக்கவோ அவனுக்குத் தனது அரவணைப் பால் ஆறுதல் கூறவோ இயலாமல் போய்விட்டது. அவனை ஆழ்ந்த வேதனையோடு பார்த்தவள் என்னைத் தனியாக அந்த ஒதுக்கிடத்துக்குக் கூட்டிச் சென்றாள். அவள் அந்த ஓடிப்போன தனது மருமகளைப் பற்றியே குறைப்பட்டுக் கொண்டாள். அவை என் எண்ணத்துக்குச் சமமான கருத்துக்களாகவே இருந்தன. அவளது மகன் மீதிலே எந்தக் குறையும் இல்லை யென்பதாகவே தனது வார்த்தைகளை மிகவும் கவனமாக அவள் அடுக்கிச் சென்றாள்.

பாவம்! சிதம்பரன் தம்பதியருக்குப் பிறந்திருந்த நான்கு வயதேயான ஒரே மகள் தேவகி. அங்கே எதுவும் அறியாதவளாக அப்பாவின் மடியில் உட்கார்ந்திருந்தாள். துயரமே சூழ்ந்திருந்த அந்த இடத்தில் நின்றிருந்த நான் எனது உள்ளத்திலும் துயரரேகைகளை வலிந்து வரவழைத் துக் கொண்டேன். அந்தத் தாயின் வேதனைக் குமுறலைக் கேட்டுச் சிந்தனை பூகம்பமாக நான் எனது தலையை மேலும் கீழும் அசைத்துக் கொண்டேன்

"எனக்கு அவளின் போக்குகள் முன்பிருந்தே பிடிக்கிறதில்ல" "இந்தக் குழந்தையில கூட அவளுக்குச் சொட்டும் அன்பில்லை"

"சிதம்பரன் பாவம்! அவனை விட்டே எல்லா வேலை யையும் செய்விப்பாள்" "இவனுக்கு நேரத்துக்குச் சாப்பாடு குடுக்க மாட்டாள்" "அவளைப்பற்றிக் குறை சொல்லுறது இவனுக்குப் பிடிக்காது" "இப்பையும் அப்பிடித்தான் நிக்கிறான். அவளைக் குறை சொல்ல விடுகிறானில்லை"

சிதம்பரனின் தாயாரின் விமர்சனங்களையும்



விளக்கங்களையும் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு அவற்றுக்கு எதிர்வார்த்தை பேச வாய்ப்பு ஏற்படவில்லை. அத்தாயின் கூற்றுக்கள் யாவுமே சரியானவையாகவே எனக்குத் தோன்றின. ஆனால் சிதம்பரன் தனது மனைவியைக் குறித்து எவரும் குறைகூறுவதை விரும்புவதில்லை என்பதை அறிந்து நான் ஆச்சரியப்பட்டேன். இப்பொழுதாவது அவளைக் குறித்து நான் சந்தேகித்தவற்றில் சத்தியம் உண்டு என்பதை அவன் உணரமாட்டானா என்ற பார்வையுடன் அவனையே பார்த்தேன்.

திருமணத்தின்போது அவளுக்குப் பூட்டிய நகைகளையும் பின்னர் சிதம்பரன் வாங்கிக் கொடுத்த ஆடை அணிகலன்களையும் சேர்த் தெடுத்துக் கொண்டு ஓடிப்போனவள் வேறொரு வனுடன் மகிழ்ந்திருப்பாள் என எண்ணும்போதும் இந்தப் பச்சைக் குழந்தையைக் கூட எண்ணிப் பாராமல் அதையும் தவிக்க விட்டு சென்றவளை நினைக்கும்போதும் எவருக்குமே அவள்மீது ஆத்திரம் ஏற்படத்தானே செய்யும். அவ்வாறு ஆத்திரப்பட்டுத்தான் என்னத்தைக் காணப் போகிறோம்.

"அவளை இனிமேல் இங்கு காணக் கூடாது. இந்தக் குழந்தைக்கும் இவள் தாயில்லை" என்று ஆத்திரமிகுதியால் செல்லம்மாள் உரத்துச் சத்தமிட்டாள். இத்தனை மணி வேளையிலும் மௌனமாக இருந்த சிதம்பரன் "அம்மா சும்மா சத்தம் போட வேணாம் எனக்கு எல்லாம் தெரியும் நீங்க பேசாம இருங்கோ!" என்றவன் குரலில், அதற்கு மேல் எவரும் பேசுவதை அவன் விரும்பவில்லை என்பதை உணர்ந்தனர்.

ஆனாலும் "இவன் இப்பிடித்தான் அவளைப் பற்றிச் சொன்னால் துள்ளிக் குதிக்கிறான். இவன் கொடுத்த இடத்தாலதான் இந்தப்பாழாப்போனவள் இப்படிச் செய்து எங்கட மானத்தையும் வாங்கிப் போட்டாள்" என்று கொதித்தாள் செல்லம்மாள்.

சிறிது நேர அமைதியில் அங்கி ருந்த துயரங்களின் இறுக்கம் இலேசாகியதாகத் தெரிந்தது. அந்தத் தருணத்தைப் பயன்படுத் திக்கொண்டே நான் வீடு வந்து சேர்ந்தேன்.

சிதம்பரனைத் துயரத்திலும் வெட்கத்திலும் மூழ்கடித்த அவனது மனைவியின் செய்கை அவனைப் பல தினங்கள் வீட்டுக்குள்ளேயே அடைந்திருக்கத் தூண்டியது. அவன் வேலைக்கும் போகவில்லை. அவனது குழந்தை தேவகியும் அவனுடனேயே ஒட்டிக் கிடந்தது.

பசியென்று தேடி உண்ணும் விருப்பம் அவனுக்கு இல்லாதிருந்தாலும் தாயின் வற்புறுத் தலால் சில வேளைகளில் உண்பதாகக் கேள் விப்பட்டேன்.

"போனவள் போகட்டும் நீயேனடா சாப்பிடாமல்க் கிடந்து சாகிறாய் குழந்தை பாவம் உன்னால அதுவும் கிடந்து வாடுது" என்று செல்லம்மாள் ஏசித் தணிவதாகவும் அறிந்தேன். வாரங்கள் ஓரிரண்டு ஓடிப்போயிற்று

நான் அன்று வழமைபோலத் துறைமுகத்து எட்மன் தேநீர்க்கடை வாசலில் போடப்பட்டிருந்த வாங்கில் தேநீர் ஒன்றைச் சுவைத்தவாறே அமர்ந் திருந்தேன். சிதம்பரன் அங்கே வந்திருந்தான் நான் அவனது முகத்தைப் பார்த்தேன் அவனுடன் கதைக்கும்- ஏதாவது கேட்டறியும் எண்ணம் எதுவுமே எனக்கு உடனேயே தோன்றவில்லை. அவன் என்னருகிலேயே வந்தமர்ந்தான். தனக்கும் ஒரு தேநீரைக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். திடீரெனப் புலர்ந்த பொழுதாக மலர்ந்த முகத் தோடு சிரித்தான். இவனுக்கு ஏதாவது ஆகிவிட்ட தோ! என ஐயுற்றேன். அவன் என்னைப் பார்த்துச் சிரித்தான். எனக்கருகிலே மிக நெருக்கமாக உட்கார்ந்தவன் "அடே மச்சான் பிறேமா வந்திட் டாள்" என்று சிறிது சத்தமாகவே சொன்னான். நான் ஆச்சரியப்பட்டேன். அவனுடன் கதை கொடுத்துத் தொடர்ந்து அவனின் கதையைக் கேட்கவும் அச்சமாக இருந்தது. அவனது பேச்சும் செயலும் அவனது மனநிலைக்கு ஒவ்வாததாகவே எனக்குத் தெரிந்தது. அவனோ மகிழ்ச்சி பொங்க மெதுவாக மீண்டும் சிரித்தான். பிறேமா என்பது அவனது மனைவியேதான். அன்று இவனைத் தவிக்க விட்டு வேறொருவருடன் ஓடிச் சென்றவள்தான். வேறொருவருடன் ஓடிப்போனவள் திரும்பி வந்ததை இத்தனை மகிழ்ச்சியாகக் கூறுகிறானே! என்னால் நம்பவே முடியவில்லை. இவன் எப்படிப்பட்டவன்? யாராவது இவ்வாறு ஓடிப்போனவளை மகிழ்ச்சியோடு திரும்பவும் ஏற்றுக் கொள்வார்களா?

இந்தப் பிறேமாவைப் பற்றிக் கேவலமாக நானும் சிதம்பரனின் அம்மாவும் கூறிய எல்லாமே தவறானவைதானோ என்ற சந்தேகம் எனக்குள் உயர்ந்தது.

"அவள் என்னை விட்டிட்டுப் போக மாட்டாள். அவள் நல்லவள் அந்த மூதேவிதான் இவளை ஏமாத்திப் போட்டான்" சிதம்பரனின் சொற்கள் உறுதியாக ஒலித்தன. அவன் தனது மனைவியை ஏமாற்றிய அந்தப் புதிய காதலன் மீதிலேயே ஆத்திரம் கொண்டுள்ளான் என்பது தெரிந்தது. "என்ர மனிசியை அவன் ஏமாத்திப் போட்டான் மச்சான்" என்று அவன் சொன்னபோது என்னால் அதற்கு என்ன பதிலைச் சொல்வதென்றே தெரியவில்லை.

"நகைகள் எல்லாத்தையும் அவனிட்டக் கொடுத்து ஏமாந்து போனாள் மச்சான்! அவள் பாவம்!" அவன் தனது மனைவியின் செயலில் ஓர் அப்பாவித்தனத்தையே இனங்காட்டினான். எனக்குள் எழுந்து நின்ற எண்ணத்துள் அவர்களைக் குறித்த பார்வைகள் அனைத்துமே பொய் என்பதாகப் பட்டது. அவன் அவள் மீது கொண்டிருந்தது அன்பென்பதாய் எண்ணம் விரிந்தது. அவள் அவன்மீது கொண்டிருந்தது எதுவென்பு புரிவதாய் தோன்றாத நிலையில் அவளிடத்தில் இருப்பது காதலா? காமமா? எனப் பந்தயம் கட்டியது எண்ணம்! உடலுக்குள் துள்ளும் உணர்வுகளுக்கும் உயிரோடு கூடிவரும் வாழ்க்கைக்கும் எழுகின்ற போராட்டத்தில் அவன் வெற்றி கண்டுவிட்டான். அவனின் இந்த முடிவு எனக்கு ஏனோ இப்பொழுது மகிழ்வைத் தந்தது. பிறேமாவின் மீள்வருகையால் சிறுமி தேவகி குதூகலித்தாள். அவளைப் பார்த்து சிதம்பரனின் மனம் ஆறுதலடைந்தது.

நெடுந்தீவு மகேஷ்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## சிறகடிக்கும் ஆசைகள்



உன் முகத்தைப் பார்ப்பதற்கு
என் கண்களுக்கு ஆசை.
உன் குரலைக் கேட்பதற்கு
என் காதுகளுக்கு ஆசை.
உன் மேனியைத் தொடுவதற்கு
என் விரல்களுக்கு ஆசை.
உன் முகத்தைப் பெறுவதற்கு
என் இதழ்களுக்கு ஆசை.
உன் கரம் பிடிப்பதற்கு
என் கரங்களுக்கு ஆசை.
இத்தனை ஆசைகள் - என்
மனதில் கனவாக உள்ளன.
நீ என்னைக் காதலித்தால்
மட்டும் போதுமடா.
என் ஆசைகள் அனைத்தும்
நனவாகி விடும்.

சி.சுகன்யா
இராமாவில்.

## தாயால் நேசிக்கப்பட்ட தனயன் இன்று



அம்மா!
கருவில் சுமந்து - எனை
தெருவில் விட்டாய் என்று - சிலர்
பொருமிய வார்த்தைகளால்
உள்ளத்தால் கருகிப் போனாயே.

உன்னுள்
பெருகிய பாசத்தை நான்
கருத்தினில் கொள்ளாது
அன்று நான்
தெருவிலே நின்றாலும்.


இன்று
உள்ளத்தால் உருகிப்போய்
கருவி எடுத்தேனம்மா - நான்
திருந்திய போதிலும் - ஊர்
எனை கருத்திலே எடுக்கவில்லை!

நீ அன்று
பருக்கிய பால் எனை
உருப்பெற வைத்ததம்மா
இருளின் ஒளியை விளக்காய் கொண்டு
எழுதுகிறேன் உனக்காக
சில வரிகள்.

நான் எழுதிய வரிகளுக்கு
முற்றுப்புள்ளி இட முன்பே - எனக்கு
நீ விடை கொடுத்தாயே அம்மா!
இது என் பாவமா?
அல்லது வாழ்நாள் சாபமா?
விடை சொல்லம்மா.

க.ஜனுப்பிரியா
திருமலையாறு.

## ஊர் திரும்பியதன் பின்....



முற்றத்தின்
தேமா மரம்
மீண்டும்
பூக்க
ஆரம்பித்திருக்கிறது.

பச்சைக்கிளிகள்
மீண்டும் வளவின்
தென்னை
மரங்களுக்கு
வந்து போகின்றன.

நீண்ட நாட்களின்
பின், மண்டபம்
அகதி முகாமிலிருந்து
அண்ணாவின்
கடிதமும் வரத்
தொடங்கியிருக்கிறது.


எல்லாமே
மெல்ல மெல்ல
இயல்பு நிலைக்கு...

ஆனால்
அம்மா இருக்கும்
அடுப்படியும்....
தங்கச்சி
ஓடி விளையாடும்
முற்றமும்...
இப்போது
வெறுமையாய்
இருக்கிறது.

- ஆ.முல்லைதிவ்யன்.

## மாறாத தழும்பு

முள்ளிவாய்க்காலின் நினைவுகள்
முள்ளாய் என்னில் குத்துது.
ஐயோ உறவுகளே என்று - என்
உள் மனம் வீறிட்டுக் கத்துது.
சிறகு இழந்த பறவைகளும்
பசுவைப் பிரிந்த கன்றுகளும்
அலைந்தன ஊர் எல்லாம்
இழந்தன உறவெல்லாம்
தனிமரமாய் பட்டமரமாய்
எல்லோர் நெஞ்சையும் தொட்டரணமாய்
சிதறுண்டு கிடக்கின்றன.
கூழாங் கற்கள் போல்
ஓர் நாள் அத்திவாரக் கற்களாக
மாறுவோம் என்ற நம்பிக்கையில்.



ம.அவிந்தன்.

## குண்டுச்சட்டி

வித்தகக்கவிகள்
விபச்சாரக்கவிகள்
விபரீதத் கவிகள்
நடிப்புக்கவிகள்
நவ நாகரீகக் கவிகள்
கைதட்டல் கவிகள்
கவியரங்கக்கவிகள்
சுட்டபழக்கவிகள்
சுடாத திமிர்க் கவிகள்

இப்படி எத்தனையோ
இடியப்பச் சிக்கல்க் கவிகள்
நாட்டுக்கும் உதவாத
வீட்டுக்கும் உதவாத
நல்ல கவிஞர்களே
நீங்கள் தான்
தமிழின் சாபக்கேடு

பலருடைய
விழிப்பினையும்
விடியலையும்
ஒரே நாளில் திருடி
உலக அரங்கில்
இடம் தேடுகிறீர்கள்

வாழ்த்துக்கள்
உங்கள் க(லி)விப் பயணம்
தொடரட்டும்.

க.யோகேஸ்வரன்
யாழ்.பல்கலைக்கழகம்.

## சூரிய இரவுகள்



கரைகின்ற கண்ணீர்த் துளிகள்
கன்னங்களில்
சரித்திரம் வரைந்ததுவோ?
பெண்களின் வாழ்க்கை
பொம்மைகளாய் மாறி
பாவிகளின் கையில்
சிக்கிக் கொண்டனவோ?
விடியல்கள் எம்வாழ்வில்
விளக்கேற்ற வருமென
பெண்ணினம்
எதிர்பார்த்தனவோ? - ஆனால்
அவர்களின் வாழ்வின்
விடியல்கள் மட்டும்
சூரிய இரவுகளாய்...?

லிந்தா.வி

## யதார்த்தம்



வர வர பொருட்கள் விலை
மலை யேற்றம். இதனை
மட்டுப் படுத்த முடியாமல்
அதிகாரத் தடுமாற்றம்.
தலைமேல் ஏறும் சுமையால்
பொதுமக்கள் திண்டாட்டம்!

எதிர்க் கட்சிகளுக்குள் தொடரும்
எதிரும் புதிருமான
போராட்டம். இதனால்
அதிகார மையத்திற்கு
கொண்டாட்டம். பொதுவில்

இயல்பு வாழ்க்கையை
எதிர்பார்த்த மக்களுக்கு
முகவாட்டம்!

பல்டியடிக்கும் அரசியல்
பச்சோந்திகள் பாடு
பல வகைகளிலும் கொண்டாட்டம்
அல்லல் சுமக்கும்
அப்பாவிப் பொதுமக்களுக்கே
இக்காலம் தள்ளாட்டம்!

சேனையூரான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**24.10.2012 - 30.10.2012**




**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

பணிவு என்பது தோற்றத்தில் இருந்தால் மட்டும் போதாது செயலிலும் இருக்க வேண்டும் என்ற பொன்மொழியை உணர்ந்த நீங்கள் முன்கோபத்தை தவிர்க்கப்பாருங்கள். குடும்பத்தில் நிம்மதியின்மை, பிள்ளைகளால் அலைச்சல், தந்தைக்கு உடல் நலக்குறைவு என வரக்கூடும். புதிய பாதையில் பயணிக்கும் வாரமிது.




**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

சேமித்து வைப்பதில் தேனீக்களைப் போலவும், செலவழிப்பதில் ஒட்டகத்தைப் போலவும் குணம் கொண்ட நீங்கள், சரியென பட்டதையே செய்வீர்கள். மனத்தைரியம் கூடும். அரசாங்க வேலைகளில் இழுபறி நிலை ஏற்படும். உறவினர் பகை, நண்பர்களுடன் மனத்தாங்கல் வரக்கூடும். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். மனந்தளராது போராட வேண்டிய வாரமிது.




**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

சீர்திருத்தம் செய்வதில் சிறந்த சிற்பிகளான நீங்கள் தடைபட்ட சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். வீட்டில் கல்யாணப்பேச்சு வார்த்தைகள் முன்னேற்றம் தரும். திடீர் பயணங்களால் அலைச்சலுண்டு. அண்டை வீட்டாரின் அன்புத் தொல்லை வரும். கொஞ்சம் பொறுத்திருந்து செயல்பட வேண்டிய வாரமிது.




**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

பிரச்சினைகளைக் கண்டு அலட்டிக்கொள்ளாத உங்களுக்கு, நேர்மறை எண்ணங்கள் விலகும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். உறவினர்கள், நண்பர்கள் உதவுவார்கள். யாத்திரை பயணங்கள் திருப்திகரமாக அமையும்.பணப்புழக்கம் அதிகரிக்கும். திட்டமிட்டு எந்த ஒரு செயலையும் செய்வீர்கள். எதிர்பார்ப்புகள் யாவும் நிறைவேறும் வாரமிது.




**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

செய்நன்றி மறவாத உங்களுக்கு, அரசால் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வீடுகளில் பயணிப்பதால் உங்களின் புத்திசாலித்தனம் வெளிப்படும். பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். அம்மாவின் உடல்நிலை சீராகும். சகிப்புத் தன்மையால் சாதித்துக் காட்டும் வாரமிது.




**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த தாயின் அருமை பெருமைகளை அறிந்த நீங்கள், பணவரவு திருப்திகரமாக அமையும். பிரச்சினை, கண் எரிச்சல், பார்வைக் கோளாறு வந்து செல்லும். வீடு, மனை சேர்க்கையுண்டு. துவண்டு போகாமல் துடிப்புடன் செயல்படும் வாரமிது.




**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

தொழிலில் திறமையுடையவனாக இருப்பது, ஒரு கோட்டையின் தலைவனுக்குச் சமம். என்று உணர்ந்தவர் நீங்கள், இளைய சகோதரிக்கு நல்ல வரன் அமையும். முன்கோபம், அடிவயிற்றில் வலி, தலைச்சுற்றல், செரிமானக் கோளாறு வரக்கூடும். சிலரின் உள்மனதை உணரும் வாரமிது.




**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

உடுத்தும் உடையையும், உள்ளிருக்கும் மனசையும் வெள்ளையாக வைத்துக் கொள்ளும் புது வேலை கிடைக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிள்ளைகளின் அடிமனதிலிருக்கும் ஆசைகளை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். மனநிம்மதியுடன் செயல்படும் வாரமிது.




**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

சோர்வு தட்டாமல் எந்த ஒரு செயலையும் அசாத்தியமாகச் செய்யும் திறன் உடைய நீங்கள் தடைபட்ட காரியங்களை முழுமுயற்சியுடன் முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை கட்டுப்படுத்துங்கள். மகளுக்கு எதிர்பார்த்தபடி நல்ல வரன் அமையும். சாமர்த்தியமான செயல்திறனால் சாதிக்கும் வாரமிது.




**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

தோல்வி கண்டு ஒரு போதும் துவண்டு போகாத உங்களுக்கு, குடும்பத்தில் அவ்வப்போது நிலவிவந்த குழப்பமெல்லாம் நீங்கும். கணவன்-மனைவிக்குள் தாம்பத்யம் இனிக்கும். வரும் பணத்தை சேமிக்கத் தொடங்குவீர்கள். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். புத்துணர்ச்சி பெருகும் வாரமிது.




**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

எங்கும் எப்போதும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியான வழிமுறையில் சாதித்துக் காட்டும் நீங்கள் எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவிக்கு இருந்த கர்ப்பப்பைக் கோளாறு நீங்கும். உடன்பிறந்தவர்களால் மகிழ்ச்சி தங்கும். கிடைத்ததை வைத்து சுகமடையும் வாரமிது.




**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சகதியில் கல்லை விட்டெறிந்தால் அது தன் மேலேதான் தெறிக்கும், என்பதை உணர்ந்த நீங்கள் வீண் பேச்சை குறையுங்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். தொண்டைவலி, சளித் தொந்தரவு, இரத்த அழுத்தம் வரக்கூடும். மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகள் எடுக்க வேண்டாம். தட்டுத்தடுமாறி கரையேறும் வாரமிது.

## எளியவர்களையும் நேசிப்போம்



ஒரு செல்வந்தரின் வீட்டில் மிகப்பெரிய விருந்து நடக்க இருந்தது. அவரது வீட்டில் ஏராளமான பாத்திரங்கள் இருந்தன. அதில் ஒன்றான தங்கப்பாத்திரம் அவரை அழைத்து, "நான் ஒளியாய் பிரகாசிக்கிறேன். என் மதிப்போ மிகப்பெரிது. நான் எல்லாவற்றையும் சரியாய் செய்கிறவன். என் அழகும், என் ஜொலிப்பும் மற்ற எல்லோரைக் காட்டிலும் மிஞ்சியது. உம்மைப்போன்ற எஜமானர்களின் கௌவுரவத்தை பொன் பாத்திரமாகிய நானே காப்பாற்றுவேன்," என்றது.

அந்தப் பாத்திரத்திற்கு பதில் ஏதும் சொல்லாது செல்வந்தர் அதை தாண்டிச் சென்றார். அப்போது ஒடுக்கமான, உயரமான வெள்ளிப் பாத்திரத்தை பார்த்தார். அது அவரிடம், "நான் உம்மையே சேவிப்பேன். உமக்கும், உம் விருந்தினர்களுக்கும் திராட்சை ரசத்தை ஊற்றித் தருவேன். நீர் உண்ணும்போது என்னைப் பார்த்துப்பார்த்து பெருமைப்படலாம். நான் உமக்கு நிச்சயமாக பாராட்டுதலை பெற்றுத் தருவேன்," என்றது.

அதையும் தாண்டிச் சென்றார் செல்வந்தர்.

இப்போது, வெண்கல பாத்திரம் அவரை மறித்தது. எஜமானே! நான் மஞ்சள் நிறமாக பளபளப்புடன் அமர்ந்திருக்கிறேன். என்னைத் தட்டினால் இனிய இசை எழும். என்னையே இந்த விருந்திற்கு பயன்படுத்துங்கள்," என்று கேட்டது. அதற்கும் செல்வந்தர் பதில் சொல்லவில்லை.

இதையடுத்து, பளிங்கு பாத்திரம், மரப்பாத்திரத்தையெல்லாம் செல்வந்தர் பார்த்தார். அவையும் தங்கள் சிறப்புகளை எடுத்துக்கூறின. ஆனால், எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு செல்வந்தர், களிமண் பாத்திரத்தின் அருகில் வந்து பரிவோடு பார்த்தார். அது ஏக்கத்துடன் அவரைப் பார்த்தது. எதுவும் பேசவில்லை. செல்வந்தர் அந்த பாத்திரத்தை எடுத்துச் சென்று மேஜையில் வைத்தார்.

"உன்னைத்தான் நான் தேடிக்கொண்டிருந்தேன். உன்னை என் உபயோகத்திற்கு வைத்துக்கொள்வேன். பெருமை பாராட்டிக்கொள்ளும் பாத்திரங்கள் எனக்குத் தேவையில்லை. அலுமாரியில் அலங்காரமாக வைக்கவே அவை பயன்படும்.

உன்னையே நான் விருந்துக்குப் பயன்படுத்திக் கொள்கிறேன்," என்று சொல்லி அந்த பாத்திரத்தை மென்மையாகத் தூக்கி சுத்தம் செய்து, உணவை நிரப்பினார்.

'பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளை தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார்.' என்று பைபிளில் ஒரு வசனம் வருகிறது.

இதன் கருத்து என்னவென்றால், உலகில் யாரும் சளைத்தவர்கள் அல்ல. அவரவருக்கென ஒரு சிறப்பம்சம் இருக்கத்தான் செய்கிறது. எனவே, எளியவர்களை ஒதுக்காமல் அவர்களையும் நேசிக்கக் கற்றுக்கொள்வோம்.

## பெண்களுக்கு அழகு எது?



- ★ பயனில்லாத பொருள்களை நாம் தூக்கி எறிவது போல், பயனற்றவர்களின் அன்பையும் உதறித் தள்ளுவதே அறிவுடைமை.
- ★ ஒருவர் பலமுறை கூறி, அதன் பின் செயலைச் செய்து முடிப்பது பண்பாகாது. தானே தனது கடமையைச் செய்ய வேண்டும்.
- ★ பெரியோர் இருக்குமிடத்தில் பேசும் போது நம் வாதங்களை, முகத்தில் அடித்தால் போல் நிதானமிழந்து கூறுவதை தவிர்க்க வேண்டும்.
- ★ கணவனைக் காத்தல், வீட்டைக் காத்தல், அறத்தைக் காத்தல், அன்பைக் காத்தல் என நல்லனவற்றைக் காப்பதே பெண்ணுக்கு அழகு.
- ★ தீயவனவற்றைக் காப்பாற்றக் கூடாது, அவை அழிவுக்கு காரணமானதாகும், நல்லனவற்றையே காத்தல் நம்மையும் ஒரு பொருட்டாக உலகம் மதிக்க வழி ஏற்படுத்தித் தரும்.
- ★ நல்ல நூல்கள் கூறும் கருத்துக்களையும், பெரியோர் கூறும் அறிவுரைகளையும் உள்ளத்தில் வைத்து காத்தல் வேண்டும்.

– ஔவையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகில் சுற்றுலா

உண்மைச் சம்பவம்

**36** வயதான லிசா கொலராடோ நகரத்தில் வசித்து வருபவள். அவள் கணவரான மைக்றீகன் ஓர் பொறியியலாளர். அவர் பணிபுரியும் நிறுவனத்தினால் விசேடத் திட்டமொன்றின் கீழ் சேவையாற்றுவதற்காகத் தென்னாபிரிக்க நாடொன்றிற்கு அண்மையில் அனுப்பப்பட்டிருந்தார்.

லிசாவிற்கு மொத்தத்தில் நான்கு பிள்ளைகள். மூத்தவளான மிரிஸ்லாவுக்கு 16 வயது. இரட்டைப் பிறவிகளான மரியா மற்றும் மடொன்னா இருவருக்கும் 7 வயது. கடைக்குட்டியான ஒஸ்ரினுக்கு வயது 6 நிரம்பியிருந்தது. மூத்தவளான மிரிஸ்லா உயர்தரக் கல்லூரியொன்றின் விடுதியில் தங்கிக் கல்வி பயின்று கொண்டிருந்தாள். ஏனைய மூவரும் வீட்டிற்கு வெகு அண்மையிலுள்ள பாடசாலையில் கல்வி கற்கின்றனர்.

இரண்டாம் தவணை பாடசாலை விடுமுறைக்கான நாள் நெருங்கிக்கொண்டிருந்தது.

வருடாவருடம் பாடசாலை விடுமுறை நாட்களை இனிதாகப் பொழுது போக்குவதற்காகப் பிள்ளைகள் சகிதம் லிசாவும் கணவரும் எங்கேயாவது உலாச் செல்வது வழமையானதொன்று. விடுமுறையும் நெருங்கிக் கொண்டிருந்தமையால் பிள்ளைகளும் லிசாவை நச்சரிக்கத் தொடங்கிவிட்டனர்.

அடுத்த வாரமே விடுமுறைக்காகக் கல்லூரிகள் மூடப்பட்டதும் மிரிஸ்ஸாவும் கல்லூரி விடுதியிலிருந்து வீட்டிற்கு வந்து விடவே, அனைத்துப் பிள்ளைகளும் லிசாவை ஓய்ந்திருக்க விடவில்லை. கணவரின் துணை இம்முறை இல்லாதது அவள் மனதை நெருடியது. எனினும் பிள்ளைகளின் தவிப்பைத் தவிர்க்க இயலாது போகவே, லிசா கணவருடன் தொலைபேசி மூலம் தொடர்பு ஏற்படுத்திப் பிள்ளைகளின் ஆசையை வெளிப்படுத்தினாள். மைக்கும், தன்னால் வர இயலாதுள்ளதால் பிள்ளைகளைக் கவனமாக எங்காவது கூட்டிக் செல்லும்படி தெரிவித்தார்.

முன்னர் சென்ற இடங்களை விடுத்து இம்முறை ஓர் புதிய சூழ்நிலையில் உள்ள இடத்திற்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்ல விரும்பினாள் லிசா.

நாவாஜோ ஏரியைப் பற்றி அவளது நண்பிகள் அடிக்கடி புகழ்ந்து கூறுவதை அவள் பல தடவைகள் கேட்டிருந்தாள். ஆனால் ஒருமுறையும் அவர்கள் அங்கு சென்றதில்லை. கொலராடோவுக்கும் மெக்சிக்கோவிற்குமான எல்லையில் அமைந்திருந்தது. நவாஜோ ஏரி. கொலராடோவில் இருந்து 150 கி.மீற்றர் தொலைவில் 56 கி.மீற்றர் நீளத்திற்கு எல்லையின் இருபுறங்களையும் தழுவியபடி அமைந்திருந்தது நவாஜோ ஏரி. அண்மைக் காலமாக நவாஜோ ஏரி பொழுதுபோக்கிற்கான ஓர் சிறந்த இடமாக அனைவராலும் பேசப்பட்டு வந்தது. ஏரி விசேடமாகப் படகுச் சவாரி செய்வதற்கும் நீர்ச்சறுக்கல் விளையாட்டிற்கும் ஏற்றதாக அமைந்திருந்ததே அதற்கான காரணங்களாகும். அத்துடன் ஏரியின் இருமருங்கிலும் கூடாரங்களை அமைத்துத் தங்கக்கூடிய விதத்தில் சோலைகளான நிலப்பரப்பும் அமைந்திருந்தமையும் அவ்வேரிக்கு மெருகூட்டியது.


எனவே இம்முறை நவாஜோ ஏரிக்கே செல்வதென முடிவெடுத்த லிசா அதற்கான ஆயத்தங்களில் முழுமூச்சுடன் இறங்கினாள். ஆகக் குறைந்தது நான்கு நாட்களாவது அங்கு தங்க வேண்டி நேரிடுமாதலால் தேவையான ரின்னில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்களையும் போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பான வகைகளையும் மற்றும் பிஸ்கட் வகைகளுடன் பயணத்திற்கு அதிமுக்கியமான எடைகுறைந்த கண்ணாடி நுண்ணிழைகளிலான (Fiberglass) இயந்திரம் பொருத்தப்பட்ட படகினையும் தங்குவதற்கான உருண்டை வடிவிலான கூடாரமொன்றையும் அத்துடன் காற்று நிரப்பிப் பயன்படுத்தும் மெத்தைகள், தலையணைகள் போன்றவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்தித் தயார் நிலையில் வைத்துக் கொண்டாள் லிசா.

அன்று ஓர் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலேயே அனைவருமே எழுந்துவிட்டனர். ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்ட பொருட்கள் அனைத்தும் அவர்களுக்குச் சொந்தமான ஓர் பெரிய காரில் ஏற்றப்பட்டன. இயந்திரப் படகு காரின் கூரையில் ஏற்றப்பட்டது. காலை உணவை முடித்துக் கொண்டு 9 மணியளவில் காரில் புறப்பட்டனர். லிசா காரினை நிதான வேகத்துடன் செலுத்திய வண்ணம் இருந்தாள். பிள்ளைகள் நால்வரும் காரினுள் கும்மாளமடித்துக் கொண்டிருந்தனர். மூத்தவளான மிரிஸ்லா பதினாறு வயதானவளானாலும் உடல்வளர்ச்சியில் சற்று வயதிற்குக் கூடியவளாகக் காணப்பட்டாள்.

நவாஜோ ஏரியின் எல்லையை பிற்பகல் இரண்டு மணியளவில் சென்றடைந்தனர். லிசா முதல் தடவையாகவும், கணவரின் துணையுமின்றிப் பிள்ளைகளுடன் அங்கு செல்வதாலும் அங்குள்ள சுற்றுலா மையத்துடன் தொடர்பு கொண்டு நவாஜோ ஏரி, அதன் சுற்றாடல் பகுதிகள் பற்றிய தேவையான சகல தகவல்களையும் ஏற்கனவே அறிந்து வைத்துக் கொண்டாள். அத்துடன் ஏதும் அவசரத் தேவை அல்லது உதவி கோரும் பட்சத்தில் 911 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளும்படியும் லிசாவுக்கு அறிவுறுத்தப்பட்டது.

ஏரிக்கரையில் உள்ள சிறுகுடா போன்ற இடத்தை லிசா தங்குவதற்குத் தெரிவுசெய்தாள். லிசா கூடாரம் அமைப்பதற்குத் தெரிவுசெய்யப்பட்ட இடம் ஏரியின் நீர் எல்லையில் இருந்து 150 மீற்றர் அளவு தூரத்தில் இருந்தது. காரிலிருந்து அனைத்து பொருட்களும் தரையில் இறக்கிவைக்கப்பட்டன. படகினை பிள்ளைகளுடன் சேர்ந்து இழுத்துவந்து ஏரி நீரில் இறக்கி சாலையில் இருந்த மரமொன்றுடன் கயிற்றால் கட்டிவைத்தனர்.

இப்பொழுது கூடா ரத்தை அமைப்பதில் அனைவருமாக ஈடுபட்டனர். மிரிஸ்லா உயர்நிலைக் கல்லூரியில் கல்வி பயின்றதால் அவளுக்குக் கல்லூரியில் சாரணியர் படைப்பிரிவில் கூடாரமடித்தல், முதலுதவி அளித்தல் தீயணைப்பு போன்றவற்றில் பயிற்சி பெற்றிருந்தாள்.



கூடாரத்தை நிறுவி ஏனைய சகல பொருட்களையும் ஒழுங்குபடுத்திக் கூடாரத்திற்குள் வைத்து முடிந்தபோது மாலை 6 மணியாகிவிட்டது.

கதிரவனும்தன்உறைவிடத்திற்குச் சென்றுவிட்டான். இருள் சூழத் தொடங்கியது. மரச் சோலை களின் பக்கமிருந்து பறவைகளின் ஒலிகள் கேட்டவண் ணமிருந்தன. இரவு உணவை முடித்துக்கொண்டனர்.

சிறுவனான ஒஸ்ரினைத் தவிர ஏனைய நால்வரும் காற்று நிரம்பிய மெத்தைகளில் சாய்து படுத்தவாறு தம்முள் அளவளாவிக்கொண்டிருந்தனர். பயணக்களைப்பினால் ஒஸ்ரின் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தான்.

இரவு 10மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென இடி மின்னலுடன் கடும் மழை கொட்டத் தொடங்கியது. போதாக்குறைக்கு பலமான காற்றும் வீசத் தொடங்கியது. தூக்கத்திலிருந்தவர்கள் திடுக்கிட்டு எழுந்தனர். காற்றின் வேகம் கூடாரத்தை தூக்கியெறியும் போலத் தோன்றியது. கூடாரத்திற்கு ஆதாரமாக ஊன்றப்பட்டிருந்த கம்பித் தூண்களை லிசாவும் மிரிஸ்லாவும் இறுகப்பற்றிப்பிடித்து அவை நிலத்தில் இருந்து பிடுங்கி எறியப்படாத வண்ணம் அழுத்திப் பிடித்தவாறு இருந்தனர். மழையும் காற்றும் பயங்கரமாக நர்த்தனமாடின.

பிள்ளைகள் அனைவரும் லீசாவைச் சுற்றிவர இருந்து அவளை அணைத்தபடி குளிரினால் விறைத்தும் பயத்தினால் நடுங்கியும் கொண்டிருந்தனர்.

இரவாகையால் பெய்த கடும் மழையால் ஏரியில் நீர்மட்டம் உயர்ந்துவிட்டது. வீசிய கடும் காற்றின் வேகத்திற்குத் தாக்குப்பிடிக்க ஏலாது போகவே, கரையில் மரத்துடன் படகைக் கட்டியிருந்த கயிறும் அறுந்து படகு ஏரி நீரில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அதுமட்டுமன்றி கூடாரத்தின் பிளாஸ்ரிக் துணியும் காற்றின் வேகத்தால் அலங்கோலமாகக் கிழிக்கப்பட்டு மழைநீர் கூடாரத்திற்குள் புகுந்து கொண்டது. கூடாரமிருந்த தரைப்பகுதியெங்கும் சேற்றுச் சகதியானது குழந்தைகள் அனைவரும் தெப்பமாக நீரில் நனைந்து போயினர். முகம் கை கால்கள் என உடலெங்கும் சேற்றில் அப்பிப் போயின. சிறுவனான ஒஸ்ரின் குளிரில் விறைத்து அவனது உடல் மரக்கட்டைபோல் உணர்வற்றுச் செயலிழந்து மூச்சுவிடுவதற்குப் பெரிதும் கஸ்ரப்பட்டான்.

ஒன்றரை மணித்தியாலங்கள் அளவில் மழையும் காற்றும் தமது தாண்டவத்தை நிறுத்தின. ஒருவாறு பொழுது விடிந்தது. ஒஸ்ரினின் ஆபத்தான நிலைமையே லிசாவுக்கு அதிகளவில் பதற்றத்தை ஏற்படுத்தியது. அதற்கு வலுவூட்டுவது போல லிசா விடிந்ததும் கூடாரத்தை விட்டு வெளியே வந்து ஏரிக்கரையில் மரத்துடன் கட்டி வைக்கப்பட்டிருந்த படகின் பக்கம் பார்வையைச் செலுத்தியவள் அங்கே படகின் அறிகுறியைக் காணாதது அவளை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

எனினும் ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக்கொண்டு [illegible] ஒஸ்ரினை மருத்துவ மனையொன்றிற்கு கொண்டுசென்றுவிடலாம் எனக்கருதி காரினை நிற்பாட்டியிருந்த இடத்திற்குச் சென்றாள். அங்கு அவளுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி காத்திருந்தது.

கார் நிறுத்தப்பட்டிருந்த நிலம் மழைநீரால் சதுப்பும் சகதியுமாக மாறி காரின் நான்கு சில்லுகளும் சற்றும் வெளியே தெரியாதவாறு நிலத்தினுள் புதையுண்டிருந்த நிலையில், கார் காட்சியளித்தது. காரை வேறெந்த வாகனத்தின் உதவியின்றி வெளியே இழுத்தெடுக்கவே முடியாது.

அதிர்ச்சியடைந்தவளாகப் பிள்ளைகள் இருந்த இடத்திற்குப் பாய்ந்து விரைந்தாள். அங்கு பயத்தாலும் குளிராலும் பிள்ளைகள் தேம்பியழுதவண்ணம் இருந்தனர். மிரிஸ்லா ஒருத்தியைத் தவிர. அவள் சற்றே வயது வந்தவளாக இருந்தமையாலும் கல்லூரியில் முதலுதவி குறித்து ஏற்கனவே அறிந்திருந்தமையாலும் மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்த ஒஸ்ரினை மடியில் கிடத்தியவாறு அவனது மார்பினைப் பிசைந்து கொடுத்துக்கொண்டும் அதேவேளையில் இடையிடையே அவளது வாயினைச் சிறுவனின் மெல்லிய உதடுகளில் வைத்து ஊதியபடி ஒட்சிசனை உட்செலுத்திய வண்ணம் இருந்தாள்.

இதனைக் கண்ணுற்ற லிசா ஓரளவு தென்படைந்து மிரிஸ்லாவைத் தொடர்ந்தும் அப்படியே செய்து கொண்டிருக்கும்படி கூறிவிட்டுத் தனது கைத்தொலைபேசிமூலம் சுற்றுலாமையத்தினால் அவசர உதவி கோரவென வழங்கப்பட்டிருந்த எண்ணுடன் தொடர்புகொள்ள முயற்சித்தாள். காலநிலை சீரற்றிருந்தமையால் முயற்சிகள் பலனளிக்கவில்லை. எனினும், மனந்தளராது பல தடவைகள் முயற்சித்த பின்னர் ஒருவாறு தொடர்பு கிடைத்தது. லீசா "ஆபத்திலுள்ளோம் உதவிக்கு உடன்வாருங்கள்'' எனக் கூறியதும் அங்கிருந்து "நீங்கள் யார்? எங்கே இருந்து கதைக்கின்றீர்கள்" என்ற மறுமுனையில் இருந்து வந்த கேள்விக்குப் பதிலளிக்க முன்னரே தொலைபேசியின் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. லிசாவுக்கு அழுகையே வந்துவிடும் போல இருந்தது. மகனைக் காப்பாற்ற வழியே இல்லையா எனக் கதற வேண்டும் போலத் தோன்றிற்று அவளுக்கு.

எனினும் நம்பிக்கையை இழக்காது தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்த முனைந்தாள். அதிஸ்டவசமாக ஒருவாறு தொடர்பு கிடைத்தது. இருக்குமிடத்தைத் தெரிவித்து அவசரமாக உதவி தேவைப்படுதை விளக்கிக் கூறினாள்.

எனினும் அவசர உதவிப் பிரிவினர் அவர்களது படகில் குறிப்பிட்ட இடத்தை வந்தடையும்போது நடுப்பகலைத் தாண்டியிருந்தது. ஒரு விநாடிதன்னும் தாமதிக்காது அங்கிருந்து 15 கி.மீ. தூரத்தில் உள்ள ஆர்போலீஸ் மரீனா எனும் இடத்தில் அமைந்திருந்த படகுத்துறைக்கு அனைவரையும் ஏற்றிச் சென்றனர். அங்கிருந்து அம்புலன்ஸ் வண்டியில் ஒஸ்ரின் டென்வர் மருத்துவமனைக்கு விரைந்து கொண்டுசெல்லப்பட்டான்.

ஒஸ்ரினைப் பரிசோதித்த டென்வர் மருத்துவமனையின் பிரதம மருத்துவரான அலென் ஸ்ரீபன் சிறுவனின் மோசமான உடல் நிலைமையினை புரிந்து கொண்டு, ஆயினும் பதற்றமடையாது அந்நிலையிலும் கூடச் சாமர்த்தியமாகச் சிறுவனுக்கு இடைவிடாது செயற்கைச் சுவாசம் மூலம் முதலுதவி அளித்தபடியே வந்த மிரிஸ்லாவை மெச்சினார்.

ஒஸ்ரின் தொடர்ந்து 21 நாட்களாக டென்சர் மருத்துவ மனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்துச் சிகிச்சையளிக்கப்பட்டான்.

வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட இயந்திரப்படகும் ஏரியில் இருந்து மீட்கப்பட்டது. புதையுண்ட நிலையில் இருந்த காரினையும் இயந்திரப் படகினையும் வீடுகொண்டு வந்து சேர்த்தாள் லிசா.

எத்தனை வருடங்களானாலும் லிசாவால் அவளது மகன் ஒஸ்ரினின் உயிரைப் பலி எடுக்க முயன்ற இயற்கையில் கோரத் தாண்டவத்தின் திகலூட்டும் அனுபவத்தை மறக்கவே முடியவில்லை.

தமிழில் - ஜெகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்மறையான எதிர்கொள்ளல்

எதிர்மறையான எதிர்கொள்ளலை எந்தச் சூழ்நிலையிலும் கையாளலாம். மனசுக்குப் பிடித்தமில்லாத சூழ்நிலைகளில் இது மிகவும் பலன் தரக்கூடியது.

உதாரணம் மூலம் இதை விளக்கலாம்.

யாரேனும் ஒருவர் அல்லது ஏதேனும் ஒரு நிகழ்ச்சி உங்களுக்கு எரிச்சல் மூட்டினால், நீங்கள் சினம் கொள்வீர்கள் என்பது தானே எதிர்பார்க்கப்பட்ட எதிர்கொள்ளல்?

இந்த விவகாரத்தில் நீங்கள் சிரித்து விடுவதுதான் எதிர்மறையான எதிர்கொள்ளல்.

**சினத்தைவிட எதிர்மறையான எதிர்கொள்ளலான சிரிப்பு மிகுந்த பலனைத் தருகிறது** என்பதை மகிழ்ச்சிகரமாகக் கண்டுபிடிப்பீர்கள். சினம் பகைமையாக, குரோதமாக வளரும். சிரிப்போ சூழ்நிலையின் இறுக்கத்தைத் தணிக்க உதவும். ஆனால் சிரிப்பு பிறரை அவமதிக்கிற ரீதியில் தூண்டுதலாக அமையக் கூடாது. யாரையும் புண்படுத்தாத விதத்தில், உங்கள் நகைச்சுவை உணர்வை எடுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும்.

ஒரு பழைய, உண்மையான, நிரம்பிய ஞானத்துடன் கூடிய வார்த்தை இருக்கிறது.

'உங்களுக்கு எது நேருமாயினும் சிரிப்பின் மூலம் அதை நீங்கள் வென்று விடலாம்.'

வேறு ஒரு சொல் வழக்கு: நீங்கள் ஒரு சூழ்நிலையில் திட்டவோ, சிரிக்கவோ வேண்டுமென்றால் சிரிப்பையே தேர்ந்தெடுங்கள்.

வாழ்க்கையின் அசௌகரியங்கள், உறுத்தல்கள் ஏற்கப்பட வேண்டும். எரிச்சல் காட்டும் எதிர்கொள்ளல் மூலம் அல்ல; எதிர்மறையான எதிர்கொள்ளலான நகைச்சுவை உணர்வின் மூலம்.

லிங்கன் சொன்னார்: ஒரு மனிதனின் மகிழ்ச்சி அவன் மனத்தின் சுபாவத்திற்கு ஏற்ப அமைந்துள்ளது. நீங்கள் மகிழ்ச்சியாய் இருப்பது என்று மனத்தளவில் தீர்மானித்து விட்டால், பிடித்தமில்லாத சூழ்நிலைகளைச் சமாளிக்க எதிர்மறையான எதிர்கொள்ளலான இனிமையையே கையாள வேண்டும். இல்லையென்றால் நீங்கள் மகிழ்ச்சியை இழக்க நேரிடும். உங்களைச் சுற்றி உள்ளவர்களும் அவர்கள் மகிழ்ச்சியை இழப்பார்கள். மகிழ்ச்சி போலவே மகிழ்ச்சி அற்ற தன்மையும் தொற்றிக் கொள்ளக் கூடியது.

**குற்றம் சாட்டுவதற்குப் பதிலாக எதிர்மறையான எதிர்கொள்ளல் பாராட்டி விடுவது.** உண்மையான பாராட்டின் மூலம் நீங்கள் புகார்களையும் வெளிப்படுத்தலாம். உங்களால் அது முடியும். யோசித்துப் பாருங்கள்.

கொடூரமான பழக்கத்திற்கு எதிர்மறையான எதிர்கொள்ளல், பரிவுடன் கூடிய புரிந்து கொள்ளல் தான். (உண்மையான நல்லெண்ணத்துடன் கூடிய விதத்தில்)

விமர்சனத்திற்கு நாம் எதிராளி எதிர்பார்க்கும் விதத்தில் எரிச்சலைக் காட்டக் கூடாது. மாறாக விமர்சனத்தில் அடங்கி இருக்கிற நல்லபடியான அறிவுரைக்கு நாம் மனப்பூர்வமான பாராட்டுத் தெரியப்படுத்த வேண்டும்.

எதிராளியிடத்தில் பழகும் போது எதிர்மறையான எதிர்கொள்ளலை எப்படிக் கையாள வேண்டும்? அவருக்கு ஒரு சகாயம் செய்ய முன் வரவேண்டும். நல்லெண்ணம் பெறுவதற்காக மட்டுமல்ல; ஆதரவான நட்புறவை ஏற்படுத்த, எதையும் எதிர்பாராமல்.



உங்கள் முதுகுக்குப் பின்னால், யாரோ ஒருவர் உங்களைப் பற்றி தவறாகப் பேசுவார் என்றால், அவரிடத்தில் எதிர்மறையான எதிர்கொள்ளலை எப்படி நிறைவேற்ற வேண்டும்? அவர் முதுகுக்குப் பின்னால் நீங்கள் அவரைப் பற்றி நல்ல முறையில் பேசுங்கள். இந்தச் செய்தி உங்கள் எதிராளி காதில் விழுந்ததும் அவர் குணாதிசயம் எப்படி மாறுகிறது என்பதை நீங்கள் ஆச்சரியத்துடன் கண்டறிவீர்கள்.

இப்படி எதிர்பாராத எதிர்மறையான எதிர்கொள்ளல்களை வாழ்க்கையில் எங்கெங்கு கையாள வேண்டும் என்பதற்குக் கொடுக்கப்பட்ட உதாரணங்களே போதுமானவை.

நீங்கள் இந்த மாதிரியான எதிர்கொள்ளல்களைச் சரியான சந்தர்ப்பத்தில் பயன்படுத்த வேண்டும்.

உங்கள் வாழ்க்கையில் எது உருவாகிறது.

1. **உங்களை விமர்சிப்பவர் தனக்குள் சேர்த்து வைத்திருக்கும் உணர்ச்சிகளை வெளிக்காட்டுகிறார்.** எரிச்சல், கோபம், பயம், பொறாமை, ஏதேனும் ஒன்றை.

நீங்கள் ஒதுக்கித் தள்ளுங்கள். அத்தகைய விமர்சனங்களை வெளிப்படுத்துவதன் மூலம் அவர்கள் தங்களை சுத்தமாக்கிக் கொள்ளுகிறார்கள். தங்களைப் பாதிக்கக் கூடிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதன் மூலம் அவர்கள் உங்களை மனோதத்துவ மருத்துவராக்குகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு நல்லது செய்ததாய் நினைத்து ஒதுக்குங்கள்.

உங்களை குறியாய் வைத்ததில் அவர்களுக்கு ஏதோ மனோதத்துவ ரீதியான சந்தோஷம் கிட்டியிருக்கிறது. அதை நீங்கள் மறந்து விடுங்கள். இது நேர்ந்தாலும், நான் இந்த அத்தியாயத்திலும் முந்தைய அத்தியாயங்களிலும் சொல்லியிருக்கிற ஐந்து எதிர்கொள்ளல்களில் ஏதேனும் ஒன்றைக் கையாளுங்கள்.

நீங்கள் எந்த எதிர்கொள்ளலைத் தேர்ந்தெடுக்கிறீர்கள், அதை எவ்வளவு பயனுள்ள வகையில் பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் வாழ்க்கையில் வெற்றிகள் பெருகும்; மகிழ்ச்சி உண்டாகும்.

நேரடியான விமர்சனத்தைவிடப் பலன் தரும் மனோதத்துவ வழிமுறைகளை நீங்கள் கையாளலாம். ஆனால் பிறர் உங்களை விமர்சிக்கக் கூடும்.

எனவே விமர்சனத்தால் பாதிக்கப்படாமல் உதவி பெறுவது எப்படி என்பதை நாம் ஆராய்வோம்.

முதலில் பாதிப்பு அம்சத்தை நீக்க முயல்வோம்.

நமது அகந்தை (சுய கௌரவம் அல்லது தற்பெருமை) பாதிக்கப்படுவதால் உணர்ச்சிகள் பாதிக்கப்படுகின்றன.

உணர்ச்சி பாதிக்கப்படும் போது, நாம் உணர்ச்சி வசப்படுகிறோம். விமர்சனத்தை உணர்ச்சிபூர்வமாய் அணுகாமல் இருப்பதே இத்தகைய பாதிக்கப்பட்ட உணர்வு நிலைக்கு ஆளாகாமல் இருக்கும் வழி. எரிச்சலோ, கோபமோ கொண்டு உங்களையே நீங்கள் வருத்திக் கொள்ளாதீர்கள்.

விமர்சனம் உங்கள் அகந்தையை நொறுக்கியது என்றால் அகந்தை இன்னும் கெட்டிப்பட வேண்டும் என்று பொருள். விமர்சனம் சரியானது என்று கூடச் சொல்லலாம்.

இவை பொதுவான விஷயங்கள். குறிப்பிட்ட விஷயங்களுக்கு வருவோம்.

விமர்சனம் கீழ்க்கண்ட மூன்று விஷயங்களில் ஏதேனும் ஒரு காரணத்தினாலோ அல்லது [illegible] அலசி ஆராய வேண்டிய விஷயமல்ல.

2. **உங்களை விமர்சித்து சுக்கு நூறாக்குவதின் மூலம் விமர்சகர் தன்னை உயர்த்திக் கொள்ள விரும்புகிறார் போலும்.** உங்களைக் கிழிப்பது மட்டுமே அவருடைய நோக்கமாகவும் இருக்கலாம். தம்மை மிக முக்கியமானவராக, தாக்க முடியாதவராக அவர் விமர்சனத்தின் மூலம் தோற்றம் கொடுக்க விரும்புகிறார் போலும்.

சிலர் விமர்சனத்துடன் கீழ்க்கண்ட வரிசைகளையும் சேர்ப்பார்கள். 'நான் சொல்வது உன் நன்மைக்கே. அவர்களிடத்தில் எச்சரிக்கையாக இருங்கள்' (அவர் தம் அகந்தையைத் திருப்தி செய்ய உங்களை விமர்சிக்கிறார். இது முட்டாள்தனமானது) இன்னும் சிலர் வேறு விதமாகச் சொலவார்கள்: 'நான் உன்னை நேசிப்பதால் தான் விமர்சிக்கிறேன்' அப்படியா? சரி, விமர்சித்து விளங்கச் செய்வானேன்? நேசிக்கிறவருக்கு வலி ஏற்படுத்தாமல் உதவலாம். வழி காட்டலாம், போதிக்கலாம். (நேசிக்கா விட்டாலும் ஒருவரிடத்தில் அன்பாகப் பழகி விஷயத்தைத் தீர்த்துக் கொள்ளலாம்.)

உங்களை ஏதோ காரணத்திற்காகக் கீழே தள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் விமர்சிப்பவர் உங்கள் விரோதி - நீங்கள் அவரை அப்படியே நினைத்துப் பழக வேண்டும். சில மீன்கள் வாயையே ஆயுதமாகப் பயன்படுத்தி இரையை பிடிக்கும். அப்படிப்பட்ட நபர்கள் அவர்கள்.

ஆனால் விரோதியின் விமர்சனம் நண்பனின் விமர்சனத்தை விட நேரடியாக, ஒளிவு மறைவில்லாமல், சரியாய்க் கூட இருக்கும். உங்கள் சுய விமர்சனத்தை விடவும் சரியாய் இருக்கும்.

பிரெஞ்சு அறிஞர் ராகிஃபௌகால்ட் எழுதினார். 'நம்முடைய அபிப்பிராயங்களை விட நம்முடைய விரோதிகளின் அபிப்பிராயங்கள் நம்மைப் பற்றிய உண்மையை உள்ளடக்கியவை.' நம்மை விடவும் தீவிரமாக நம் விரோதிகள் நம் தவறுகளைக் கண்டுபிடிக்கத் தயார் நிலையில் இருக்கிறார்கள். **விரோதியிடம் நீ ஒதுங்கி இரு; ஆனால் உன்னைப் பற்றிய அவர் விமர்சனத்தைக் காது கொடுத்துக் கேள்:**

உங்களுக்கு வேண்டாதவரோ, உங்கள் பகைவரோ உங்களை விமர்சிக்கும் போது-

1. முதலில் விமர்சனத்திலிருந்து உணர்ச்சிகளைக் களைந்து விடுங்கள் - உங்கள் உணர்ச்சிகள், பகைவரின் உணர்ச்சிகள் இரண்டையும்.

2. விமர்சனத்தை அதன் தகுதி அடிப்படையில் தர்க்க ரீதியாகச் சார்பில்லாமல் எடை போட்டுப் பாருங்கள். உங்கள் நண்பர்கள் கூட சொல்லத் தயங்கும் திருத்தங்களை அது உங்களுக்கு எடுத்துக் காட்டலாம்.

எதிராளி அல்லது விரோதியின் விமர்சனத்திலிருந்து நீங்கள் மதிக்கத்தக்க உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் எரிச்சல், சினம் போன்ற உணர்ச்சிகளால், உங்கள் நியாய உணர்ச்சி சேதமடையக் கூடாது. அப்பொழுதுதான் இது நிறைவேறும்.

3. விமர்சனம் நல்ல அறிவுரையே - சர்க்கரைத் தடவப்படாதது.

விமர்சனம் மிகவும் உதவக் கூடியது. நீங்கள் விரும்பி அதை வரவேற்க வேண்டும்.

நீங்கள் எதிர்பார்க்கும் முடிவுகள் கிடைக்கப் பெறாவிட்டால் சூழ்நிலையை விமர்சன ரீதியாக அலசிப் பாருங்கள். உங்கள் பங்கு பற்றிச் சிறப்பாக ஆராயுங்கள். உங்கள் நியாயவாதத்தில் நம்பிக்கை வைக்காதீர்கள். ஏனென்றால் உங்கள் தோல்வியை ஒப்புக்கொள்ள உங்கள் அறிவு தயங்காது. விஷயம் தெரிந்த பிறரைக் கலந்து ஆலோசியுங்கள். எது தவறு என்றும் குறிப்பாக உங்கள் பங்காக என்ன தவறு செய்கிறீர்கள் என்றும் அவர்கள் சரியாக விளக்குவார்கள்.

செய்யும் உத்தியோகத்தில் பாதுகாப்பை உணர்ந்த அநேக ஊழியர்கள் எங்கு தவறு செய்கிறோம் என்று தங்கள் எஜமானரை நேரடியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். எப்படித் திருந்த முடியும் என்று புரிந்து கொண்டு தங்கள் வேலையை சிறப்பாகச் செய்து, தான் பணிபுரியும் ஸ்தாபனத்திற்குத் தங்களை இன்றியமையாதவர்களாக ஆக்குவதன் மூலம் தங்கள் வேலையைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


இப்படிப்பட்ட ஊழியர்களை எந்த எஜமானரும் வீட்டுக்கு அனுப்ப மாட்டார். மாறாகப் பதவி உயர்வு தருவார்கள்.

பிறர் புகழ்ச்சியால் அழிந்து போகும் சாதுவான மனிதனாக இருப்பதைக் காட்டிலும் காரசாரமாக விமர்சனத்தினால் காப்பாற்றப்படும் தைரியசாலியாக இருங்கள்.

விமர்சனம் நன்கு பலனளிப்பதே. சொல்பவர், கேட்பவர் பற்றிய உணர்ச்சிச் சிக்கல்களை நீக்கிப் பார்த்தால், உணர்ச்சிச் சிக்கல் - சில வேளைகளில் அழிவுக்கு வகை செய்யும் நோக்கம் - இவை நாம் விமர்சிக்கப்படும் போது நம்மால் ஏற்க முடியாத அனுபவமாக்குகிறது.

அறுவைசிகிச்சையும் ஏற்க முடியாத அனுபவம் தான். ஆனால் தேவை என்று வரும் போது அது நம்மைக் காப்பாற்றுகிறது. அறுவை சிகிச்சை போலவே விமர்சனமும் சங்கடத்தின் ஆணிவேரை நீக்க உதவலாம். இத்தகைய அறுவை சிகிச்சை குணப்படுத்தும். ஆனால் விமர்சனத்தை விமர்சிக்காதீர்கள்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கறிகளால் உருவாக்கப்பட்ட ஓவியங்கள்...

**16**ஆம் நூற்றாண்டில்
காணப்பட்டதாக கூறப்படும் ஓவிய முறையை ஞாபகப்படுத்தும் வகையில் புகைப்படக் கலைஞர் ஒருவர் காய்கறிகளைக் கொண்டு ஓவியம் வரைந்துள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரைத் தளமாகக் கொண்டு இயங்கி வரும் கலன் என்ரிகிவ் ஜோ்ட் என்ற புகைப்பட கலைஞரே இத்தகைய ஓவியங்களை வரைந்து பார்வையாளர்களைத் தனது ஓவியத்தால் கவர்ந்துள்ளார். பூக்கள், காய்கறிகள், இறைச்சி மற்றும் பழங்களைக் கொண்டு இவ் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.






## சிற்றிடை அழகியாக இங்கிலாந்து நெரினா



மிகவும் சிற்றிடை கொண்ட பெண் என்ற பெருமையை இங்கிலாந்தைச் சேர்ந்த 22 வயதான நெரினா ஆர்டன் என்பவர் பெற்றுள்ளார்.

இந்தப் பெண் தனது இடையின் அளவை கார்செட் எனப்படும் விசேட உடையை அணிந்து அதன் மூலம் குறைத்துள்ளாராம். தொடர்ந்து கார்செட்டை அணிந்து இப்படி குறுகிய இடையைப் பெற்றுள்ளாராம் நெரினா. 5 அடி 4 அங்குலம் உயரம் கொண்ட இவரது இடையின் அளவு 15.7 அங்குலம் ஆகும். அதாவது 39.9 சென்ரிமீற்றர் ஆகும்.

இந்த அளவு போதாது என்றும் இன்னும் சுருங்கச் செய்து 14 அங்குலம் என்ற அளவுக்கு தனது இடையைச் சுருங்கவைக்கப் போவதாகவும் இவர் கூறியுள்ளார்.

இவர் தற்போது உலக சாதனையையும் நெருங்கி வருகிறார்

## ஏன் இந்தத் திருட்டுத்தனம்!..




குழந்தை ஒன்றிற்கு தாயான பெண் ஒருவர் விலையுயர்ந்த திருமண ஆடையினைத் திருடிய வேளை கமெராவில் அகப்பட்டுக் கொண்டார்.

ஏறத்தாழ 5,000 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான ஆடையைத் திருடிய பெண்ணைக் கைது செய்வதற்காக கமராவில் பதிவான காணொளியின் உதவியுடன் அமெரிக்காவின் நியூஜேர்சி பொலிசார் வலைவீசி வருகின்றனர்.

## ஒளியின் வேகத்தைக் கடந்து உலக சாதனை படைத்தார் பெலிக்ஸ்



விண்வெளியிலிருந்து குதித்த வீரர் பெலிக்ஸ் பௌம்கார்ட்னர் வெற்றிகரமாக பூமித் தரையைத் தொட்டு உலக சாதனை படைத்துள்ளார். ஆஸ்திரிய பாய்ச்சல் வீரர் பெலிக்ஸ் பௌக்மார்ட்னர் தனது ஏழு வருட கடும் பயிற்சியின் பின்னர், பூமியின் ஓட்டிலிருந்து அதாவது விண்வெளியிலிருந்து பூமித்தரையை நோக்கி ஒற்றைமனிதராகக் குதித்து உலக சாதனை படைத்துள்ளார். விண்வெளியிருந்து குதித்ததும், அவரது பார்வை மட்டும் சிறிது மங்கலானதாகக் கீழே வந்து கொண்டிருந்த போது கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அனுப்பினார்.

சாதனையை முடித்த பின் பெலிக்ஸ் கூறுகையில், இது எனது ஏழுவருட உழைப்பு, எனது மிகப்பெரும் கனவு என்று தெரிவித்தார்.

பௌக்மார்ட்னரின் உலக சாதனைகளில் பின்வருவன பதிவாகியுள்ளன.

1. அவர் குதித்த போது ஒரு கட்டத்தில் அவர் பயணித்து கொண்டிருந்த அதியுயர் வேகம் 1.342 km/h என உறுதிப்படுத்தப்பட்டதால், Free Fall (தன்னிச்சையாக விழுதல்) மூலம் ஒலியின் வேகத்தை கடந்த முதல் மனிதன் எனும் மாபெரும் சாதனை.
2. உலகின் அதி உயரத்திலிருந்து குதித்த மனிதர் (120, 000 அடிக்கு மேல்).
3. பாரசூட் அல்லது பலூனில் அதிக உயரத்திற்கு சென்ற மனிதன் (120,000 அடிக்கு மேல்).
4. உலகில் தனி ஒரு மனிதருக்காக உருவாக்கப்பட்ட மிகப்பெரிய பலூன் (550 அடி உயரம் [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ரூ. 2 கோடிக்கு (இந்திய) ஏலம் போன ஜேம்ஸ் பாண்ட் கார்!

திரைப்படங்களில் ஜேம்ஸ்பாண்ட் பயன்படுத்திய பொருட்கள் லண்டனில் ஏலத்தில் விடப்பட்டன. இதில் பல்வேறு ஜேம்ஸ்பாண்டுகள் பயன்படுத்திய உடைகள், வாட்சுகள், பேனா, கார்கள் உள்ளிட்ட பொருட்கள் அனைத்தும் ஏலம் விடப்பட்டன. ஆஸ்டன் மார்டின் கார் ரூ. 2.08 கோடி ரூபாய்க்கு ஏலம் போனதாக ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது.

## பொங்கலுக்கு தள்ளிப்போகிறது ரஜினி படம்



'கோச்சடையான்' படம் குறிப்பிட்ட சில காட்சிகளுக்கான கிராபிக்ஸ் பணிகள் லண்டனில் நடைபெற உள்ளது. இதன் காரணமாக படத்தை டிசம்பரில் திரையிட முடியாது என பட வட்டாரங்கள் கூறுகின்றன. படத்தின் பாடல் சீடி வெளியீட்டு விழாவை ஜப்பானில் நடத்த திட்டமிட்டுள்ளனர். இந்த விழாவே டிசம்பரில்தான் நடைபெறும் எனக் கூறப்படுகிறது. இதையடுத்து படத்தை 2013 பொங்கலுக்கு ரிலீஸ் செய்ய சவுந்தர்யா யோசித்துள்ளாராம்.

## ஒரு நாளில் நடக்கும் கதையில் பார்வதி



மலையாளத்தில் 'டிராபிக்' என்ற பெயரில் வந்த படம் தமிழில் 'சென்னையில் ஒரு நாள்' என்ற பெயரில் தயாராகிறது. இந்தப் படத்தில் நடிக்கிறார் 'பூ' பட நாயகி பார்வதி.

## வில் வித்தையில் அசத்திய அனன்யா..



தமிழில் 'நாடோடிகள்' படம் மூலம் நடிக்க வந்தவர் அனன்யா. இவர் வில்வித்தைப் போட்டியிலும் கை தேர்ந்தவர். தற்போது வில்வித்தைப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். கொச்சியில் நடந்த மாநில அளவிலான வில்வித்தைப் போட்டியில் கலந்து கொண்ட அனன்யா, முதலிடத்தைப் பிடித்து தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.



## ஆபாசக் காட்சிகளில் நடிக்கவும் தயாரான ஜெனிலியா!



திருமணத்துக்கு முன்பு கோடு போட்டுக் கொண்டு நின்றவர், இப்போது அதைத் தாண்டி விட்டார். அதாவது, கிளாமர் என்பதை கடந்து ஆபாசமாக நடித்து வருகிறார். இந்த செய்தி ஆந்திராவின் மசாலாப் பட டைரக்டர் களுக்கு பெரிய இன்ப அதிர்ச்சியாக அமைந்து விட்டது. அதனால் இளவட்ட நடிகைகளை புக் பண்ணி வைத்திருந்த வர்கள்கூட இப்போது ஜெனிலியாவின் தரிசனத்துக்காக அவர் பக்கம் சாய்ந்திருக்கிறார்களாம். அதனால் பல படங்களை கைப்பற்றி பிசி நடிகையாகி விட்டார் அம்மணி.

## பட விழாவுக்கு ஸ்ரேயாவுடன் வந்த சல்மான் ருஷ்டி!!

லண்டனில் நடந்த பட விழாவுக்கு நடிகை ஸ்ரேயாவுடன் போய் நின்று அனைவரது பார்வையையும் ஸ்ரேயா மீது விழ வைத்துள்ளார் எழுத்தாளர் சல்மான் ருஷ்டி.


## அதர்வா நடிப்பு சூப்பர்

பட ஷூட்டிங் முடியும் வரை பட ஸ்டில்ஸை வெளியிடாத பாலா, தற்போது ஸ்டில்களை வெளியிட்டுயிருக்கிறார். அதில் அதர்வா, சாக்குப் பையை சட்டையாக போட்டுக் கொண்டு, ஒரு விதமான முடி கட்டுடன் இருக்கிறார். 'முப்பொழுதும் உன் கற்பனை' படத்தில் மிகவும் அழகாக இருந்த அதர்வாவா இது என்ற அளவுக்கு இருக்கிறது அவரது கெட்டப்.

கெட்டப் எப்படியிருந்தாலும் பாலா படத்தில் நடித்தால் நடிப்பு சூப்பராக வந்து விடும் என்பது தான் உண்மை.. இந்தப் படம் நிச்சயம் தமிழ் சினிமாவிற்கு நல்ல பெயரை தரும் என்று எதிர் பார்க்கலாம்.




## நடிகை திரிஷா பாய்ச்சல்



நடிகை திரிஷா பெயரில் ஏற்கனவே இணையத் தளத்தில் மோசடி நடந்தது. பேஸ்புக், டுவிட்டரில் தான் இல்லை என்று அவர் மறுத்து இருந்தார். இத்தகைய மோசடி பேர்வழிகள் மீது திரிஷா கடுமையாக பாய்ந்துள்ளார். "சினிமாவில் இருப்ப வர்கள் பெயரில் பேஸ்புக், டுவிட்டரில் மோசடிகள் நடக்கின்றன. ரசிகர்கள் தங்கள் கருத்துக்களை அவற்றில் பதிவு செய்து ஏமாறுகின்றனர். இத்த கைய மோசடியில் ஈடுபடும் பயந்தாங்கொள்ளிக ளுக்கு பாடம் புகட்ட வேண்டும்". என்கிறார் திரிஷா.

## துப்பாக்கி ஸ்டைலிஷ் ஆக்ஷன் படம்



"மும்பை நகரில் வாழும், ஒரு தமிழ் இளைஞன் சந்திக்கும் பிரச்சினைதான் கதை. அந்த பிரச்சினையிலிருந்து, அவன் எப்படி மீண்டு வருகிறான் என்பதே க்ளைமாக்ஸ். அமைதி தவழும் மும்பையின், இன்னொரு கொடூர முகம் தான் இந்த 'துப்பாக்கி'. இது அதிரடி ஆக்ஷன் படம். அதை ஸ்டைலிஷாக படமாக்கியுள்ளேன். அதனால், இப்படம் வித்தியாசமாக இருக்கும். அதோடு, விஜய் ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கும் வகையில், அவரை புதுமாதிரியாக காண்பிக்கிறேன்" என்கிறார் இயக்குநர் முருகதாஸ்,

குப்ப
ஜமீ




டிக்கெட்
விலை உ
ஆதரிக்

பிக்கி அ
நாள் மா
நடைபெற்
இவ்வமை
நடிகரும
'சினிமா டிக்
உயர்வை
மற்றும்
இன்றைய
தெரியா
சினிமாை
கொண்டு
என்று
பாடுப
இருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குப்பத்து நடிகையான ஜமீன் பெண்

விரைவில், திரைக்கு வரவிருக்கும் 'காசிக்குப்பம்' படத்தின் நாயகி சவும்யா. மும்பை பெண்ணான இவர், இதில் சேரியில் வாழும் பெண்ணாக நடிக்கிறார். "நான் ஜமீன் குடும்பத்தைச் சேர்ந்தவள். இந்தப் படத்தில், சேரிப்பெண்ணாக நடிக்க வேண்டியிருந்ததால், சென்னையில் உள்ள குப்பத்தில், சில நாட்கள் தங்கியிருந்து, சேரி மக்களின் நடை, உடை, பாவனைகள், பேச்சு வழக்கு போன்றவற்றை கற்றுக் கொண்டேன். குப்பத்து ஜனங்களோடு நெருங்கிப் பழகினேன். தமிழ் பட வாய்ப்புகள் அதிகம் வருகின்றன. சில்க் ஸ்மிதா போல பெயரெடுக்க ஆசையாக உள்ளது" என்றார்.





## குத்துப் பாட்டை விரும்பும் நடிகை சமீரா ரெட்டி.

பிரகாஷ் ஜா உருவாக்கத்தில் தயாராகி வரும் 'சக்ரவியூக்' என்ற இந்திப் படத்தில் ஒரு குத்துப் பாட்டுக்கு ஆடியுள்ளார் சமீரா. இதுகுறித்து அவர் கூறுகையில், குத்துப் பாடல்களுக்கு ஆடுவது என்பது பெருமையான ஒன்றாக மாறியுள்ளது. அதில் ஆடும்போது தனி கௌரவம் கிடைக்கிறது. உரிய அங்கீகாரமும் கிடைக்கிறது. எனவே குத்துப்பாடல்களுக்கு ஆடுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை என்கிறார் சமீரா.




## ...க்கெட்டுகளின் ...லை உயர்வை ...தரிக்கிறார் கமல்

...க்கி அமைப்பின் இரண்டு ...ள் மாநாடு சென்னையில் ...பெற்றது. விழாவில் பேசிய ...வமைப்பின் தலைவரும், ...கருமான கமல்ஹாசன், ...மா டிக்கெட்டுகளின் விலை ...ர்வை நான் ஆதரிக்கிறேன் ...ற்றும் தமிழ் சினிமாவின் ...றைய நிலை பற்றி எனக்கு ...தரியாது. ஆனால் தமிழ் ...மாவை உலகதரத்திற்கு ...காண்டு போக வேண்டும் ...ன்று தான் தொடர்ந்து ...பாடுபட்டு கொண்டு ...ருக்கிறேன்' என்றார்.

## சினிமா விமர்சனம்




சயின்டிஸ்ட் சச்சினுக்கு ஒட்டிப் பிறக்கின்றன இரட்டை குழந்தைகள். உருவம் இரண்டு, இதயம் ஒன்று. இதில் அகிலன் ஜாலி ஆள். விமலன் பொது நல சிந்தனையோடு வளர்கிறார். காஜல் அகர்வாலுக்கு, விமலன் மீது காதல். இவர்கள் வாழ்க்கையில் வில்லனாக வருகிறார் தந்தை. அவர் நடத்தும் பால் பவுடர் தொழிற்சாலையில் தவறான கிரியா ஊக்கிகளை பயன்படுத்துவது தெரிய வருகிறது. அவரது பால் பவுடர் ரகசியங்கள் அறிந்தவர்கள் மற்றும் தொழில் எதிரிகளை போட்டுத்தள்ள, தனி கூலிப்படை வைத்திருக்கிறார்.

இது காஜல் அகர்வால் தோழியான வெளிநாட்டு பெண் பத்திரிகையாளர் மூலம் தெரிய வருகிறது. அவரையும் கொலை செய்கிறார். வெளிநாட்டு பெண்ணிடம் இருக்கும் ரகசியம் அடங்கிய பென்டிரைவ் விமலன் கைக்கு வருகிறது. இதனால் தந்தைக்கு எதிராக நிற்கிறார் விமலன். ஆத்திரமடையும் தந்தை, மகனிடம் உள்ள பென்டிரைவை கைப்பற்ற அடியாட்களை அனுப்புகிறார். இந்த மோதலில் விமலன் இறந்து விட, அவர் இதயம் அகிலனுக்கு பொருத்தப்பட்டு தனி மனிதனாகிறார். தன் சகோதரன் சாவுக்கு காரணம் தந்தை என்பதை அறிந்து கொதிக்கிறார். அவரது பால் பவுடர் ரகசியம் தேடி மூலப்பொருள் அனுப்பும் ரஷியாவுக்கு செல்கிறார். அங்கு அவருக்கு உலகை உலுக்கும் ரகசியங்கள் கிடைக்கிறது. அது என்ன? அகிலன் தந்தையை வென்றாரா? என்பது மீதி கதை.

ஒட்டிப் பிறந்த இரட்டையர்களாக சூர்யா. ஒட்டிக்கொண்டு அருகருகே இருந்தாலும், வெவ்வேறு முகபாவம், குரல், மேனரிசம் என்று ஒவ்வொரு ஃபிரேமிலும் கடின உழைப்பால் ஆச்சர்யப்படுத்துகிறார் சூர்யா. சகோதரன் விமலனுக்கு காதல் பாடம் நடத்துவதாகட்டும், பெண்களிடம் சீண்டி விளையாடுவதிலாகட்டும், தந்தையிடம் மோதுவதிலாகட்டும், இரட்டையரில் அதிக மார்க் அள்ளுகிறார் அகிலன். நான் ஒரிஜினல், இவன் ஜெராக்ஸ்', அவன்கிட்ட இதயம் இருக்கலாம், என்கிட்ட ஈரம் இருக்கு' என டைமிங் வசனங்களாலும் விளாசுகிறார். விமலன் வழக்கமான நல்ல பையன். காஜலுடன் காதல் வரும்போது, சொல்ல தயங்குவது, அப்பாவின் அக்கிரமம் கண்டு பொங்குவது என்று அகிலனுக்கு எதிரான கேரக்டர்.

பாசக்கார அப்பாவாக இருந்து படுபயங்கர வில்லன் அவதாரம் எடுக்கும் சச்சின் கெடேகரின் நடிப்பு அபாரம். என் சோதனையில உருவான ஃபெயிலியர் சைல்ட் நீ' என்று மகன் மீது வெறுப்பை உமிழ்வதில் இருந்து அவரது வில்லத்தனம் அத்தனையும் புதிது. காஜல் அகர்வாலுக்கு அதிக வேலை இல்லை. ஆனால் அவர் முதலில் காதலிப்பது விமலனை. ஆனால் அவர் இறந்து அகிலன் பிழைக்க, எந்த கவலையும், உறுத்தலும் இல்லாமல் அகிலனை காதலிப்பது எப்படி என்றுதான் புரியவில்லை. அதேபோல ஒட்டிப் பிறந்த சகோதரனின் மறைவு அகிலனைக் கூட அவ்வளவாகப் பாதிக்காதது ஆச்சர்யம்.

இடைவேளை வரை சுவாரஸ்யமாகக் கதை சொன்னவர்கள், பிறகு கதையை ரஷியாவுக்கு கடத்தி சென்று ராணுவம், ஒலிம்பிக், சர்வதேச சீக்ரெட் என ஜேம்ஸ்பாண்ட் பட ரேஞ்சுக்கு பில்டப்புகளை கொடுத்து காமிக்ஸ் புக் வாசிக்கும் உணர்வைத் தருகிறார்கள். தந்தை குற்றவாளி என்பதற்கு போதிய ஆதாரங்கள் இங்கேயே கிடைத்தும் ரஷியாவரை, காஜலை இழுத்துக் கொண்டு சூர்யா போவது ஏன்? இரட்டையர்களின் உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்காததால் அவர்களை பிரிக்கும் காட்சிகள் நெகிழ்வை ஏற்படுத்தாமல் சாதாரணமாக கடந்து செல்கிறது. பின் பகுதியில் சொல்லப்படும் ஒலிம்பிக் கதையும் கிளைமாக்சில் தந்தை சொல்லும் விஞ்ஞான கதையும் தலைசுற்ற வைக்கிறது.

சௌந்தர்ராஜனின் ஒளிப்பதிவு பிரமாண்டம். ஹாரிஸ், இசையில் பாடல்கள் முணுமுணுக்கவைக்கின்றன. ஆனால் கே.வி.ஆனந்த்-ஹாரிஸ் கூட்டணியில் நிகழும் மாயாஜாலம் இதில் மிஸ்சிங்.



## இனி தமிழிலும் கிளாமர் தான்



'கழுகு' படத்தில் சிங்கிள் ஹீரோயினாக நடித்த பிந்துமாதவி, தற்போது, நடித்து வரும், 'சட்டம் ஒரு இருட்டறை', 'கேடிபில்லா கில்லாடி ரங்கா', 'இருவர் உள்ளம்' ஆகிய படங்களில், இரண்டு ஹீரோயின்களில் ஒருவராக நடித்து வருகிறார். "இந்தப் படங்களில், நடிக்கும் சக நடிகைகளுக்கும், எனக்கும் இணையான வேடம் என்ற போதும், பர்பாமென்ஸ் அடிப்படையில், அவர்களை எளிதில் ஜெயித்து விடுவேன்" என்கிறார் அவர். அதோடு, "இதுவரை தெலுங்கில் மட்டுமே கிளாமராக நடித்த நான், இப்போது தமிழிலும் அதே ரூட்டை பின்பற்றுகிறேன். அதனால், நடித்து வரும் படங்கள் திரைக்கு வரும்போது, இன்னும் நான் பேசப்படுவேன்" என்று சொல்லும் பிந்து மாதவி, "என்னைத் தேடி பிரபல ஹீரோக்களின் படங்களும் வரும். அதையடுத்து, கமர்ஷியல் கதாநாயகி ஆகிவிடுவேன்" என்று தன்னம்பிக்கையுடன் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







"அப்பா...
வேதாளம்
முருங்கை மரம்
ஏறுமா?"
"தெரியாதுடா...
உங்கம்மா
முருங்கை மரம்
ஏறி நான்
பார்த்ததில்லை!"






அபிமன்யு விழுந்ததைக் கண்டு, கௌரவப் படையினர் காட்டுமிராண்டிகள் போல இறந்த உடலைச் சுற்றி ஆடினர்.

ஆனால் அவர்கள் எவரும் போர் முடியும்போது உயிருடன் இல்லை. அபிமன்யுவின் சாவுக்குப் பழிவாங்கும் வகையில், பாண்டவர்கள் அவர்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் குருகேஷத்திர போரில் கொன்றனர்.

அபிமன்யுவின் வீரம் இன்றுவரை நிலைத்து நிற்கிறது.



# ஐந்து மருமகள்கள்

ஒரு ஊரில் வயதான தம்பதியர் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஐந்து மகன்கள். அவர்கள் அனைவருக்கும் திருமணமாகி விட்டது. ஐந்து மருமகள்களும் அந்தப் பெரிய வீட்டில் ஒரே கூட்டுக்குடும்பமாக வசித்தனர்.

குடும்பத் தலைவிக்கு அதிகம் வயதாகிவிட்டது. நோயும் நிறைய வந்துவிட்டது. அதனால் அந்தப் பெரிய குடும்பத்தின் நிர்வாகப் பொறுப்பை, யாராவது ஒரு பொறுப்புள்ள மருமகளிடம் ஒப்படைக்க நினைத்தாள். ஐந்து மருமகள்களில் யாரிடம் குடும்பப் பொறுப்பை ஒப்படைப்பது என்ற குழப்பம்; யோசித்தாள்; ஒரு நல்ல யோசனை தோன்றியது.

ஒருநாள் ஐந்து மருமகள்களையும் அழைத்து ஆளுக்கு ஒரு படி வேர்க்கடலையைக் கொடுத்தாள்.
"மருமகள்களே! ஆறு மாதம் சென்ற பிறகு இந்த வேர்க்கடலைகளைக் கேட்பேன். கொண்டு வந்து தரவேண்டும்!" என்றாள். மருமகள்களும் அதற்கு ஒப்புக்கொண்டனர்.

ஆறுமாதம் சென்றது. குடும்பத் தலைவி தனது ஐந்து மருமகள்களையும் அழைத்து, தான் கொடுத்த வேர்க்கடலைகளைத் திருப்பிக் கேட்டாள்.

"ஆறு மாதம் வேர்க்கடலையை வைத்திருந்தால் புழுத்துப் போகாதா? அதனால் அவை வீணாகிவிடுமே. ஆகவே, அதை உடனே வறுத்து, குடும்பத்தோடு சாப்பிட்டு விட்டோம்!" என்றாள் மூத்த மருமகள்.

"நீங்கள் கொடுத்த வேர்க்கடலையை அப்படியே ஓர் அடுக்குப் பானைக்குள் போட்டு வைத்திருந்தேன். நீங்கள் கேட்கும்போது இதைத் திருப்பிக் கொடுப்பது தானே மரியாதை. இந்தாருங்கள்!" என்று அந்த ஒருபடி வேர்க்கடலையைத் திருப்பிக் கொடுத்தாள் இரண்டாவது மருமகள்.


"ஓர் ஏழைக் குடும்பம் பசியால் துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்க மனம் பொறுக்கவில்லை. ஆகவே, அவர்கள் மீது இரக்கப்பட்டு ஒரு படி வேர்க்கடலையையும் அவர்களுக்கு கொடுத்து விட்டேன்!" என்றாள் மூன்றாவது மருமகள்.

"ஊரிலிருந்து என் பெற்றோர் ஒருமுறை வந்திருந்தனரே, அவர்களிடம் தம்பி, தங்கைகளுக்குக் கொடுக்கும்படி கூறிக் கொடுத்து அனுப்பிவிட்டேன்!" என்றாள் நான்காவது மருமகள்.
ஐந்தாவது மருமகள் இரண்டு ஆட்களின் துணையோடு ஒரு மூட்டை வேர்க்கடலையைக் கொண்டு வந்து தன் மாமியாரின் முன்னே போட்டாள்.

"அத்தை! நீங்கள் கொடுத்த வேர்க்கடலையை ஆறு மாதங்கள் அப்படியே வைத்திருப்பதால் என்ன பயன்... என்ன லாபம்...? என்று யோசித்தேன். என் தந்தை வீட்டுத் தோட்டத்தில் விதைத்தால் ஒன்றுக்குப் பத்தாக விளைந்து லாபம் கிடைக்குமேஎன்று நினைத்தேன்.

நிலத்தைப் பண்படுத்தி ஒருபடி வேர்க்கடலையையும் விதைத்தேன். இந்த ஆறு மாதத்தில் அது ஒரு மூட்டை வேர்க்கடலையாகப் பெருகி விட்டது. இந்தாருங்கள்!" என்றாள்.

அதைக் கண்ட மாமியார் மகிழ்ந்து போனாள். பெரிய குடும்பத்தை நிர்வகிக்கும் தகுதியும், பொறுப்பும் அவளுக்கே உண்டு என்று தீர்மானித்தாள். உடனே பொறுப்பை ஐந்தாவது மருமகளிடம் ஒப்படைத்தாள். அதை மற்ற நான்கு மருமகள்களும் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**கோ**டை வெயிலைத் தாங்கலாம். இந்த மாரி வெயிலைத் தாங்க ஏலாமல் கிடக்குது. கிட்டடியில இங்கை, இலங்கை வந்திட்டுப் போன ரட்னவேல் மாஸ்டர் கேட்டார்.

"என்ன? கடும் வெய்யிலோ?" எண்டு. இது கடும் வெய்யில் இல்லை... கொடும் வெய்யில்.

இந்த நடுமத்தியான நேரமும், அந்த ஒரு றோட்டில வர என்ன சந்தோசமாகக் கிடக்குது. ஆ... பத்து ஏசி பூட்டினமாதிரி குளு... குளு...! போக்குவரத்து வாகன நெரிசலும் குறைவு.

எந்த இடம்? எந்த றோட்? எண்டு சொல்லமாட்டன். சொன்னால் இந்த றோட்டையும் பிளான் பண்ணி அபிவிருத்தி செய்ய முயற்சிப்பீனம். இந்த றோட்டும் அபிவிருத்தி செய்ய வெளிக்கிட்டால், புரட்டாசி ஐப்பசியில பெய்யுற ரெண்டு நாள் மழையும் நிண்டு போகும். அதனால எந்த றோட் எண்டு சொல்லவே மாட்டன்.

ஒரு 150 மீற்றர் நீளமான இந்த றோட்டில 150 மீற்றர் நீளமான ஒரே மதில். மதில் உள்புறமும் வெளிப்புறமும் ஒரு அடி தூரத்தில றோட்டுக் கரையோடை இரண்டு தென்னைமரம், இரண்டு அரச மரம் (விருட்சம்) 3 மலைவேம்பு, 5 வேப்பமரங்கள் ... ச்சா... சொல்லவே உள்ளங்கால் தொடக்கம் உச்சந்தலைவரை குளிருதல்லே... இப்படி ஒன்றிரண்டு வீதியளும் மரங்களும் இருக்கிறதாலதான், இரண்டொரு மழைத்துளி மண்ணில் விழுகுது.

திட்டம் போட்டு அபிவிருத்தித் திட்ட நடவடிக்கை இந்த வீதியில செய்தால் உள்ள அவ்வளவு மரமும்...? யோசிச்சுப் பாருங்கோ!...


இந்த இடத்தில நிண்டு பார்த்தால் தூர ஒன்றிரண்டு பனைமங்கள் தெரியும். அதுக்குப் பக்கத்தில் 'மூழியாய்' தலைவிரி கோலமாய் கட்டி முடிக்கப்படாத தண்ணித் தாங்கி தெரியும். றெயின் ஓடும்போது விழுந்து நிமிர்ந்த 'சிக்னல்' தெரியும். இந்த றோட்டில மத்தியானம் வரேயுக்கே, ஒரு ஐஞ்சு நிமிசம் நிண்டு போகச் சொல்லி மரங்கள் கை அசைக்கும் பிள்ளைகளைக் கூட்டி வந்து ஆற அமர இருந்திட்டுப் போகச் சொல்லித் தூண்டும். பக்கத்து சிறுவெளியில

# அபிவிருத்தியில் 'குடி'மக்களின் பங்கு!

சித்திரை மாத விடுமுறையில பட்டம் விடச் சொல்லி ஆசையூட்டும் காற்று வீசும்... அப்படியான இடம் எந்த இடம் எண்டு சொன்னால் பிளான் பண்ணி அதில அபிவிருத்தித் திட்டங்கள் வந்திடும்.

இன்னும் சில பேருக்கு இந்த றோட்டில இறங்கினால் சந்தோசம் பாருங்கோ... நடந்து வாறவையும் சரி சயிக்கிள், மோட்டச் சயிக்கிள்ளை வாறவையும் சரி வந்த வேகம் குறையாமலே ஒரு வளவுக்கை விட்டு விடுவீனம். பங்குனி சித்திரை எண்டால் சொல்லி வேலை இல்லை. தெற்குப் பகுதியில இருந்து வாற சுற்றுலாப் பயணிகளின்ரை பஸ் ஏதும் இந்த வீதியால் வந்தால் ஒன்று இரண்டு பேர் இறங்கி விரைந்தோடிப் போய் ரியூப் தண்ணீர்க் கானில் பானம் வாங்கி வாறதும் உண்டு. என்ன பானம்? பனம் பாணம் தென்னம் பானம் தான்.... ஓ.... இந்த றோட்டிலதான் ஒரு கொல்களம் இருக்குது. ஆட்டினையும் வாங்கலாம்; மாட்டினையும் வாங்கலாம்... இங்க கோழி வாங்க ஏலாது எண்ட கவலை சிலருக்கு இருக்கு... பிளான் பண்ணி அபிவிருத்தி செய்யேக்கை அதுவும் வந்துவிடும்... சீமைச் சாராயம், வெளிநாட்டுக் குடிவகை இந்த இடத்தில் இல்லையெண்டிறது ஒரு பெருங்குறை. திட்டம் போட்டு அபிவிருத்தி செய்யப்பிளான் போட்டால் அதையும் கொண்டு வந்து விடுவினம்... ஏனென்டால் மூன்றிற்கு மேற்பட்ட உயர்கல்வி நிலையங்கள் அருகிலிருக்கின்றன... அதனால் எந்த இடமென்று சொல்ல மாட்டன்... சொன்னால் எங்கடை பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய கார்ப்பற் றோட் போட வெளிக்கிட்டு இடைஞ்சலாய் நிற்கிற வேப்பமரங்கள், மஹோகனி எல்லாம் இல்லாமல் போய்விடும். அதனால் எந்த இடம் எண்டு சொல்லமாட்டன்.

ஆனாலும் ஒரு குறை அந்த றோட்டில வீதிக்குக் குறுக்காக மஞ்சள் கோடு போடாதது ஒரு குறை. எல்லா றோட்டிலையும் பாதசாரிகள்



போக மஞ்சள் கோடு போடுகினம்... நான் சொல்லுற, நான் அடிக்கடி செல்கிற இந்த றோட்டில மஞ்சள் கோடு போடாதது ஒரு குறைதான் கண்டியளோ அந்த றோட்டில உள்ள அந்தக் கள்ளுத் தவறணைக்கு விழுந்தடிச்சுக்கொண்டு வாற ஆக்கள் வாகனங்களில் மோதுப்படாமல் போய்வரக்கூடியதாக ஒரு மஞ்சள் கோடு போட்டால் என்ன? இப்ப பாருங்கோ.. இதுதான் றோட் குறுக்கை இப்படி மஞ்சள் கோடு.. நேரா.... குடிமக்களின் நன்மைகருதி, பெருங்குடி மக்களின் பாதுகாப்புக் கருதி ஒரு தடிப்பான நேரான மஞ்சள் கோடு போடவேணும். வேண்டுமென்றால் எங்கடை சிரித்திரன் சுந்தர் ஐயா சொன்னமாதிரி - உள்ளேபோய் குடித்துவிட்டு வெளியேறுவோரின் வசதி கருதி மஞ்சள் கோட்டை தெருவைக் குறுக்கறுத்துப் போட்டால் நல்லது பாருங்கோ... இரண்டு மூண்டு பேர் ஆடி ஆடி வெளிக்கிட்டு வெளியே றோட்டைக் கடக்க வசதியாக இருக்கும்.

நாட்டின் அபிவிருத்தியில பெரும்பங்கு வகிப்பவர்களில் நம்போன்ற குடி மக்கள் பிரதான பங்கு வகிப்பதால் இத்தகையவர்களின் நலநோம்பலில் (Wel Fare) கவனம் செலுத்துதல் வேண்டும். இத்தகைய நியாயமான கோரிக்கைகள் பயனாளிகளின் நன்மை கருதிச் சாதகமாக நோக்கப்படவேண்டும் என்பதுதான் பரமசிவத்தின் ஆசை.

தெற்கில இருந்து லொறி லொறியாய்க் கொண்டுவரப்படும் குடிவகை நாட்டின் மற்ற இடங்களை விட இங்கைதான் கூட விலைப்படுகுது எண்டு நான் சொல்லித் தா்ன் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதில்லை. அந்த வகையில் நாட்டின் நிதி மூலத்தை வற்ற விடாது பாதுகாப்பதில் இத்தகைய குடிமக்கள் ஆற்றும் பங்களிப்பினைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

இப்ப கூட இவற்றிற்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தாது, பூரண ஆதரவு வழங்குபவர்கள் இவர்கள்தான். குடி மறுப்பு, சட்டப்படி குடி என்று எதுவித முணுமுணுப்பும் இன்றி தொடர்ந்து தீவிரமாக அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்பவர்கள் இவர்கள். குடி குடியைக் கெடுக்கும் அது இது போன்ற வார்த்தைகளை நம்பிக் கெட்டுப் போகாது, தொடர்ந்தும் நல்ல குடிமகனாக வாழ திட சங்சங்கற்பம் பூண்டவர்கள் இவர்கள் என்பதனை நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களைத் தீட்டுபவர்கள் அறிவார்கள்.


அபிவிருத்தியின் சுட்டிகளாக குறுகிய காலத்தில் எத்தனை மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன என்பதிலும், எத்தனை லீற்றர் மது விற்பனை அதிகரித்துள்ளன என்பதிலும் தங்கியுள்ளதெனக் காணக் கூடியதாகவுள்ளது.

***

# தேங்காய் பறித்தவன்

**ஒரு** ஊரில் கண்ணாயிரம் என்னும் பெயருடைய ஒரு கஞ்சன் வசித்து வந்தான். அவன் ஒரு நயா பைசா செலவு செய்வதாக இருந்தாலும் அதற்கு இரண்டு மூன்று முறை யோசனை செய்துதான் செலவு செய்வான். அவன் தனக்குத் தேவையான எந்தப் பொருளானாலும் அதைக் காசு கொடுத்து வாங்க மாட்டான். இனாமாக யார் எதைக் கொடுத்தாலும் அதைக் கொண்டு வந்து தன் வீட்டில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வான். அவனுடைய செயல்கள் அவன் மனைவிக்கு எரிச்சலை உண்டாக்கினாலும், அவள் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் தன் கணவனுடன் வாழ்ந்து வந்தாள்.

கண்ணாயிரம் தன் வீட்டுத் தோட்டத்தில் நிறைய காய்கறிச் செடிகளையும், கீரை வகைகளையும் பயிரிட்டு தன் தேவைக்குப் போக மீதியை வெளியில் உள்ளவர்களுக்கு விற்று அதில் கிடைத்த பணத்தையெல்லாம் யாருக்கும் தெரியாமல் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வான். அவன் தோட்டத்தில் ஒரு தென்னை மரம் இருந்தது. அந்த மரம் சற்று உயரம் குறைவாக இருந்தபோது கண்ணாயிரமே ஏணி போட்டு ஏறி தேங்காய்களைப் பறித்து வந்தான். மரம் சற்று உயரமாக வளர்ந்த உடன், அவனால் மரத்தின் மீது ஏறமுடியாமல் கஷ்டப்பட்டான். தென்னை மரம் ஏறி காய் பறிப்பவனை கூப்பிட்டால் காசு கேட்பான் என்ற எண்ணத்தில் கண்ணாயிரம் தென்னை மரத்தில் இருந்து காய்கள் தானாகவே விழட்டும் என்று சும்மா இருந்துவிட்டான். அவன் எண்ணம் போலவே காய்கள் முற்றியதும் கீழே விழத் தொடங்கின. கீழே விழுந்த காய்கள் போக மீதி நிறையக் காய்கள் மரத்தில் குலை குலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன. தன் மரத்து உச்சியில் காய்த்துத் தொங்கும் தேங்காய்களைப் பார்த்த கண்ணாயிரம் கூலி கொடுக்காமல் தேங்காய்களை எப்படிப் பறிப்பது என்று எண்ண ஆரம்பித்தான். அவன் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் கண்ணாயிரம் வசித்து வந்த ஊரில் அவனைப் பற்றி நன்கு தெரிந்த கூலிக்கு மரம் ஏறி தேங்காய் பறிக்கும் செல்லப்பன் என்பவன் கண்ணாயிரத்திடம் வந்து வணங்கி நின்றான். செல்லப்பனைப் பார்த்த கண்ணாயிரம் வா செல்லப்பா என்று அன்புடன் அழைத்து எங்கே! உன்னை நீண்ட நாட்களாக வீட்டுப் பக்கம் காணவில்லையே என்று கேட்டான். செல்லப்பனும் தான் தன் மாமனார் வீட்டுக்குச் சென்றிருந்ததாகவும் நேற்றுத்தான் ஊரிலிருந்து வந்ததாகவும் கூறித் தென்னை மரத்தை



அண்ணாந்து பார்த்து, மரத்தில் காய்கள் காய்த்துத் தொங்குகிறதே பறித்துப் போடவா என்று கேட்டான். உடனே கண்ணாயிரம் செல்லப்பனைப் பார்த்து உன்னைப் போன்று பரோபகாரம் நிறைந்த ஆட்களைத்தான் இத்தனை நாட்களாகத் தேடிக் கொண்டிருந்தேன், கடவுள் அருளால் இன்று நீ, எனக்குக் கிடைத்து விட்டாய். மிக்க மகிழ்ச்சி. இந்தா முதலில், இந்த சொம்பில் உள்ள நீரை வயிறு நிறைய குடி என்று தன் அருகில் வைத்திருந்த செம்பு நீரை செல்லப்பனிடம் கொடுத்து குடிக்கச் சொன்னான்.

கண்ணாயிரம் கொடுத்த சொம்பு நீரை வாங்கிக் குடித்த செல்லப்பன், கண்ணாயிரத்தைப் பார்த்து "ஐயா! நான் பறித்துப் போடும் காய்களுக்கு நீங்கள் ஒரு பைசாக் கூட தர வேண்டாம்" என்று கூறி விறுவிறு என்று தென்னைமரத்தின் மீது ஏறி, தான் வைத்திருந்த கத்தியால் ஐந்தே ஐந்து தேங்காய்களை மட்டும் வெட்டிக் கீழே போட்டு விட்டு கீழே இறங்கி வந்தான். கீழே நின்று கொண்டிருந்த கண்ணாயிரம் செல்லப்பனைப் பார்த்து, என்ன! செல்லப்பா மரத்தில் இன்னும் நிறைய காய்கள் காய்த்துத் தொங்குகிறதே அவைகளை பறித்துப் போடாமல் இறங்கி வந்து விட்டாயே" என்று கூறினான். இதைக் கேட்ட செல்லப்பன் 'ஐயா! எனக்கு இந்த காய்கள் போதும் என்று கூறி, கண்ணாயிரத்தைப் பார்த்து, "நான் மரத்தில் எறியதற்குப் பணமாகக் கேட்காமல் கீழே உள்ள ஐந்து காய்களில் ஒன்றை எடுத்துக் கொள்கிறேன். இறங்கியதற்காக ஒன்றும், நானாக ஒரு காயை எடுத்துக் கொண்டு நீங்கள் எனக்கு கண்டிப்பாக ஒரு காய் கொடுப்பீர்கள் என் நம்பிக்கையில் ஒன்றும் ஆக நான்கு காய்களை எடுத்துக் கொள்கிறேன், மீதி உள்ள ஒரு காயை நீங்கள் எனக்குக் கொடுத்தால் நல்லது, கொடுக்காவிட்டால் நான் அதை உங்களுக்கு அன்பளிப்பாக கொடுத்ததாக நினைத்துக் கொள்வேன். எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி நான்கு காய்களை எடுத்துக் கொண்டு வேகமாக கண்ணாயிரத்தின் வீட்டை வீட்டை விட்டு வெளியேறிச் சென்று விட்டான்.

செல்லப்பன் செய்கைகளைப் பார்த்த கண்ணாயிரம் பதில் ஏதும் சொல்ல முடியாமலும், செல்லப்பனை தடுத்து நிறுத்த முடியாமலும் என்ன செய்வது என்று தெரியாமலும் உட்கார்ந்து விட்டான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் சுடர்

# குழந்தைகளின் தவறை புரியவையுங்கள். அடிக்கவோ திட்டவோ வேண்டாம்!



இன்றைய காலத்தில் குறும்பு செய்யாத குழந்தைகளை பார்க்கவே முடியாது. அவ்வாறு குறும்பு செய்யவில்லையென்றால் வீடே வெறிச்சோடி இருப்பது போல் இருக்கும். ஆனால் நிறையப் பெற்றோர்கள் குழந்தைகளை அதிகம் எதையும் செய்யவிடாமல் தடுக்க முயற்சிக்கின்றனர். ஏனெனில் அவர்கள் எதாவது செய்யப் பேரய், உடல் நலத்திற்கு ஏதேனும் பாதிப்பு வந்துவிடுமோ என்ற பயம் தான். அதற்காக சிறுவயதிலிருந்தே அவர்களைக் கட்டுப்பாட்டுடன் வைப்பதற்கு, அவர்கள் ஏதேனும் குறும்போ அல்லது தவறோ செய்து விட்டால், உடனே அவர்களை அடிப்பார்கள். ஏனெனில் அவர்கள் இன்னும் நமது முன்னோர்கள் சொன்ன பழமொழியான 'ஐந்தில் வளையாதது, ஐம்பதில் வளையாது' என்று நினைப்பதால் தான்.

அதாவது குழந்தைகளை சிறு வயதிலேயே திருத்தாவிட்டால், அந்தப் பழக்கம் அவர்களிடமிருந்து மாறாமல் இருக்கும் என்பதற்காக, அவர்களை அடிக்கின்றனர். அவ்வாறு அடிக்கும் பெற்றோர்கள் கொஞ்சம் கூட குழந்தைகளது மனதைப் புரிந்து கொள்ளாதவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். மேலும் குழந்தை களை அடித்தால், அவர்கள் பிற்காலத்தில் எவ்வாறு மாறுவார்கள் என்பது பற்றி புரியாமல் இருக்கின்றனர். ஆகவே அத்தகைய குழந்தைகளை அடித்தாலோ, திட்டினாலோ என்ன வெல்லம் நடக்கும் என்பதைப் பெற்றோர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

குழந்தைகள் ஏதேனும் தவறு செய்துவிட்டால், அவர்களை அப்போது அடித்தால், அவர்கள் சுபாவம் மிகவும் கடுமையாகிவிடும். அதாவது யாரிடமும் சரியாகப் பேசாமல், அப்படி யாராவது பேசினால் சிடுசிடுவென்று பேசுவது என்பன போன்ற செயல்களில் நடக்க ஆரம்பித்து விடுவார்கள். மேலும் இந்த சுபாவம் வருவதற்கு வேறு யாரும் காரணம் இல்லை, பெற்றோர்கள்தான். அவர்கள் தவறு செய்யும் போது அதை அவர்களிடம் பொறுமையாக எடுத்துச் சொல்லிப் புரியவைக்காமல், உடனே அடிப்பது, திட்டுவது போன்ற செயல்களில் ஈடுபட்டால், அவர்கள் மனதில் அந்தப் பழக்கம் பழகி, பின் அவர்களும் அவ்வாறே நடக்க ஆரம்பிப்பார்கள்.

குழந்தைகளை அடித்தால் மட்டும் குழந்தைக ளுக்கு நல்ல பழக்கம் வரும் என்று நினைப்பதை முதலில் மனதில் இருந்து பெற்றோர்கள் நீக்க வேண்டும். ஏனெனில் இவற்றால் அவர்கள் மிகவும் பிடிவாத குணமுள்ளவர்களாக மாறும் நிலைக்கு வந்துவிடுவர். அதிலும் குழந்தைகள் தவறு செய்து, பெற்றோர்கள் கடும் தண்டனையை குழந்தைகளுக்கு எப்போதும் கொடுத்தால், அவர்கள் அந்தத் தவறை மறுபடியும் செய்வர். அவற்றால் சில குழந்தைகள் பல தவறான பழக்கங்களையும் பழகிக் கொள்வர். ஆனால் அதையே பக்குவமாகச் சொல்லிப் புரிய வைத்துப் பாருங்கள், குழந்தைகள் புரிந்து கொண்டு எந்த நேரத்திலும் அந்த செயலை மறுமுறை செய்யாமல் இருப்பர்.

குழந்தைகளுக்கு கடுமையாக தண்டனையைக் கொடுத்தால், பின் குழந்தைகளது மனதில் பெற்றோருக்குத் தம் மீது அக்கறை, பாசம் எதுவுமில்லை என்று நினைத்து, தவறான பாதையில் வேண்டுமென்றே செல்ல ஆரம்பிப்பார்கள். சிறிது காலத்தில் குழந்தைகள் பெற்றோரிடம் பேசுவதையே நிறுத்திவிடுவர். பின் அவர்கள் தனிமையிலேயே இருந்து, தனக்கு ஏதேனும் பிரச்சினை என்றால் கூட பெற்றோரிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருப்பர். பின் அவர்கள் சிறு வயதிலேயே மன அழுத்தத்திற்கு ஆளாக நேரிடும்.

ஆகவே இனிமேல் குழந்தைகளை அடிக்காமல், திட்டாமல், அவர்களிடம் அவர்களது தவறை எடுத்துச் சொல்லிப் புரிய வைத்தால், அதைப் புரிந்து கொண்டு நடந்து கொள்வார்கள். முக்கியமாக அடித்தால் தான் குழந்தைகள் திருந்துவார்கள் என்ற தவறான எண்ணத்தைப் பெற்றோர்கள் தங்கள் மனதில் இருந்து அழித்துவிட்டால், குழந்தைக்கும் பெற்றோருக்கும் உள்ள உறவு ஆரோக்கியமானதாக இருக்கும். பெற்றோரில் தந்தையை விடவும் தாயே பிள்ளைகளுடன் அதிகநேரம் நேரத்தைச் செலவிடுவதால் தாய்மார் இதில் முக்கிய கவனமெடுக்க வேண்டும்.



## அழகாக உதடுகளைப் பேண இயற்கை வழிமுறை!

முக அழகின் முழுமையை வெளிப்படுத்துவதில் கண்களுக்கு இணையாக உதடுகளுக்கும் முக்கியத்துவம் உண்டு. உடலிலுள்ள சருமம் 28 நாட்களுக்கொரு முறை வெளித்தோலை உதிர்க்கிறது. உதடுகளில் உள்ள சருமம் உதிர மாதக்கணக்கில் ஆகும். சரியான பராமரிப்பு இல்லாததால்தான் உதடுகள் தோலுரிந்தும், வறண்டும் காணப்படுகின்றன.

**உதடுகளைப் பராமரிக்க சில பொதுவான ஆலோசனைகள் :**

தினசரி பெட்ரோலியம் ஜெல்லியை உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் மென்மையாக மாறும்.

வாரம் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிரந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் அவை ரோஜா போல மென்மையாக மாறும்.

உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்படவேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும், நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும்.

மற்றவர்கள் உபயோகிக்கும் லிப்ஸ்டிக்குகளைப் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அதனால் தொற்றுக் கிருமிகள் பரவ வாய்ப்புண்டு.

இப்போது மேட் பினிஷ் லிப்ஸ்டிக்குகள் மிகவும் பிரபலம். அவற்றில் ஈரப்பதம் குறைவு என்பதால் உதடுகளில் உள்ள இயற்கையான எண்ணெய்களை அழித்து விடும். எனவே அவற்றை எப்போதாவதுதான் உபயோகிக்க வேண்டும்.

தரமானதாக இல்லாத பட்சத்தில் தினசரி லிப்ஸ்டிக் உபயோகிப்பதால் உதடுகள் கறுத்தும், வறண்டும் போகக் கூடும். எனவே தரமான லிப்ஸ்டிக்குகளாகப் பாரத்து உபயோகிக்க வேண்டும்.

## பாண் குடைமிளகாய் சான்விட்ச்


**தேவையான பொருட்கள் :**

குடைமிளகாய் - 1
வெங்காயம் - 1
பச்சை மிளகாய் - 2
பாண் -
மிளகுத்தூள் - 1 தேக்கரண்டி
வெண்ணெய் - தேவையான அளவு
உப்பு - தேவையான அளவு

**செய்முறை :**

முதலில் குடைமிளகாய், வெங்காயம் மற்றும் பச்சை மிளகாயை நன்கு நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.
பின் பாணின் முனைகளை வெட்டி அகற்றிவிடவும்.

பின் ஒரு வாணலியை வைத்து அதில் சிறிது வெண்ணெய் விட்டு நறுக்கிய காய்கறிகளை போட்டு சிறிது உப்பைத் தூவி, 2 நிமிடம் வதக்கி இறக்கி விடவும்.
பிறகு பாண்துண்டின் இரண்டு புறமும் வெண்ணெயை தடவி, அதன் மேல் வதக்கிய காய்கறிகளை வைத்து பின் அதன் மேல் மிளகுத்தூள் மற்றும் உப்பை தூவவும்.
ஒரு தட்டையான பாத்திரத்தை அடுப்பில் வைத்து சூடு செய்து, அதில் இந்தப் பாண்துண்டுகளை வைத்து சிறிது வெண்ணெய் விட்டு இருபுறமும் பொன்னிறமாக சூடு செய்து பரிமாறவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலஸ்திரோலின் சரியான அளவு எது?



டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

வி.அமுதா
வேலணை

**கேள்வி :-** கொலஸ்திரோல் பரிசோதனையில் மொத்த கொலஸ்திரோல் மட்டும் 200mg/dlஎன்ற அளவில் இருந்தால் ஆபத்தான கட்டம் என்று அர்த்தமா? சில ஆய்வுகூட அறிக்கைகளில் 240mg/dl வரை ஆபத்தில்லை என்று அச்சடித்தே இருக்கிறார்களே?

**பதில் :-** ஆங்கில மருத்துவம் நாளுக்கு நாள் புடமிடப்பட்டு வரும் ஒரு விஞ்ஞானத்துறையாகும். சில வருடங்களுக்கு முன்பு மொத்த கொலஸ்திரோல் மட்டம் 240mg/dl ஆக இருந்தாலும் மாரடைப்புக்குரிய இதயநோய் வரும் வாய்ப்பு அவ்வளவாக இல்லை என்று கருதப்பட்டது. ஆனாலும் இது குறித்த ஆராய்ச்சிகள் இத்துடன் முற்றுப்பெற்றுவிடவில்லை. ஆங்கில மருத்துவர்கள் தொடர்ந்து ஆராய்ச்சிகள் செய்த வண்ணமேஉள்ளனர். அதன் படியும் மாரடைப்பு என்பது உயிர்கொல்லியாக இருப்பதை கருத்தில் கொண்டும் ஆபத்தை நன்றாகக் குறைக்கவேண்டுமானால் கொலஸ்திரோல் மட்டம் 200mg/dl என்ற அளவை தாண்டக்கூடாது என சர்வதேச ரீதியாக இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே 200mg/dl தாண்டினால் ஆபத்து என்றே கருதப்படும். அந்த ஆபத்தை மருந்து மாத்திரையால் கட்டுப்படுத்தப் போகிறோமோ உணவுக் கட்டுப்பாட்டால் மட்டும் நெறிப்படுத்தப் போகிறோமோ என்பது நீங்களும் உங்கள் மருத்துவரும் சேர்ந்து உட்கார்ந்துப் பேசி தீர்மானிக்க வேண்டிய விடயமாகும்.

இங்கு ஒரு விடயத்தை குறிப்பிடவேண்டும். ஆங்கில மருத்துவம் இவ்வாறு நாள்தோறும் மெருகேற்றப்பட்டு வருவதால் மருத்துவர்களாக கற்று வெளியேறியவர்களில் விசேட மருத்துவ நிபுணர்களாக உள்ளவர் மட்டும்தான் தொடர்ந்து கற்றுக்கொண்டிருக்கவேண்டும் என்பது இல்லை. MBBS பட்டம் மட்டும் பெற்று இத்தொழில் செய்பவர் தொடர்ந்து புதிதுபுதிதாக ஏற்படும் மாற்றங்களை வாசித்து அறிந்து துறைசார் அறிவை புதுப்பித்துக் கொண்டே UPDATING இருக்கவேண்டும். இணையத்தளமே கூட இதற்குப் போதுமானது. இவ்வாறே மருத்துவர்களுடன் இணைந்து தொழில்புரியும் மருந்தாளர் PHARMACIST மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர்கள் MEDICAL LABORATORY TECHNOLOGICT தாதிகள், முதலிய சகல பிரிவினருமே இவ்வாறு புதிதாக கண்டுபிடிக்கப்படும் விடயங்களை வாசித்து UPDATE செய்துகொண்டே இருக்கவேண்டும். அதுமட்டுமன்றி இரத்தம் சிறுநீர் முதலான ஆய்வுகூட பரிசோதனை செய்பவர்கள் 1998 ம் ஆண்டு 40 ஆம் இலக்க வைத்திய கட்டளைச் சட்டத்தின்படி இலங்கை மருத்துவ கவுன்சிலில் (SRILANKA MEDICAL COUNCIL) MLT. ஆக பதிவுசெய்யப்பட்டவர்கள் மட்டுமே இந்தப் பரிசோதனைகளை செய்து அறிக்கை வழங்கமுடியும்.

ஆனால் நம் நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூட தொழிநுட்பவியலாளருடன் சிலமாதங்கள் வேலைசெய்து அடிப்படை நுணுக்கங்களை அனுபவமூலம் கற்றுக்கொண்டு சில மாதங்களில் தாமும் ஒரு ஆய்வுகூடத்தினை நடக்கத் தொடங்குகிறார்கள். இவர்களுக்கு செயல்முறை அறிவு இருந்தாலும் புத்தக ரீதியான (THEORETICAL KNOLEDGE) அறிவு இராது. எனவே புதிதாக சர்வதேச ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை TEXT BOOKS வாயிலாகவோ மருத்துவ சஞ்சிகைகள் மூலமோ, குறைந்த பட்சம் இணையத்தளம் மூலமோ அறிந்து கொள்ளமுடியாது. பரவலாக அறியப்பட்ட பின்பே இவர்கள் செவி வழியாக அறிந்தாலே கொலஸ்ரோல் மட்டம் 200 mg/dl என்பது தான் தற்போது சட்டப்படி மருத்துவ விஞ்ஞானப்படி ஏற்கப்பட்ட அளவு என்பது இவர்களுக்கு தெரியவரும். அதுவரை தாத்தா காலத்து அந்த பழைய 240 mg/dl என்ற பிடியிலேயே இன்றும் சிலர் உள்ளனர். இந்த சர்ச்சைக்கு பகிரங்கமாக முற்றுப் புள்ளி வைக்கும் விதமாக சமீபத்தில் நடந்த தொலைக்காட்சி மருத்துவ நிகழ்ச்சியில் நான் பேட்டி கண்ட பிரபல இருதய நோய் சிகிச்சை நிபுணரிடம் 200 சரியா 240 சரியா என்ற கேள்வியை கேட்டேன். அவரது வாயில் 200 mg/dl என்பது தான் இப்போது ஏற்கப்பட்ட அளவு என்பதை அந்நிகழ்ச்சியின் மூலம் அறியப்படுதினோம்.

எனவே ஐயந்திரிபற 200mg/dl என்பது தான் ஆபத்து எல்லை என்பதை துணிந்து கூறமுடியும்.

வாசகர்களே!
உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உடல் நலம்
சுடர் ஒளி வாரமலர்,
இல.361, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

# கர்ப்பகால உயர் இரத்த அழுத்தம் உயிரைப் பறிக்குமா?




இன்றைய கால கட்டத்திலும் கர்ப்பிணிகளின் மரணத்திற்கும், கருக்குழந்தையின் மரணத்திற்கும் முக்கியக் காரணமாக விளங்கும் நோய்களுள் மிகையான இரத்தஅழுத்தம் முதன்மை வகிக்கிறது எனலாம்.

சாதாரணமாக இரத்த அழுத்தத்தில் சுருங்கு இரத்த அழுத்தம் 120 மி.மீ. ஆகவும், விரிவு இரத்த அழுத்தம் 80 மி.மீ. ஆகவும்தான் இருக்கும். முதல் ஆறுமாத கர்ப்ப காலத்தில் இரத்த அழுத்தம் சற்று குறைந்து காணப்படும். சுருங்கு இரத்த அழுத்தம் 100 ஆகவும், விரிவு இரத்த அழுத்தம் 70 ஆகவும் இருக்கக்கூடும். கடைசி மூன்று மாத காலத்தில்தான் இரத்த அழுத்தத்தின் அளவு அதிகரிக்கும். 24 வாரத்திற்குப் பிறகுதான் இரத்த அழுத்தம் அதிகமாக ஆரம்பிக்கிறது.

விரிவு இரத்த அழுத்தம் 130 மி.மீட்டரைத் தாண்டினால் அதை இதயத்தால் தாங்க இயலாது. மூளையில் இரத்தக்கசிவு போன்றவை ஏற்படும். கர்ப்ப காலத்தில் விரிவு அழுத்தம் 110 அல்லது 120 ஆக இருக்கும்போதே இதயப் பிரச்சினை மற்றும் மூளை இரத்தக் கசிவு ஏற்பட்டுவிடுகிறது. கர்ப்பச் சன்னி என்ற பிரச்சினை விரிவு அழுத்தம் 90 அல்லது 100 மி.மீ. இருக்கும் போது வந்துவிடுகிறது.

இந்த இரத்த அழுத்தம் ஏன் வருகிறது என்றால், பாரம்பரியம், வறுமையான சூழ்நிலை, சிறுநீரகப் பிரச்சனைகள், பனிநீர் மிகைப்பு, இரட்டைக் கோளாறுகள், மனஅழுத்தம், கவலை போன்ற காரணங்களால் வருகிறது. கருத்தரிக்கும் முன்போ அல்லது கர்ப்ப காலத்திலோ இரத்த அழுத்தம் இருந்திருந்தால் அது தாயையும், கருக்குழந்தையையும் கண்டிப்பாக பாதிக்கும். கர்ப்பச் சன்னி, கர்ப்பிணி மரணமடைதல் போன்ற பிரச்சினைகள் சம்பவிக்கும். திடீரென தலைச்சுற்றல், பார்வை மங்கலாகி பின் இருண்டது போன்றிருத்தல் ஆகியவை நேரிடும்.

இதைத் தவிர்க்க, கர்ப்பிணிக்கு பூரண ஓய்வு, தூக்க மருந்துகள், இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகள் ஆகியவற்றை மருத்துவர்கள் பரிந்துரை செய்து தாய்-சேய் இருவரையும் காப்பாற்றுவர்.

கர்ப்ப காலத்தில் கைகால்கள் வீக்கம், மன அழுத்தம் போன்றவை இருந்தால் இரத்த அழுத்தப் பரிசோதனையை துவக்கக் காலத்திலிருந்தே தவறாமல் மேற்கொள்ள வேண்டும். பிரசவ காலத்திற்குப் பின்னரும் இரத்த அழுத்தப் பரிசோதனையை மேற்கொண்டால்தான் நோய் தொடருகிறதா என்பதை கண்டறிய இயலும். இதை மேற்கொள்ள மறந்தாலும் அல்லது அஜாக்கிரதையாக இருந்தாலும் அது உயிரைப் பறிக்கும் அளவிற்குப் போய்விடும் என்று மருத்துவர்கள் எச்சிரிக்கின்றனர்.




இஞ்சித் தேநீர் மன அழுத்தத்தைக் குறைப்பதோடு ஜீரண சக்தியையும் அதிகரிப்பதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளொன்றுக்கு ஒரு முறை இஞ்சித் தேநீர் அருந்தினாலே போதும், நமது உணர்வுகளை உற்சாகப்படுத்தி மன அழுத்தத்தை குறைப்பதோடு பெரிய அளவில் ஜீரண சக்தியையும் அதிகரிக்கிறது என்கிறார்கள். மன அழுத்தத்தினால் வயிற்றில் சுரக்கும் அமிலங்கள் பாதிக்கப்படுகிறது. இதனால் ஜீரண சக்தி பாதிப்படைகிறது. இம்மாதிரி நிலைகளில் வெந்நீரில் சிறிது எலுமிச்சைத் துண்டு ஒன்றைப் பிழிந்து பிறகு பொடியாக நறுக்கிய இஞ்சியைப் போட்டு அருந்தினால் பெரிய அளவுக்கு நிவாரணம் கிடைப்பதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இது நாக்கின் ருசி சம்பந்தமான தசைகளை எழுச்சியுறச் செய்து ஜீரண சக்தியை ஊக்குவிக்கிறது.

இஞ்சியில் ஜிஞ்ஜெரால் என்ற ஒரு சக்தி வாய்ந்த விட்டமின் உள்ளது. இது நம் இரத்தத்தில் கலந்திருக்கும் நச்சு இரசானயங்களை சுத்தம் செய்கிறது. அதாவது நமக்கு சொல்லொணா கவலை ஏற்படும்போது நச்சு இரசாயனங்கள் நம் உடலில் சுரக்கிறது. இதை இஞ்சி பெருமளவு சுத்தம் செய்து விடுகிறது. மலச்சிக்கல், அழற்சி, சாதாரண மூச்சுக்குழல் பிரச்சினைகள் என இவற்றைச் சரி செய்ய இஞ்சி உதவுவதோடு, இரத்தச் சுழற்சியையும் கட்டுக்கோப்பாக வைக்கிறது.

பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் ஏற்படும் தசைப்பிடிப்பைப் போக்க இஞ்சித் தேநீரில் நன்றாகத் தோய்த்த துணியை வயிற்றின் மீது வைத்துக் கொண்டால் பெரிய அளவுக்கு நிவாரணம் கிடைப்பதாக மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44

# மௌன மனவெளிகள்*

நா.யோகேந்திரநாதன்

கரவெட்டி தபாலகத்திற்குச் சென்று நீதிபதி வீட்டுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்த போது நேரம் எட்டு மணியாகவில்லை. நீதிபதி ஜெபநேசன் மிகவும் கண்டிப்பானவர் எனப் பெயர் எடுத்தவர். எனினும் தனக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்தவர் பிரபல சட்டத்தரணி ஜெயசிங்கம் என அறிந்ததும் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

ஜெயசிங்கம் ஒரு பிரபல சட்டத்தரணி என்பது மட்டுமன்றி பல சிக்கலான சட்டப்பிரச்சினைகளுக்கு விளக்கமளிக்கும் திறமை வாய்ந்த சட்ட வல்லுநர் என்பதையும் அவர் அறிந்திருந்தார்.

ஜெயசிங்கம் ஒரு பொய்முறைப்பாட்டின் பேரில் இரு இளைஞர்களும் விளக்க மறியலுக்கு அனுப் பப்பட்டமையைத் தெளிவுபடுத்தி அது தொடர்பாக ஒரு மனுச் சமர்ப்பிக்க நேரம் தரும்படி கேட்டுக் கொண்டார். உடனடியாகவே நீதிபதி மறுநாள் காலை தன்னை உரிய மனுவுடன் காலை பத்து மணிக்கு சேம்பரில் சந்திக்கும்படி அனுமதி வழங்கினார்.

விதானையாரும் குடியரசாரும் இவ்வளவு இலகுவாக அனுமதி கிடைக்கும் என எதிர்பார்க் கவில்லை. எப்படியும் இருவரையும் பிணையில் மறுநாள் எடுத்துவிட முடியும் எனவே அவர்கள் நம்பினர்.

ஆனால் ஜெயசிங்கம் "கந்தப்பர் நாங்கள் இப்ப என்ரை வீட்டை போய் கமராவை எடுத்துக் கொண்டு ஆலடிக்குப் போய் வரவேணும்" என்றார்.

ஏன்? என்பது போல் குடியரசார் ஜெயசிங்கத்தின் முகத்தை நோக்கினார்.

அவர் அமைதியான முறையில் "நாங்கள் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுற இடத் திற்குப் போனால் எங்களுக்குச் சாதகமான தடயங்கள் கிடைக்கலாம்" என்றார்.

குடியரசராலும் விதானையாராலும் அதைப்பற்றிப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் ஜெயசிங்கம் ஏதோ ஒரு நோக்கத்துடனே செய்வதாக நம்பிய காரணத்தால் அவர்கள் காரில் ஏறிக்கொண்டனர். கார் ஆலடியை அடைந்ததும் மூவரும் காரிலிருந்து இறங்கிக் கொண்டனர். ரோச் லைற்றை அடித்தவாறே நிலத்தைப் பார்த்து நடந்த ஜெயசிங்கம் எதையோ கண்டுவிட்டு அப்படியே நின்று விட்டார்.

"கந்தப்பர் இது கார் லைட்டின்ரை கண்ணாடியெல்லோ?. இது ஒரே இடத்திலை கிடக்கிறபடியால் வேறை இடத்திலையிருந்து இஞ்சை கொண்டுவந்து போட்டுக்கிடக்கு இதிலை அடிச்சுடச்சிருந்தால் கண்ணாடியள் சிதறித்தான் கிடக்கும்".

ஜெயசிங்கத்தின் விளக்கத்தைக் கேட்டு இருவரும் அதிசயித்துப் போய்விட்டனர். ஜெயசிங்கம் காரடிக்குச்சென்று தன் கமராவை எடுத்து வந்து அக்கண்ணாடிகளைப் பல கோணங்களில் படமெடுத்துக் கொண்டார். அதே நேரத்தில் கார் வெளிச்சத்தில் சிறிது தூரத்தில் கிடந்த கடதாசிப்பை விதானையார் கண்களில் பட்டுவிட்டது. அவர் அதை எடுத்து உள்ளே பார்த்தபோது அதனுள் சில கண்ணாடித் துண்டுகள் கிடந்தன.

"இஞ்சை இதை ஒருக்கால் பாருங்கோ" என விதானையார் பையை ஜெயசிங்கத்திடம் கொடுத்தபோது அவர் விரித்து உள்ளே பார்த்துவிட்டு "இதுபோதும் பொடியங்களை பிணையெடுக்க. கார்க் கண்ணாடியைத் தாங்களே உடைச்சுப்போட்டு பொய் வழக்குப் போடுற துக்காக இஞ்சை கொண்டு வந்து போட்டிருக் கிறாங்கள்" என்றார் அவர் ஒரு மெல்லிய புன்சிரிப்புடன்.

விதானையாருக்கு வந்த கோபம் உடனடி யாகவே போய் காசிப்பிள்ளையைப் பிடித்துவந்து ஆலமரத்திலை கட்டித்தூக்கி கீழே காவோலை கொழுத்த வேண்டும் என்ற உணர்வையே ஏற்படுத்தியது. எனினும் அவர் அதை வலிந்து அடக்கிக்கொண்டார்.

"ஜெயசிங்கம் காலை எட்டு மணிக்கிடையிலை இந்தப் படங்களைக் கழுவி எடுக்க வேணும்" என்றார்.

"அது செய்யலாம். மணியண்ணை காரை பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோவுக்கு விடு" என்றார் கந்தப்பர்.

முழு விஷயங்களையும் மனுவாக எழுதிக்கொண்டு வந்திருக்கிறார் ஜெயசிங்கம். சரியாகப் பத்துமணிக்கு நீதிபதி அழைப்பதாக பியோன் வந்து சொல்லவே ஜெயசிங்கம் சேம்பர் உள்ளே போனார். ஜெபநேசன் தான் ஒரு நீதிபதி என்பதைப் பொருட்படுத்தாமலே எழுந்து ஜெயசிங்கத்தைக் கைகுலுக்கி வரவேற்றார்.

ஜெயசிங்கம் கொடுத்த மனுவை நிதானமாகப் படித்தார் நீதிபதி. அவருடைய முகம் மெல்ல மெல்லக் கோபத்தில் சிவந்தது. அவர் எதுவும் பேசாமலே மணியை அடித்தார். அழைப்புக்காகக் காத்திருந்தவர் போல் நீதிமன்றச் செயலாளர் உடனடியாக வந்து நின்றார்.

நீதிபதி மனுவில் எதையோ எழுதிவிட்டு உடனே யே மறியல் வீட்டுக்கு அறிவித்து "இரண்டு பேரையும் கொண்டு வரச் சொல்லுங்கோ மற்றது அந்த முறைப்பாட்டுப் பிரதி பற்றிய விளங்கங்களோடை சார்ஜன்ட் சின்னத்தம்பியைத் திங்கட்கிழமை கோட்டுக்கு வரச்சொல்லி ஓடர் அனுப்புங்கோ!".

பின்பு அவர் ஜெயசிங்கம் பக்கம் திரும்பி "ஐ



ஆம் வெறி சொறி மிஸ்டர் ஜெயசிங்கம்! சிலவேளை இந்தப் பொலிஸ்காரர் நீதியோடை யே விளையாடிப் பார்க் கிறாங்கள். அதுக்கு நான் சரியான நடவடிக்கை எடுக் கிறன். ஒரு மணித்தியாலத்துக்கை கொண்டு வந்திடுவாங்கள். சரீரப் பிணையிலேயே எடுக்கலாம் என்றார் நீதிபதி ஜெபநேசன்.

நன்றி என்று விட்டு எழுந்து கொண்டார் ஜெயசிங்கம். வெளியே வந்த ஜெயசிங்கம் எல்லோரிடமும் விஷயத்தைச் சொன்னார். விதானையார் ஆலடி வெட்டையிலிருந்து எவரையும் நீதிமன்றுக்கு வரவேண்டாம் எனச் சொல்லியிருந்த போதிலும் சில இளைஞர்கள் சைக்கிளில் வந்து சேர்ந்துவிட்டனர்.

கனகரத்தினத்தையும் சிவஞானத்தையும் நீதிமன்றத்திற்குக்கொண்டு வந்து வழமையான சடங்குகள் முடித்து வெளியே விட ஒரு மணியாகி விட்டது. அவர்கள் இருவரையும் இளைஞர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் வெளியே வந்ததுக்கு மட்டுமன்றி அவர் களைப் பதினாலு நாள் தடுப்பில் வைக்கும் சதி முறியடிக்கப் பட்டதற்காகவும் எல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர்.

கனகரத்தினமும் சிவஞானமும் சற்றே சோர்வடைந்திருந்த போதிலும் அவர்களும் தங்கள் நண்பர்களைக் கண்டதும் உற்சாகம் அடைந்து விட்டனர். விதானையார் மற்றவர்களை சைக்கிளில் முன்னால் போகும்படி அனுப்பிவிட்டு இருவரையும் காரில் ஏற்றினார்.

கார் பஸ்நிலையப் பக்கமாகப் போய் ஒரு சாப்பாட்டுக்கடையின் முன் நின்றது அனைவரும் இறங்கி உள்ளே சென்றனர்.

[illegible] எனக் கேட்டார் குடியரசர்.

"ஒண்டும் வேண்டாமய்யா" என்று மறுத்தான் கனகரத்ததினம்.

"மறியல் வீடு உங்களுக்குப் புது அனுபவம். அங்கை வடிவாச் சாப்பிட்டிருக்க மாட்டியள்" என்று விட்டுப் பலமாக "இரண்டுபேருக்கும் இடியப்பம் வையுங்கோ" என கடைக்காரரிடம் கட்டளையிட்டார் குடியரசார்.

விதானையார் தங்களுக்கு சோடா கொண்டு வரும்படி கேட்டுக்கொண்டார். பின்பு "எப்படி மறியல் வீடு" எனக் கேட்டார் அவர்.

கனகரத்தினம் ஒரு பெருமூச்சுடன் சொன்னான் "ஜெயில் காட் மாரின்ரை அதட்டலும் மிரட்டலும் போதும்போதும் எண்டு போச்சு. சாப்பாட்டுக்கு வரிசையில் நிண்டு கோப்பையை ஏந்திறதை நினைக்க..." என்று விட்டு நிறுத்தினான் கனகரத்தினம்.

"பொன்னம்பலம் பாடு என்ன மாதிரி? கொஞ்சம் திமிர் அடங்கிப் போனமாதிக் கிடக்குது. வண்டியும் வத்திப் போச்சுது" என சிவஞானம் மெல்லச் சிரித்தவாறே சொன்னான்.

விதானையார் "இப்பவாவது தாங்கள் செய்த துக்காகக் கவலைப்படுறாங்களோ?" என மெல்லக் கேட்டார்.

"அப்படித் தெரியல்லை. எப்படியும் காசி முதலாளி தங்களைக் காப்பாற்றுவார் எண்டு நம்பினம்".

விதானையார் மெல்லிய கேலியுடன் சொன் னார். "காசிக்கு மறியலுக்கு அனுப்பத் தெரியும் வெளியில எடுக்கத்தெரியாது இப்ப சார்ஜன்ட் சின்னத்தம்பியையும் தொப்பி கழட்டி வீட்டுக்கு அனுப்பப்போறான் போலை கிடக்குது பார்ப்பம் என்ன நடக்குதெண்டு". அப்போது அவனை வீட்டை அனுப்பத்தான் வேணும். லஞ்சம் குடி எண்டு அவன்ரை அட்டகாசம் கூடிற்றுத்தான் போகுது என்றார் கந்தப்பர்.

கனகரத்தினத்திற்கு தன்னுடன் சின்னத்தம்பி நடந்து கொண்ட விதம் நினைவுக்கு வந்தது. அதிகாரங்களைப் பாவித்து சிலரின் சுயநல போக்குகளுக்காக அநியாயம் செய்யும் அவர் களைப் போன்றவர்களை நாட்டை விட்டே விரட்டி விட வேண்டும் என அவன் நினைத்தான். குடியரசார் மிகவும் அழுத்தமாகச் சொன்னார். "தம்பி இண்டையில் சமூக அமைப்பே வசதி படைச்சவங்களின்ரை தேவையளுக்கு அமை வானதுதான்? அதாலைதான் அதை மாற்ற நாங்கள்பொதுவுடமைக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டம்."

அந்த வார்த்தைகள் விதானையாருக்கு ஜீரண மாகாத மாதிரித்தோன்றிய போதும் இளைஞர்கள் இருவரும் அதை ஏற்றுக்கொண்டனர். கனகரத் தினத்திற்குப் பல்கலைக்கழகத்திலும் பொது வுடமை வாதிகளுடனும் நிறையவே தொடர்பு உண்டு.

அவர்கள் ஆலடியை வந்தடைந்த போது அங்கு ஒரு பெரும் கூட்டமே கூடிவிட்டது. ஆலடி வெட்டை பெரியவர்கள், பெண்கள், இளைஞர்கள் என ஊரே அங்கு கூடி நின்றது. அவர்கள் விடுத லையான செய்தி கேட்டு மணியாறன் மூலை இளைஞர்களும் அங்கு வந்துவிட்டனர்.

ஆனால் அவர்கள் ஏன் பிடிக்கப்பட்டார்கள் என்பதையோ ஏன் விடுவிக்கப்பட்டார்கள் என்பதை யோ எவரும் சரியாக அறிந்திருக்கவில்லை. ஒவ்வொருவரும் ஏதோ ஒவ்வொரு விதமான உண்மைகளை வெளியிட்டுக் கொண்டனர்.

அவர்கள் வந்திறங்கியதும் கந்தவனம் ஆவலை அடக்க முடியாமல் விதானையாரிடம் 'என்னய்யா என்ன நடந்தது ஏன் பொடியளைப் பிடிச்சவங்கள்' எனக் கேட்டார்.

காசி வடிவேலன் வீட்டை மணியாறன் மூலையார் கொழுத்தப் போறாங்கள் எண்டு கதைகட்டி சண்டை மூட்ட முயன்றதிலிருந்து பொய் முறைப்பாடு போட்டது வரை விதானையார் விபரமாய் சொல்லி முடித்தார்.

கந்தவனம் திரவியம் போன்ற பெரியவர்களுக்கு ஒவ்வொன்றையும் கேட்க சினம் உச்சிக்கு ஏறிவிட்டது.

"செய்யாத பிழைக்கு எங்கடை பொடியளுக்கு மறியல் எண்டால் நாங்கள் செய்து போட்டு போவம். வாருங்கோ போய் காசியின்ரை காரை அடிச்சு நொருக்கித் தூளாக்குவம் என்று விட்டு சண்டிக்கட்டை வரிந்து கட்டிக்கொண்டு புறப்பட்டார் கந்தவனம்.

வேறு ஏழெட்டுப் பேரும் அவரைத் தொடர்ந்தனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் சுதந்திரம் சீர்பெறுமா?

நாட்டின் நீதித்துறையின் நடைமுறைகளின் அடிப்படைக் கட்டுமானங்களைப் படிப்படியாக வலுவிழக்கச்செய்யும் கண்டுணர முடியாதவைகள் இப்பொழுது வெளிப்படையாகப் புலப்படத் தொடங்கியுள்ளன. அரசியல் ரீதியாக பேரவாக்கள் கொண்ட நீதவான் இருக்கைகளில் உள்ள ஒரு சிலரும் இணைந்து, இப்பொழுது மேலாண்மையிலுள்ளோரின் தலையீடுகள் மேலும் மேலும் நேரடியாக அதிகரித்துள்ளன.

நீதிச்சேவை ஆணைக் குழுவின் செயலாளர் மீது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது நிச்சயமாக இந்நாட்டின் வரலாற்றில் இல்லாத ஓர் கடத்தல் முயற்சிகயாகவே கருத்திற் கொள்ளப்படுகின்றது. முன்னரும் கூட மேலாண்மை நிலை அதிகாரத்திலுள்ளோருக்கும் நீதித் துறைக்குமிடையில் இடம்பெற்ற பல முறுகல் நிலைகள் குறித்து அறிவோம். ஆயினும், இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடம் அதன்பாற்பட்ட முரட்டுத் துணிச்சல் இரண்டுமே அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. அத்துடன் தாக்குதல் குறித்து உரிய பொருத்தமான விசாரணைகளை மேற்கொண்டு குற்றமிழைத் தவரகளைத் தண்டிப்பதில் அரசின் நடவடிக்கைகள் படுமோசமாக உள்ளதாகப் பொதுமக்கள் நம்புகின்றனர்.



உண்மையில் சிறிலங்காவின் நிதித்துறை மீதான நேரடி இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது எம் ஒவ்வொரு வருக்கும் மிகப்பெரிய நெருக்கடி நிலைக்கு முன்னோக்கி நகர்த் தப்படும் ஓர் காலங்கடந்த விழிப் புணர்வையே உண்டாக்கியுள்ளது.

***ஜனாதிபதி அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்டவரல்ல.***

பிரதம நீதியரசரை அதிகார பூர்வமாகக் கடுமையாகக் குற்றம் சுமத்துவதற்கு மறைமுகமாக முயற்சிகளும், பின்னர் நீதித்துறைக்கும் தமக்குமிடையில் இழுபறிகள் எதுவுமில்லாதவாறு காட்டுவதற்காக பெருந்தன்மையான அறிக்கைகளை வெளியிடுதலும் ஓர் அம்சமாக உள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் தீர்மானம் அவரிடம் கையளிக்கப்படாதது குறித்துச் சபாநாயகர் அவரது கடுஞ்சீற்றத்தை வெளிப்படுத்தியதும் அதுபோன்றதொன்றேயாகும்.

யாரை ஏமாற்றுவதாக அரசாங்கம் நினைக்கின்றது? அல்லது அரசாங்கம் இதனைச் சாதாரண முறையில் எடுக்கின்றதா? நிச்சயமாக நாங்கள் இதனை யிட்டுச் சந்தேகம் கொள்கிறோம். திவிநெகும சட்ட வரைபிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் இதனையே வெளிப்படுத்தி நிற்கின்றது.

எனவே, இப்பொழுது ஒரு விடயம் தெளிவாகிவிட்டது. அரசியலமைப்பின் தொகுதி 111C யின் பிரகாரம் சட்ட பூர்வமான அதிகாரமின்றி நீதித்துறையின் அதிகாரங்கள் மற்றும் எந்தவொரு நீதவானின் செயற்பாடுகளில் தலையீடு செய்வதற்குரிய பாரிய தண்டனை சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியின் விடயத்தில் பயன்பாடுடையதல்லவென்பதே அதுவாகும். அவரது செயலாளரும் அவர் சார்பாகச் செயற்படுவதற்காக அதனை உண்மையெனக் கூறிக் கொள்கிறார்.

அத்துடன் இத்தகைய தலையீடு ஒன்று வெளிப்பட்டதும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குச் சட்ட பூர்வமான அதிகாரம் உள்ளதாக நாங்கள் அனுமானிக்கின்றோம். அவர்களும் தவறான ஒன்றைச் செய்துவிட்டு தண்டனையில் இருந்து தப்பி விடுகின்றனர். இதுவே நாங்கள் அடைய முடிந்த இயல்பான ஓர் முடிவாகும்.

***நீதித்துறை அமைப்பைப் பாதுகாப்பதற்குத் தவறுகளை வெளிப்படுத்துவது நீதிபதிகளின் கடமை***

சிறிலங்கா அரசியலமைப்பின் தொகுதி 111C ஒன்றும் புதிதானதல்ல. அத்துடன் புதுமையானதுமல்ல. இது 1972 ஆம் வருடத்து அரசியலமைப்பிலும் உள்ளடக்கப்பட்டிருந்ததொன்றேயாகும். நீதிபதிகளின் அதிகாரங்கள் மற்றும் நடவடிக்கைகளுடன் மேலான்மையுடையவர்களின் தலையீடுகள் இக்கட்டளைக் கூற்றுடன் நேரடியாகத் தடைசெய்யப்பட்டமை சுற்றிவளைத்த நிலையில் காட்டப் பட்டுள்ளது.

நாட்டின் நீதித்துறையின் நடைமுறைகளின் அடிப்படைக் கட்டுமானங்களைப் படிப்படியாக வலுவிழக்கச்செய்யும் கண்டுணர முடியாதவைகள் இப்பொழுது வெளிப்படையாகப் புலப்படத் தொடங்கியுள்ளன. அரசியல் ரீதியாக பேரவாக்கள் கொண்ட நீதவான் இருக்கைகளில் உள்ள ஒரு சிலரும் இணைந்து, இப்பொழுது மேலாண்மையிலுள்ளோரின் தலையீடுகள் மேலும் மேலும் நேரடியாக அதிகரித்துள்ளன.

மிக அண்மையில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியான டபிள்யூ.ரி.எம்.பி.சி. வரவெவ, முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவின் வழக்கின்போது, குற்றமெய்ப்பிப்பில் உள்ள கருத்து மாறுபாடு குறித்து விழிப்பூட்டும் விதத்தில் கருத்துகளை வெளிப் படுத்தியிருந்தார். ஆயினும் இத்தகைய சந்தர்ப்பங்களில் நிகழ்பவை குறித்துத் துணிவுடன் கண்டனம் தெரிவிக்கும் மனிதர்களாக ஒரு சிலரே விளங்குவது பெரும் மனவருத்தத்திற்குரியதொன்றாகும்.

குறித்த சில கொள்கைகள் மிகவும் தெளிவானவை. முதலாவது கொள்கையானது நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் நீதித்துறையுடன் மேலாண்மையில் உள்ளவர்களின் தலையீட்டினை எதிர்ப்பது அவர்களது முதற்கடமையாகும். இதனை நோக்கிய முடிவாகவே நீதித்துறை அலுவலர்கள் மறியல் நடவடிக்கையின் மூலம் சட்டமுறைப் படியான வகையில் மனதில் உள்ளதை இம்மியும் பிசகாத வண்ணம் வெளிப்படுத்தியுள்ளனர்.

***பழைய வரலாறு***

அரசியலமைப்பு ஆய்வாளர்கள் நீதிச்சேவை ஆணைக்குழுவினைப் பாதிப்பவை குறித்து நன்கறிவர். அரசியல்வாதிகளினால் நீதித்துறையின் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட வெளிப்புற அச்சுறுத்தல்கள் யாவும் ஆவணமாகப் பதியப்பட்டவையே. 1972 இல் சுதந்திரமான அரசியலமைப்பின் கீழ் பழைய சுதந்திரமான நீதிச்சேவை ஆலோச னைச் சபை (JSAB) மற்றும் நீதிச்சேவை ஒழுங்கு நடவடிக்கைச் சபை (JSDB) இரண்டும் புதிதாக நியமனம் பெற்றன.

1978 ஆம் ஆண்டிலான குடியரசு அரசியலமைப்பிலும், முன்பிருந்ததைவிட முன்னேற்றமான அம்சங்கள் உள்ளடக்கியிருந்தன. பொதுப் பழிப்புக்குள்ளான JSAB மற்றும் JSDB இரண்டும் அரசியல் தலைமைப்பீடத்தின் தலையீட்டினைத் தடுப்பதற்குத் தகுதியுற்றவையென நிரூபணமாகி அவை நீக்கப்பட்டு மீண்டும் அதன் பின்னர் பெரும்பாலான அதிகாரங்களுடன் ஓர் சுதந்திரமான நீதிச்சேவை ஆணைக்குழு 17 ஆம் திருத்தத்துடன் வெளிப்பட்டது.

கடந்த தசாப்த காலப்பகுதியில் நீதிச்சேவைகள் ஆணைக்குழு பலவிதமான அமளிதுமளிகளுக்குள்ளாகியுள்ளது. அப்போதைய நீதிபதியும் இப்போது பிரதம நீதிபதியாகவுமுள்ள சிறானி பண்டாரநாயக்கா மற்றும் தற்போது ஓய்வு நிலையில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிபதியான ரி.பி. வீரசூரியா ஆகியோரின் பதவிவிலகல்களும் மனச்சாட்சியினை அடிப்படையாகக் கொண்டவையேயாகும்.

சரத் சில்வாவின் காலப்பகுதியின்போது நீதிமன்றங்கள் கடும் பதற்றங்களை எதிர்கொண்டன. அக்காலப்பகுதியில்தான் ஆழமான அதிகாரங்கள் கொண்டவரான நீதியரசரால் நீதிச்சேவை ஆணைக் குழு அமையப்பெற்றது. அவ் வேளையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையின் கண்டனத்திற்கும் ஆளாகியது. அன்றிலிருந்து அதன் தாக்கம் தொடர்ந்தது. உடைந்து சிதறிய அழகிய கைவண்ணம் பொருந்திய பொம்மையை மறுபடியும் பழைய நிலைக்குக் கொண்டுவருதல் எவ்வளவு கடினமானதோ அதுபோன்றே நீதித்துறையின் முன்னைய கீர்த்தியை கொண்டு வருவதில் மிக்க கவனத்துடன் சீரமைக்காதுவிடின், அது கடினமான தொன்றாகவே இருக்குமென்பதில் ஐயமெதுவும் இல்லை.

நீதிமன்றங்களுக்கும் அத்துடன் சட்டங்களுக்கும் உள்ள அவமதிப்பு இப்போதைய நிலையில் வெளிப்படையாகவே உள்ளது. அதற்கு ஏற்ற விதத்தில் மன்னாரில் நீதிமன்ற வளாகத்தில் வைத்து நீதித்துறை அதிகாரிகளும் மற்றும் அலுவலர்கள் மீதான அரசாங்க அமைச்சர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் உதாரணமாகவுள்ளன.

அதேபோன்று அண்மையில் இடம்பெற்ற நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீதான தாக்குதலும் அதனை மேலும் தெளிவுபடுத்தியுள்ளது. இவை குறித்துப் பேச வேண்டியவர்கள் அமைதி காக்கும் நிலையில் இவை போன்றவை இன்னமும் தொடர்கதைதானா? என்றே எண்ணத் தோன்றுகிறது.

*சண்டேலீடரில் கிஷாலி பின்ரோ ஜயவர்த்தன எழுதியது*

**தமிழில் ஜெகநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இரா.புத்திரசிகாமணி

# சம்மேளனம் அமைப்பது சாத்தியமா?

மலையக தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு பலமிக்க தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றை அமைப்போம் என்று அருமையான ஒரு ஆலோசனையை முன் வைத்து அழைப்பு விடுத்துள்ளார். ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

தனிப்பட்ட முறையில் சம்பள உயர்வு, கூட்டு ஒப்பந்தம் என்று மட்டும் இல்லாமல் மலையக மக்களின் அடிப்படை, வாழ்வாதார, கலாசார மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு சம்மேளனமாக இது உருவாக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தி உள்ளார்.

உண்மையாகவே தொழிலாளர்கள் மீது அக்கறையும் பற்றும் பாசமும் உள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் இதனை ஆதரிப்பார்கள். இப்படியான அமைப்பை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பார்கள். தமது முழு பங்களிப்பையும் வழங்குவார்கள்.

> **தம்மைத் தாமே பெரும் தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதைத்தெரிந்து கொள்ள வேண்டும். உங்களால் இப்போது ஓரம்கட்டப்பட்டு, குட்டிச் சங்கங்கள் என்று நையாண்டி செய்பவர்கள் ஒன்று கூடி ஒரு பலமிக்க சக்தியாக உருவாகிவிட்டதால் காலப்போக்கில் உங்களையும் ஓரம் கட்டக் கூடிய நிலை வரலாம்.**

அப்போது தான் அவர்கள் தொழிலாளர்களுக்காக தொழிற்சங்கம் நடத்துகின்றோம் என்று கூறுவது உண்மையாகும்.

மனோ கணேசனின் இந்த அழைப்பை சில தொழிற்சங்கத் தலைவர்கள் வரவேற்று வெளிப்படையாகவே ஆதரவளித்துள்ளனர்.

இவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். எடுத்த எடுப்பிலேயே எல்லோரும் ஒன்றுபடுவோம் என்று கை உயர்த்திவிட முடியாது. தமது அமைப்பின் ஏனைய உறுப்பினர்களுடனும் கலந்துரையாடி தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க சிறிது அவகாசம் தேவைதான். கால அவகாசம் எடுத்தாலும் இவர்கள் எடுக்கும் முடிவு தொழிலாளர்களுக்கு நன்மையளிப்பதாகவே இருக்க வேண்டும்.

'தொழிற்சங்க சம்மேளனம்' என்றவுடன் சில பெருந்தலைவர்களுக்கு உதறல் எடுத்து விடுகின்றது. சம்மேளனம் ஒன்று உருவாக்கப்பட்டால் எங்கே நாம் இல்லாமல் போய்விடுவோமோ, நாம் செல்வாக்கை இழந்து விடுவோமோ, நமது தனித்துவம் ஒழிக்கப்பட்டு விடுமோ என்ற பீதியும் ஏற்பட்டுவிடுகின்றது. ஏன் என்றால் இவர்களுக்கு 'சம்மேளனம்' என்ற சொல்லின் அர்த்தம் தெரியவில்லை. பல அமைப்புகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டு அமைப்பாக செயல்படுவதே சம்மேளனம். இந்த சம்மேளனத்தில் பிரதிநிதித்துவம் பெறுபவர்கள் தமது அமைப்பை கலைத்து விட்டுத்தான் சேரவேண்டும் என்ற கட்டுப்பாடும் நிபந்தனையும் இல்லை. எனவே மலையக தொழிற் சங்கங்கள் இதன்மூலம் தமது தனிப்பட்ட அமைப்புகளையும் வளர்த்துக் கொண்டு தமது சமுகத்தையும் வளர்க்க முடியும்.

இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் ஒரு உண்மையைத் தெரிந்து கொள்ளத் தவறிவிடுகின்றனரா? அல்லது தெரிந்து கொண்டே தெரியாதவர்கள் போன்று நடிக்கின்றனரா? என்பதும் அவர்களுக்கே வெளிச்சம்.

உதாரணமாக தொழிலாளர்களின் சம்பளஉயர்வு விடயமாக எடுத்துக் கொள்வோம். முன்னைய அரச தோட்டங்கள், இப்பொழுது 22 தனியார் கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் தனித்தனிப் பெயர்களில் தனித் தனியான நிறுவனங்களாக வேறுபட்ட மனிதர்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

ஆனால் தொழிலாளர்களின் சம்பள உயர்வினையோ, ஏதாவது சலுகைகளையோ வழங்கும் போது இந்தக் கம்பனிகள் தனிப்பட்ட முறையில் எந்த ஒரு முடிவையும் எடுப்பதில்லை. அனைத்து விடயங்களும் 22 கம்பனிகளும் ஒன்றிணைந்து உருவாக்கி உள்ள தோட்ட முதலாளியின் (துரைமார்) சம்மேளனத்தின் மூலமாகவே தீர்மானிங்கின்றனர். இந்த சம்மேளனம் இன்று தொழில் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் சங்கங்களில் மிகவும் பலம் பொருந்தியதாகவும் செல்வாக்குள்ளதாகவும் இருக்கின்றது.

இந்த 22 கம்பெனிகளுள் பல கம்பனிகள் எப்போதுமே பஞ்சப்பாட்டுப் பாடுபவை, நட்டத்தில் இயங்குகின்றோம், உற்பத்தி செலவுகள் அதிகரித்துவிட்டன. முகாமைத்துவ செலவினங்கள் அதிகரித்து விட்டன, தோட்டங்களை நடத்தவே முடியாமல் மூடிவிடும் நிலையில் இருக்கின்றோம் என்று வெளிப்படையாகவே கூறுவார்கள்.

சம்பளஉயர்வு தொடர்பான பேச்சுகள் கடந்த முறை இழுத்தடிக்கப்பட்டபோது சில கம்பெனி முகவர்களிடம் தனிப்பட்ட முறையில் பேசிய அனுபவமும் எனக்கு உண்டு.

"ஐநூறு ரூபாய் அல்லது அதற்கு மேலாகவும் எங்களால் சம்பளம் வழங்க முடியும். எங்களுக்குப் பிரச்சினை இல்லை. வருமானம் கிடைக்கிறது; வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் கொடுத்தால் என்ன? ஆனால் எங்களுடைய சகோதரக் கம்பெனிகள் பெரும் நட்டத்தில் இயங்குகின்றன. நிர்வாகத்திறமை இல்லை. நாம் மட்டும் சம்மேளத்தை உயர்த்திக் கொடுத்துவிட்டால் நட்டப்படும் கம்பெனிகளால் அதனை வழங்க முடியாதே. அதனால்தான் எங்கள் (துரைமார்) சம்மேளனம் எடுக்கும் முடிவுகளையே நாங்களும் ஏற்கவேண்டி உள்ளது" என மனம் திறந்து வெளிப்படையாகவே கூறினர்.

இந்த இடத்தில் ஒன்றை சுட்டிக் காட்ட வேண்டியது அவசியம்.

அதாவது, நாங்கள் பெரிய கம்பெனி, சிறந்த கம்பெனி, எங்களுடைய நிர்வாகம் சிறப்பானது, நாங்கள் தான் கூடுதலாக தேயிலையை உற்பத்தி செய்கின்றோம். பஞ்சபாட்டுப் பாடும் சின்னக் கம்பெனிகளுடன் சேரமாட்டோம்; இவர்களுடன் ஒரே மேசையில் அமர்ந்து பேசமாட்டோம்; துரைமார் சம்மேளனத்தில் சேர்ந்துகொள்ள மாட்டோம் என்று எந்த ஒரு கம்பெனியும் கூறவில்லை. ஒரு குடையின் கீழ் ஒரு பலமிக்க சம்மேளனமாகவே இயங்குகின்றோம் என்று பெருமையுடன் கௌரவமாகக் கூறுகின்றனர்.

ஆனால் நமது மலையகத் தொழிற் சங்கத் தலைவர்களுக்கு மட்டும் ஏன் இந்த சாபக்கேடு? ஒன்று படுவோம். வென்றெடுப்போம் என்று கூறும் போதே ஏதோ கேட்கக்கூடாததை கேட்டுவிட்டது போல் காததூரம் ஓடுகின்றனர்.



இப்பொழுது தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான கூட்டு ஒப்பந்தம் பற்றி சிறிது பார்ப்போம். கூட்டு ஒப்பந்தம் மலையக தொழிற்சங்கங்களை இரண்டாகப் பிரித்து வைத்துள்ளது. கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட தொழிற்சங்கங்கள், கையெழுத்திடாத சங்கங்கள் என்று இரண்டாகப் பிரித்துள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் மாற்றுத் தொழிற் சங்க கூட்டுக்கமிட்டி என்பன ஒப்பம் வைத்தவர்கள் எனவும் மலையக மக்கள் முன்னணி உட்பட ஏனைய அனைத்துச் சங்கங்களும் மறு பக்கமாகவும் இருக்கின்றனர்.

அரசியல் விவகாரம் என்று வந்துவிட்டால் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர்களும், இவர்களின் தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் காலை வாரிவிட்டுவிடுவது வழமை.

ஏனைய தொழிற்சங்கங்களை குட்டிச் சங்கங்கள், போதிய அங்கத்தினர் இல்லாத சங்கங்கள் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்கள் கூறுவது இயற்கையும் வழமையும். இவர்கள் தொழிற் சங்க கூட்டுக்கமிட்டி என்று கூறுகின்றனரே அந்தக் கூட்டுக்கமிட்டியில் இப்போது எத்தனை அங்கத்தினர்கள் இருக்கின்றனர். எத்தனை குட்டிச் சங்கங்கள் இருக்கின்றன என்பதை வெளிப்படையாகக் கூறுவார்களா?

இவர்கள் தம்மை நியாயப்படுத்த தமக்கு வேண்டிய எண்ணிக்கைகளை கூறி விடலாம். அனால் தொழில் திணைக்களத்தில் சரியான புள்ளி விபரங்கள் இருக்கின்றன. என்பதை மறந்துவிடக் கூடாது.

கூட்டு ஒப்பந்தம் செய்தவர்கள் மத்தியிலாவது ஒரு இணக்கப்பாடு காணப்பட்டதா? ஒரே மேசையில் அமர்ந்து கையெழுத்திட்டவை என்பதைப் பாருங்கள்.

துரைமார் சம்மேளனமும் தொழிற் சங்கங்களும் கூட்டு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டனர். தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்படும் என அரச வானொலி பரிபுரை செய்தது.

[illegible] தொடர்பாக கூட்டு ஒப்பந்தப் பங்காளிகளான கே.வேலாயுதம் ஓ.ஏ.இராமையா ஆகியோருடன் ஊடகங்கள் தொடர்பு கொண்டபோது வானொலி செய்தியைக் கேட்டுத்தான் நாங்களோ தெரிந்து கொண்டோம் என்றார்.

பின்னர் வேலாயுதம் இந்த "கூட்டு ஒப்பந்தத்தை நான் வன்மையாக எதிர்க்கின்றேன் தொழிலாளர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டு விட்டனர். எனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் கறுப்புப் பட்டியைக் கட்டிக் கொண்டே கையெழுத்திட்டேன்" என்றனர்.

அப்படியானால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தனது சுயநலத்திற்காக தனது கூட்டாளிகளுக்கே மூடி மறைத்து காலை வாரிவிட்டதா என்பதும் அவர்களுக்கு மட்டுமே தெரியும்.

நாங்கள் தான் பெரிய சங்கம் என்று கூறிக் கொண்டு கூட்டளிகளையே ஓரங்கட்டிவிட்டனர். இது எப்படி என்றால் 'ஆற்றைக் கடக்கும் வரை தான் அண்ணன் தம்பி, கடந்தபின் நியாரோ? நான் யாரோ?' என்றதாகிவிட்டது.

தம்மைத் தாமே பெரும் தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

உங்களால் இப்போது ஓரம்கட்டப்பட்டு, குட்டிச் சங்கங்கள் என்று நையாண்டி செய்பவர்கள் ஒன்று கூடி ஒரு பலமிக்க சக்தியாக உருவாகிவிட்டதால் காலப் போக்கில் உங்களையும் ஓரம்கட்டக் கூடிய நிலை வரலாம்.

நீங்கள் ஒதுக்குபவர்களின் பட்டியலை சிறிது பாருங்கள். மனோகணேசன், திருமதி சந்திர சேகரன், இராதாகிருஷ்ணன், திகாம்பரம், சதாசிவம், புத்திரசிகாமணி, முருகையா என அந்தப்பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. எனவே ஒரு சமுதாயத்தின் விடிவு என்று வரும் பொழுது பெரியவர், சிறியவர் என்ற பந்தாவை விட்டுவிட்டு ஒன்றிணைய வேண்டும் ஏன் நீங்களளே கூட தலைமை தாங்கி நடத்த முன்வரலாம். எவருமே எதிர்க்கவில்லை.

ஒன்றை திரும்பிப்பாருங்கள் சப்பிரகமுவ மாகாணசபைத் தேர்தலின் போது உங்களுக்குக் கை கொடுத்தவர்கள் யார்? உங்களுடைய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமா? இல்லையே இன்று உங்களால் விமர்சனம் செய்யப்படும் மனோகணேசனும், இராதாகிருஸ்ணனும் தானே அங்கு உங்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தனர். அன்று நீங்கள் குட்டிச் சங்கங்கள், உங்களுடைய ஆதரவு தேவையில்லை என்று கூறியிருந்ததால் இன்று இரண்டு பிரதிகளை அனுப்பி இருக்க முடியுமா?

உங்களுடைய கூட்டுகள் வெறும் சந்தர்ப்பவாத கூட்டாக இருக்கக் கூடாது. உறுதியான கூட்டாக இருக்க வேண்டும். இன்று மனோகணேசன் வாருங்கள் கூட்டணி அமைப்போம், என்னை தலைவராக்குங்கள் என்று கேட்கவில்லையே.

மலையகத்தில் ஒரு உறுதியான தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றை அமைப்போம் உங்களுடைய அபிப்பிராயங்களை வெளிப்படுத்துங்கள் என்றுதானே கூறியுள்ளார். உங்களுடைய சங்கங்களை கலைத்து விடுங்கள் என்று கூறவில்லையே.

சப்பிரகமுவ மாகாணத்தில் உங்களில் ஏற்படுத்தப்பட்ட மலையகக் கூட்டணி ஆளும் தரப்பினரையும், ஏன் ஜனாதிபதியையும் கூட சிந்திக்க வைத்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் விருப்பு வாக்குமுறை ஒழிக்கப்பட்டுவிட்டது. எதிர்காலத்தை சிறிது சிந்தித்துப் பாருங்கள். பல தொழிற் சங்கங்கள் மலையக மக்களின் வாக்குகளைப் பிரித்து சின்னா பின்னமாக்கிவிட்டால் உங்களால் தனிப்பட்டமுறையில் போட்டியிட்டு வெற்றி பெறமுடியுமா? இன்று உங்களால் உருவாக்கப்படும் சம்மேளனம் நாளை மலையகத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் ஒரு சக்தியாக உருவெடுக்கும் என்பது உறுதி.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசசார்பற்ற நிறுவனங்களும் மக்களின் எதிர்பார்ப்பும்!

இலங்கையில் யுத்தம் நடைபெற்ற பகுதிகள் முற்றுமுழுதாக இயல்பு நிலைக்குத் திரும்பா விடினும் மெதுமெதுவாக ஒரு சுமுக நிலையை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. இதில் பெரும் பங்கு அரசசார்பற்ற நிறுவனங்களையே சாரும். பொதுவாக சில அரச நிறுவனங்கள், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள். சக நிறுவனங்கள் என்பன குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை நாடிச் சென்று பணியாற்றி வருகின்றன. இவற்றின் பணி மக்களைப் பொறுத்த வரையில் பெரும்பங்கை ஆற்றினாலும் அவை பற்றி மக்களுக்கு ஓர் அதிருப்தி நிலையே பொதுவாக காணப்படுகின்றது. ஏற்கனவே அவை தொடர்பாக மக்கள் சந்தித்த ஏமாற்றங்கள் புரிந்துணர்வின்மை ஆகியன காரணங்களாக அமைகின்றன.

NGO என்ற சொல் பரவலாக அறியப்பட்டாலும் அவற்றை உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனம், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனம், (INGO) என இண்டு வகையாகப் பிரிக்கலாம். இவற்றுள் சில தமக்கான நிதி வழங்களை தாமே








கொண்டிருந்தாலும் வேறு சில நிறுவனங்கள் வேறு நிதி வழங்குநரிடம் இருந்து நிதியினை பெற்றுக் கொள்கின்றன. இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் தத்தமது கோட்பாடுகளுக்கு அமைவாக வாழ்வாதாரம், கட்டுமான செயற்பாடுகள், உளவளத்துணை, கண்ணிவெடி அகற்றல், விவசாயம், சுகாதாரம், கல்வி போன்ற பல சேவைகளை வழங்குகின்றன. போர்க்கால சூழ்நிலைகளிலும் மற்றும் போர் முடிவுற்றதன் பின்னர் உள்ள காலப் பகுதியிலும் பல நிறுவனங்கள் இங்கு கடமையாற்றியிருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் பல நிறுவனங்கள் இடைநிறுத்தப் பட்டுள்ளன. இனிவரும் காலங்களில் இவற்றின் சேவை முற்றாக இடைநிறுத்தப்படும் சாத்தியங்கள் அதிகமாகவே உள்ளன. இருப்பினும் நாட்டை விட்டு வெளியேறும் நிறுவனங்கள் ஒருபுறமும் தொடர்ந்து சேவையாற்றுபவை என ஒருபுறமும் அவற்றின் பணிகள் என தொடருகின்றன.

பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்களில் பணியாற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பிராந்திய இணைப்பாளர் அதற்கு மேலுள்ள பணிகளில் கடமையாற்றுபவர்கள் சர்வதேச உறவுகள் தொடர்பான கற்கை நெறியை முடித்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

ஆனால், இக்கற்கை நெறி பற்றிய போதிய விழிப்புணர்வோ, அறிவோ இலங்கையில் குறைவாகவே உள்ளது. அதனைப் போலவே மக்களிடமும் அரசசார்பற்ற நிறுவனங்கள் பற்றிய தெளிவான எண்ணக்கருவும் குறைவாகவே உள்ளது. இதற்கு பிரதான காரணம் இந்நிறுவனங்கள் வந்தவுடன் மக்கள் மத்தியில் இவர்கள் ஏதோ பெரிதாக தரப்போகிறார்கள் என்ற சிந்தனை உதித்பதாகும். அத்துடன் அந்நிறுவனங்கள் எவை என்பதும் அவர்கள் எது தொடர்பான சேவையினை வழங்கப் போகிறார்கள்? வழங்கும் உதவிகள், சேவைகள் தொடர்பாக அவர்களுக்கு இருக்கும் கோட்பாடுகள் எவை? அந்த அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நிதி வழங்குநரால் முன்வைக்கப்படும். நிபந்தனைகள் எவை? போன்ற விளக்கங்கள் அவர்களுக்குத் தெரியாது. அந் நிறுவனங்கள் குறித்து கிராம சேவகர் பிரிவில் உள்ள எல்லோருக்குமே உதவிப் பொருட்களை வழங்கக்கூடிய நிதி மூலத்தினை நிச்சயமாக கொண்டிருக்காது. அச்சந்தர்ப்பத்தில் அக்கிராம சேவகர் பிரிவில் உள்ள மிக அதிக அளவில் பாதிக்கப்பட்டவர்களான விதவைகள், அங்கவீனர்கள், குடும்பங்களின் வறுமைநிலை ஆகியவற்றை முன்னுரிமைப் படுத்தியே தமது பயனாளிகளை பொதுவாக தெரிவுசெய்வார்கள். அக் கிராமசேவகர் அப்பகுதியில் உள்ள சமூகமட்ட அமைப்புகள் ஊடாக தெரிவுகள் இடம்பெறும். நிறுவனங்கள் தம்மால் முடிந்த வரை தெரிவுசெய்யும் பயனாளிகளில் தவறுகள் ஏற்படாத வண்ணம் நடக்கவே எத்தனிக்கும். தெரிவு செய்யும் அலுவலர்கள் அப்பகுதிக்கு பரிச்சயமானவர்கள் என்றவகையில் அவர்களுடைய முடிவுகள் பக்கசார்பானவையாக இருக்க வாய்ப்பிருப்பதில்லை.

ஆனால் சில சமயங்களில் நிறுவனங்கள் மேற்கொள்ளும் பயனாளிகள் தெரிவில் சில தவறுகள் ஏற்படலாம். உதாரணமாக அரசாங்க உத்தியோகமற்ற, அன்றாட தொழில் புரிபவர்கள் என்ற வகையில் ஓர் மேசன் பயனாளியாகவும், அரசாங்க வேலையில் உள்ள ஒரு கீழ்நிலைத் தொழிலாளி தெரிவுசெய்யப்படாமலும் போகலாம்.. மேலும் சில சந்தர்ப்பங்களில் கிராமசேவையாளர் மற்றும் சமூகநல அமைப்புகளும் பக்கசார்பானவையாக நடந்து கொள்ளலாம். உரிய சந்தர்ப்பத்தில் அதனைச் சுட்டிக்காட்டும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு. ஆனால் எவ்வளவு நேர்மையாக நடந்தாலும் பொதுமக்களிடம் அவப்பெயர், திட்டுகள் வாங்கும் கிராமசேவையாளர்கள், சமூக மட்ட அமைப்புகளின் நிர்வாக அங்கத்தவர்களும் உண்டு. பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கு ஏற்பட்ட வெறுப்பு, அவமானம், கோபம் ஆகியவற்றால் தங்கள் கிராமசேவகர் பகுதிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவி தேவையில்லை என சில சமயங்களில் கூறுவதோடு, தங்கள் பகுதியில் இத்தனை குடும்பங்கள் வரை வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவருக்கும் உதவிகள் கொடுப்பதாயின் கொடுங்கள் அல்லாவிட்டால் வெளியேறுங்கள் எனக் கூறுவதுமுண்டு. பொது தேவைகளை விடுத்து தமது தனிப்பட்ட தேவைக்கு முன்னுரிமை கொடுக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு.

யுத்தம் நடைபெற்ற புகுதி மக்களைப் பொறுத்தவரை எல்லா மக்களுக்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களே. அந்நிறுவனங்கள் வழங்கும் சேவை, அவற்றுக்கு அவற்றின் பங்குதார நிறுவனங்கள் விதித்துள்ள நிபந்தனைகள் அல்லது நிதி வழங்குநர் விதித்துள்ள நிபந்தனைகள் ஆகியவற்றை புரிந்துகொள்ளும் அதேவேளை குறித்த நிறுவனங்களால் முற்றுமுழுதாக அப்பகுதியில் உள்ள மக்கள் அனைவரின் தேவையையும் பூர்த்திசெய்ய முடியாது என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். ஒரு நிறுவனத்தால் பயன்பெறாதோர் அத்தேவையை இன்னொரு நிறுவனம் மூலம் பெறலாம் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதேசமயம் ஏற்கனவே ஓரளவு தேவையை நிவர்த்தி செய்தவர்கள் உரிய தேவை உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இவ்வாறான விட்டுக் கொடுப்புக்கள் புரிந்துணர்வுகள்தாம் மக்களை வளப்படுத்தும். அதே சமயம் நிறுவனங்களின் உதவிகள் மக்கள் எழுந்து நிற்க ஓர் ஊன்று கோலே தவிர மக்களின் முழுத்தேவையும் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கலாகாது.

இவைதவிர விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுகாதாரம், கல்வி போன்ற அவசியமான துறைகளில் நிறுவனங்களின் பங்களிப்பும் சேவையும் அத்தியாவசியமானதாகும். இவை சம்பந்தமான நிறுவனங்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் போன்றவற்றிற்கு தகுந்த உதவியளிப்பதன் மூலம் மக்கள் தமது வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும். ஏனெனில் பெரும்பாலான மக்கள் அவற்றை நம்பியே தமது ஜீவனோபாயத்தை யுத்தகாலத்திலும் கொண்டு நடத்தினர். அத்துடன் நடந்து முடிந்த யுத்தத்தினால் பல இளைஞர் யுவதிகளின் வேலைவாய்ப்பின்மை மற்றும் குடும்பப் பிரச்சினை ஆகியவற்றுக்கு, நேரடி மறைமுக தீர்வாக தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தல், யுத்தம் நடைபெற்ற பகுதியில் இருந்து பெறப்படும் பால், மீன் போன்றவற்றை ஏனைய மாவட்டங்களுக்கு மூலப்பொருட்களாக நேரடியாக அனுப்புவதைக் காட்டிலும் அவை பதப்படுத்தப்பட்டு உற்பத்திப் பொருட்களாக அனுப்புவது அதற்கான தொழிற்சாலைகளை அப்பிரதேசங்களிலேயே அமைப்பது என்பது சிறந்த தீர்வாகும். இதனால் நேரடி உற்பத்தியாளர் பால்பண்ணையாளர் மீனவர் போன்றோரின் வருமானத்தையும் அதிகரித்து வேலைவாய்ப்பையும் அதிகரிக்கலாம்.

குறித்த அதே மாவட்டத்தில் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல் மூலம் மாற்றுத்திறனாளிகளும் முன்னாள் போராளிகளும் இதனுள் உள்வாங்கப்படும் சந்தர்ப்பமும் அதிகமாகும். தடுப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் அருகில் உள்ள இராணுவ முகாமில் கையொப்பம் இடும் பணி இருப்பதால் அவர்களால் பணிநிமித்தம் வேறு பிரதேசங்களுக்கு செல்லமுடியாத நிலையும் உள்ளது. எனவே, இவ்வாறானோரைக் கருத்திற்கொண்டு நிறுவனங்கள் செயற்படுமாயின் அவர்களின் பணி காலச்சிறந்ததாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

***

இந்திராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய விபசாரம். கேரளா முன்னணியில்

இணைய விபச்சாரம் என்றால் என்ன? எந்த ஒரு அறிவியல் கண்டுபிடிப்பும் நல்ல விடயத்திற்காகவும் கெட்ட விடயத்திற்காகவும் பயன்படுத்த முடியும். அதனை மனிதர்கள் பயன்படுத்தும் விதத்தைப் பொறுத்தது அது. இதற்குத் தொலைகாட்சி முதல் ராடார் வரை அநேக உதாரணங்களைக் கூறலாம். அந்தப் பட்டியலில் இணையமும் அடங்கும்.

இணையம் ஒரு கட்டில்லா களஞ்சியமாகும். சிறு குழந்தை முதல் இறக்கும் தறுவாயில் உள்ள மனிதர் வரை அனைவருக்கும் பல விதங்களில் அவர்களுக்குத் தேவையான பல விடயங்களைக் கடல் போல் இணையம் அடக்கி வைத்துள்ளது என்றால் மிகையில்லை.

இணையம் மூலம் வியாபாரம் என்பது இந்த நுற்றாண்டின் இணையற்ற புரட்சிகளில் ஒன்றாகும். வியாபாரம் என்றால்.... என்ன வியாபாரம் வேண்டுமானாலுமா? என்றொரு கேள்வி எழுவது இயல்பு!



அதற்கு விடையளிக்கும் விதத்தில் முன்னுதாரணமாக, இந்தியாவிலேயே கல்வியறிவில் முன்னணியில் நிற்கும் மாநிலம் என மெச்சிக் கொள்ளும் கேரள மாநிலம் நிற்கிறது. ஆம், இணையம் மூலமாக பெண்/ஆண் வியாபாரம் கேரளாவில் கொடிகட்டிப் பறக்கிறது.

இதனை ஆதாரபூர்வமாக மனோரமா நியூஸ் என்ற கேரள ஊடகமே வெளிக்கொணர்ந்துள்ளது. மனோரமா நியூஸின் புலனாய்வு நிருபர்கள் குழு ஒன்று, தங்கள் உயிருக்கே ஆபத்தாக முடியக் கூடிய சாத்தியம் உள்ள இந்த அபாயச் செயலைச் செய்துள்ளனர்.

கொச்சியை மையமாக வைத்து இயங்கும் ஒரு மிகப் பெரிய இணைய விபச்சார குழுவினைக் குறித்த செய்தியினை வீடியோ மற்றும் ஓடியோ ஆதாரங்களுடன் வெளிக்கொணர்ந்துள்ளனர்.

பல்வேறு 'Girlsfinder' போன்ற ஆபாசத் தளங்களில் 'தொடர்பு கொள்க' என்ற பெயரில் தங்களின் மார்க்கட்டிங் தொலைபேசி எண்களைப் போட்டு வைத்துள்ளனர். அதில், தொடர்பு கொள்ளும் நபர்களை வசதிக்கு ஏற்பவும் செல்லும் நேரத்திற்கு ஏற்பவும் 1 மணி நேரத்திற்குக் குறைந்தது 10,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் வரை பேரம்பேசி பெண்களை அனுப்புகின்றனர்.

இதில் மிகவும் அதிர்ச்சிகரமான விடயம் என்னவெனில், இவ்வாறு அனுப்பப்படும் பெண்களில் கல்லூரி மாணவிகளும் உள்ளமை தான். கல்லூரி மாணவி வேண்டும் என கேட்டால் அதற்கு ஏற்ப பேரமதிப்பு ஏறும் அவ்வளவே!

கல்லூரிக்குப் படிக்க அனுப்பும் தங்கள் பெண் பிள்ளைகள், கல்லூரிகளில் நன்றாகப் படித்துக் கொண்டிருக்கின்றனர் என நம்பியிருக்கும் பெற்றோர்களின் வயிற்றில் புளியைக் கரைக்கும் அதிர்ச்சிகரமான செய்தி இது!

தற்போது வெளியாகி இருக்கும் இத்தகவல் கேரளா முழுவதும் மிகுந்த அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

மேலைநாடுகளில் இது போன்ற இணைய விபசாரமும், இன்னும் மோசமான விடயங்களும் இடம்பெற்றாலும். இந்தியாவில் கேரளாவே இதில் முதலிடம் வகிப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ***


வெளிநாட்டு வேலை வாய்ப்பு

KURDISTAN

குர்திஸ்தான் நாட்டின் தலைநகர் ERBIL சர்வதேச விமான நிலையத்தில்

(ERBIL INTERNATIONAL AIRPORT)

☆ குர்திஸ்தான் ஒரு எண்ணை (Petrol) வளமுள்ள நாடு.☆

உடனடி வேலை வாய்ப்பு

14 நாட்களுள் தொழில் விசா பெற்று பயணம் மேற்கொள்ளலாம்.

★ AIR PORT CLEANERS - REQ No.85

85 விமானநிலைய கிளினேர்ஸ்.

MONTHLY SALARY - US$ 250/-

(S.L.Rs.33,750/=)+ O.T Available.

மாதச் சம்பளம் ரூபா.33,750/= + மேலதிக கொடுப்பனவு உண்டு.

2012 ஒக்டோபர் 26, 27ம் திகதிகளில்

(வெள்ளி, சனிக்கிழமை) காலை 9.00 - மாலை 3.00 வரை

கம்பனி முகவர் (Director / Licencee) யாழ் நகரில்

நேர்முக தேர்வு மேற்கொள்ள சமுகமளிக்கவுள்ளார். தயவுசெய்து இங்கு குறிப்பிடும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, மேலதிக விபரங்களைப் பெற்று, நேர்முகத் தேர்வுக்கு வரவும்.

★ மொபைல்: 077-078 1223 / 0777-371 067 / 077-892 408

உங்களது பாஸ்போட் (எல்லா நாட்டுக்குமான-ALL COUNTRIES), 4 பாஸ்போட் Size கலர் படங்களுடனும் (White Background) நேரில் வரவும். அடிப்படை ஆங்கில அறிவு இருத்தல் விரும்பத்தக்கது. இது ஓர் அரிய சந்தர்ப்பம் . தவற விடாதீர்கள்.

தங்குமிட வசதி இலவசம் உணவு இலவசம் மருத்துவ வசதி இலவசம். ஒப்பந்தக்காலம் 2 வருடங்கள் (புதுப்பிக்கத்தக்கது).

வயது: 21+ தொடக்கம் 35 வரை.

Terms & Conditions

Free Accommodation, Free Food & Medicals. Free Uniform & Air Passage after completion of contract period. Period of Contract three years (Renewable). Other terms & conditions will be as per Kurdistan Government Labour Laws.

கடந்த 15 வருடங்களாக எமது நிறுவனம் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் சிறந்த கம்பனிகளுக்கு ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுத்துள்ளோம் என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்பு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் மட்டும்.

TRANSSTAR.

INTERNATIONAL TRAVELS & TOURS (PVT) LTD.,

375, Second Floor, Dam Street, Colombo 12.

(375, 2ம் மாடி, டாம் வீதி, கொழும்பு-12)

Tel: 011-4718 936, 011-2386 824 Fax:011-2386 827

S.L.Bureau Labour Licence : 1311. S.L.Bureau Approval AL/1311/Advt/02/12.


## அமெரிக்காவில் விண்கற்கள் 1.74 கோடிக்கு ஏலம்



அமெரிக்காவில் சந்திரனில் இருந்து விழுந்த அரிய விண்கற்கள் ஏலம் விடப்பட்டன. கடுமையான போட்டிக்கு இடையே 2 விண்கற்கள் ரூ.1.74 கோடிக்கு ஏலம் போய் சாதனை படைத்துள்ளது. விண்கற்கள் மிக அதிக விலைக்கு ஏலம் போனது இதுவே முதன்முறை என்று ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது. நியூயார்கில் உள்ள ஹெறிடேஜ் ஆக்ஷன்' என்ற நிறுவனம், இந்த இரண்டு கற்கள் உள்பட ஏராளமான விண்பொருட்களை ஏலம் விட்டது. இதில் நிலவில் இருந்து விழுந்த விண்கற்கள் மிக அதிக விலைக்கு ஏலம் போய் சாதனை படைத்துள்ளது. சூரிய குடும்பத்தை சேர்ந்த சுமார் 125 கற்களும் இந்த நிறுவனத்தால் ஏலம் விடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து ஏல நிறுவனத்தார் கூறுகையில், எங்கள் நிறுவனம் விண்பொருட்களை அதிக அளவில் ஏலம் விடுவது வழக்கம். நிலவு கற்கள் ஏலம் குறித்து அறிவிப்பு செய்தோம். இந்த கற்களை ஏலத்தில் எடுக்க கடுமையான போட்டி நிலவியது. அதிகபட்சமாக ஒரு மில்லியன் டொலருக்கு ஏலம் போகலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், ஒரு கோடியே 14 லட்சத்துக்கு ஏலம் போனது மகிழ்ச்சி அளிக்கிறது. ஏலம் போன விண்கற்கள் நிலவில் இருந்து விழுந்தவை. ஏலத்தில் கற்களை எடுத்தவர்கள் குறித்த விவரம் வெளியிடப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# உண்மையான அறிவாளி யார்?

மே. திருமகள், பளை.
கே:– ஒருவரை உண்மையான அறிவாளி தான் என்று எவ்வாறு இனம் கண்டு கொள்ள இயலும்?
ப:– முட்டாள் தனமான பேச்சையோ செய்கையையோ அவர் சகித்துக் கொள்ளமாட்டார். அதேவேளை தனது கருத்தை மற்றவர்கள் ஏற்றுத்தானாக வேண்டும் என்று வற்புறுத்தவும் மாட்டார். மொத்தத்தில் தவறு எனத் தமது மனதுக்குப் பட்டால் அதைத் தவிர்த்து விலகிச்சென்று விடும் பண்பு வாய்ந்தவரே அறிவாளி.



கா. உலகசேகரம், பூநகரி.
கே:– எல்லா மனிதர்களையும் நம்ப முடியுமா பித்தரே?
ப:– எவரிடமும் நான் ஏமாந்து விடமாட்டேன் என்ற தன்னம்பிக்கையும் புத்திசாலித்தனமும் உம்மிடம் இருக்குமானால் எப்படிப்பட்டவரையும் நம்பலாம்; பழகலாம்.



அ.கனகசபை, கைதடி.
கே:– எடுத்ததற்கெல்லாம் தம்மைப்பற்றி பெருமையடித்துக்கொள்ளும் நபர்கள் குறித்து என்ன சொல்கிறீர்?
ப:– பணியுமாம் என்றும் பெருமை : சிறுமை அணியுமாம் தன்னை வியந்து இதைவிட வேறென்னத்தைச் சொல்ல.

சு. தேவசகாயம், மட்டக்களப்பு.
கே:– என் உடல், பொருள், உயிர் அனைத்தையும் உனக்குத் தரத் தயாராகவுள்ளேன் என்று எனது காதலியிடம் நான் கூறினாலும் அவள் முகத்தைச் சுழிக்கிறாளே பித்தரே?
ப:–இவ்வளவு அப்பாவியாக இருக்கிறீரே என்று எண்ணுகிறாள் போலும். நீர் என்ன தருவது; திருமணம் முடியட்டும்; இவற்றில் ஒன்று கூட மிச்சமில்லாமல் முழுவதையும் நானாகவே எடுத்துக்கொள்வேனே என்று மனதுக்குள் எண்ணிக் கொள்கிறார் போலும்.



து.நமசிவாயம், பரந்தன்.
கே:– இன்றைய நிலையில் எம் நாட்டில் அறவே ஒழித்துவிட இயலாதவை எவை பித்தரே?
ப:–லஞ்சம்; அதற்கடுத்து நுளம்புப்பெருக்கத்தைக் குறிப்பிட இயலும்.



த. கணநாதன், கொழும்பு – 06.
கே:– நீண்ட பஸ் பயணத்தின்போது எனக்கு முன் சீற்றிலிருந்த சிங்களத் தம்பதியினரின் குழந்தை என்னுடன் மிக நெருக்கமாக ஒட்டிக்கொண்டது. பயண முடிவில் அக்குழந்தையை என்னிடமிருந்து பிரிக்க அப் பெற்றோர்கள் படாதபாடு படவேண்டி ஏற்பட்டது. இது எப்படி பித்தரே?
ப:–இதில் இரகசியம் எதுவுமில்லை. அந்தக் குழந்தைக்கு இன்னமும் இன, மத, பேதமெதுவும் கற்றுக்கொடுக்கப்படவில்லையே.




எஸ். தேவகி, வவுனியா.
கே:– கிராமத்துப் பெண்களது நாகரீகம்; நகரத்துப் பெண்களது நாகரீகம் இவற்றுக்கு இடையேயான வேறுபாடு என்ன?
ப:–வெற்றிலை மென்பதால் ஏற்படும் உதட்டுச் சிவப்புக்கும், சாயப் பூச்சால் சிவக்கும் உதட்டுக்கும் இடையேயான வேறுபாடுதான். மொத்தத்தில் நோக்கினால் இரண்டுமே சிவப்புத்தான் என்றாலும், இயற்கை, செயற்கை என்பதால் வேறுபாடு தெரிகிறதே.



ச. ஐயாத்துரை, சாவகச்சேரி.
கே:– கல்யாணம் கட்டிக்கொள்வது துன்பத்தை விலை கொடுத்து வாங்குவது என்கிறார்கள் அனுபவப்பட்ட எனது சில நண்பர்கள். அது உண்மைதானா பித்தரே?
ப:–இன்பமும் துன்பமும் கலந்தது திருமணவாழ்வு. அந்தத் துன்பத்திலும் ஒரு இன்பம் உண்டு என்பது உமது நண்பர்களுக்கு நன்றாகவே தெரியும். இருந்தும் உம்மைப் பயமுறுத்த முயல்வதுதான் ஏனென்று புரியவில்லை.

## சொற்சிலம்பம் போட்டி இல: 544



அனுப்புபவர் பெயர் :..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. பாதிப்பான எதிரான நிலைமை
02. உறக்கம்
03. கருமேகம் / மழைகாலம்
04. போற்றுதல்
05. நாட்டியம் இந்த வகைக்குள் அடங்கும்
06. நாம்
09. சரியான நிலையைக் குறிக்கும்
11. யானை
12. இவர்கள் ஐவர்
13. வருமானம்
14. இல்லாமல் செய்
15. பன்மைத் தன்மையைக் குறிப்பது
16. வாழ்த்தும் சொல்
17. ஆறு
18. ஈரமான இடத்தில் படரும்

### இடமிருந்து வலம்

01. பந்தோபஸ்து
05. கூட மாட உதவும் பெண்
07. வெண்ணெய் பிரித்தெடுக்க பாலை இப்படி மாற்ற வேண்டும்
08. வஞ்சகத் தனம்
10. மண்ணுக்கு முந்தியது
11. சீவித்தல்
12. இந்தியா
14. மதிப்புக்குரிய பெரியவர்
15. முகத்தில் வருவது
16. சீவியப் பிரதேசம்
17. சுகம்
18. அரைவாசி
19. திரைப்படங்களில் இளம் நடிகைகள் காட்டுவது
20. ஒரு தமிழ் மாதம்

## சொற்சிலம்பம் போட்டி இல. 543

சொற்சிலம்பம் 544 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 14 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 541 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. அகம்பாவம். 02.சதி. 03. மர்மம். 04.தயங்குதல். 05.தவில். 07.சாதல். 09.குடம். 11.தலை. 14.வரம்பு. 15. விதுரன். 16. ஈடு. 17.அகர. 18.கொடை. 19.பதி.

**இடமிருந்து வலம்**

01. அசமந்தம், 06. கதிர், 07. சாவி, 08. மயங்குதல், 10. பாதம், 12. குடல், 13. வலை, 14. வதம், 16. ஈரல், 17.அது, 18. கொடும், 19. பகர, 20.கோடை 21. புத்திரன்

## போட்டி இல. 541 இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** அ.அரவிந்தகுமார், இல.216 பசறை வீதி, பதுளை.

**2ஆம் பரிசு** ஏ.எம்.முஸ்தயா, இல 100 சதாம் ஹுஸைன் கிராமம், ஏறாவூர்.

**3ஆம் பரிசு** செல்வி சறோஜினி சுந்தரலிங்கம், இல. 15 பகத்தலை வீதி, கொழும்பு – 03.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) திருமதி வி.சித்திரவேல்,**
சந்தைவீதி.
வத்தாறுமூலை.

**(2) உ. ரூபினி,**
கைதடி மேற்கு.
கைதடி.

**(3) ம.தர்ஷிக்காந்,**
இல.69 வட்டவிதானை வீதி,
கல்முனை - 02.

**(4) நி.கார்த்திகேயன்,**
மானிப்பாய் வீதி. ஆயம்.
கைதடி மேற்கு. கைதடி.

**(5) திருமதி முகுந்தா. ஜெயசோதி,**
இல 93. 2/5 பீட்டர்சன் வீதி.
கொழும்பு - 06.

**(6) திஸ்ஸ டிலாந்தி,**
கானடி வீதி களுதாவளை - 01.
களுவாஞ்சிக்குடி.

**(7) எம்.ஐ.எம்.அஸ்ரப்,**
இல-489. வைத்தியசாலை வீதி.
சாய்ந்தமருது - 07.

**(8) திருமதி பிரவீனா அரிகரசர்மா,**
மனோன்மணி அம்மன் கோவில்.
5 ஆம் வட்டாரம். அனலைதீவு.

**(9) வீ.சத்தியபாரதி,**
இல 86/15 பன்விளை வீதி.
வத்துகாமம்.

**(10) அ.அன்ரனி சுரேஸ்குமார்,**
இல.23/10 B. பாடசாலை வீதி.
ஜெயந்திபுரம்.
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

## ஷங்காய் மாஸ்டர்ஸ் பட்டம் வென்றார்
## நொவக் ஜொக்கோவிச்

சீனாவின் ஷங்காயில் இடம்பெற்று வந்த ஷங்காய் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை சேர்பியாவின் நொவக் ஜொக்கோவிச் வெற்றிகொண்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் அன்டி மரே இற்கு எதிரான போட்டியில் வெற்றிபெற்றே நொவக் ஜொக்கோவிச் சம்பியன் பட்டம் வென்றார்.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான அன்டி மரே முதலாவது செட்டைக் கைப்பற்றி நொவக் ஜொக்கோவிச் இற்கு அழுத்தம் வழங்கினார். முதலாவது செட்டை அவர் 7-5 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

எனினும் இரண்டாவது செட்டி கடுமையாகப் போராடிய



நொவக் ஜொக்கோவிச், 7-6 என்ற கணக்கில் அந்த செட்டை கைப்பற்றியதோடு, மூன்றாவது செட்டை 6-3 என்ற கணக்கில் கைப்பற்றினார். இதனடிப்படையில் போட்டியை நொவக் ஜொக்கொவிச் 5-7, 7-6, 6-3 என்ற கணக்கில் கைப்பற்றிக் கொண்டார்.

இத்தொடரில் உலகின் இரண்டாம் நிலை வீரரான நொவக் ஜொக்கோவிச், உலகின் 6ஆம் நிலை வீரரும், இத்தொடருக்கான தரப்படுத்தலில் 4ஆம் நிலையில் காணப்பட்டவருமான தோமஸ் பேர்டிச்சை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தார்.

உலகின் 4ஆம் நிலை வீரரும், இத்தொடருக்கான தரப்படுத்தலில் 3ஆம் நிலையில் காணப்பட்டவருமான அன்டி மரே, உலகின் முதல்நிலை வீரரான ரொஜர் பெடரரை வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தார்.

## சச்சினுக்கு மீண்டும் உயரிய விருது



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரரான சச்சின் டெண்டுல்கருக்கு அவுஸ்திரேலியாவின் உயரிய விருது வழங்கபடவுள்ளது.

இந்திய அணியின் மாஸ்டர் பேட்ஸ்மேன் சச்சின் சதத்தில் சதம் உட்பட பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளார்.

இவரை கவுரப்படுத்தும் விதமாக இந்திய அரசு சமீபத்தில் சச்சினுக்கு ராஜ்யசபா எம்.பி பதவி வழங்கியது.

இந்நிலையில், அவுஸ்திரேலியர்கள் மற்றும் சிறந்த சாதனைகள் படைத்தவர்களுக்கு வழங்கப்படும் அவுஸ்திரேலிய நாட்டின் உயரிய விருதான ஓர்டர் ஒப் அவுஸ்திரேலியா விருது வழங்கப்படும் என்று தற்போது டெல்லி சென்றுள்ள அவுஸ்திரேலிய பிரதமர் ஜூலியா கில்லர்ட் தெரிவித்துள்ளார்.



## கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்
## முதலிடம்

யாழ்.மாவட்ட கிரிக்கெட் கழகங்களுக்கிடையிலான தரவரிசையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 141.7 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது.

சென்ரல் விளையாட்டுக் கழகம், ஜோர் வெப்ஸ்டர் வெற்றிச் சின்னத்திற்தினை வழங்குவதற்காக, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிரிக்கெட் கழகங்களின் தரப்பட்டியலை 2010 ஆம் ஆண்டிலிருந்து தயாரித்து வருகின்றது.




2010 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த வெற்றிச் சின்னத் தரப்பட்டியலில் தொடர்ந்து இரண்டு வருடங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முன்னிலைபெற்று வெற்றிச் சின்னத்தைத் தட்டிச் சென்றது.

இவ்வருட புள்ளிகள் கணிப்பீட்டின்படி (01-01-2012 இருந்து 15.10.2012 வரை) முடிவடைந்த போட்டிகளின் அடிப்படையில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி 141.7 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளது. இவ்வணி தாம் விளையாடிய 27 போட்டிகளில் 21 போட்டிகளில் வெற்றி பெற்று உள்ளது.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் 111.4 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 93.3 புள்ளிகளை பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## இங்கிலாந்தின் எதிர்காலத் தலைவர் வெய்ன் றூனி






இங்கிலாந்து அணியின் எதிர்காலத் தலைவராக மன்செஸ்டர் யுனைட்டட் அணியின் வெய்ன் றூனியைத் தான் கருதுவதாக இங்கிலாந்து தேசிய அணியின் முகாமையாளர் ரோய் ஹொட்ஜ்சன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்தின் வழமையான தலைவர் ஸ்டீவன் கெரார்ட் போட்டித்தடை காரணமாகவும், உப தலைவர் ஃபிராங் லம்ப்பார்ட் காயம் காரணமாகவும் போட்டிகளில் பங்குபெற முடியாது போக சன் மரினோவிற்கு எதிரான உலகக்கிண்ணத் தகுதிப் போட்டிகளில் இங்கிலாந்து அணியின் தலைவராக வெய்ன் றூனி செயற்பட்டிருந்தார்.

அப்போட்டியில் இங்கிலாந்து அணி 5-0 என்ற கணக்கில் வெற்றியடைந்திருந்ததோடு, வெய்ன் றூனி 2 கோல்களையும் பெற்றிருந்தார்.


இந்நிலையில் இங்கிலாந்தின் எதிர்காலத் தலைவராக வெய்ன் றூனியைக் கருதுகிறீர்களா? எனக் கேட்கப்பட்டமைக்குப் பதிலளித்த ரோய் ஹொட்ஜ்சன், வெய்ன் றூனியை எதிர்காலத் தலைவராகக் கருதுவதாகவும், அவர் மிகவும் முதிர்ச்சியடைந்த பண்புகளை வெளிப்படுத்துவதாகவும் பாராட்டுத் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்காகப் போட்டிகளில் பங்குபற்றுவதை வெய்ன் றூனி நம்பமுடியாதளவு முக்கியமானதாகக் கருதுவதாகத் தெரிவித்த ரோய் ஹொட்ஜ்சன், அணித்தலைவராகச் செயற்படுவதை அவர் பெருமையானதாகக் கருதுவதாகவும், அணித்தலைவராகச் செயற்பட அவர் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பான ஒலித்திறன் கொண்ட சோனி எக்ஸ்பீரியா டி!








இந்த ஆண்டில் நடந்து முடிந்த ஐஎப்ஏ 2012 கண்காட்சியில் புதிதாக எக்ஸ்பீரியா டி என்ற ஸ்மார்ட் போனை அறிமுகம் செய்தது சொனி நிறுவனம். இந்த எக்ஸ்பீரியா டி ஸ்மார்ட் போனில் உயர்ந்த தொழில் நுட்பத்துடன் வாய்ஸ் சப்போர்ட் வசதி வழங்கப் படுவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளது.

இந்த எக்ஸ்பீரியா டி ஸ்மார்ட்போன் 4.6 இஞ்ச் திரை வசதியினை வழங்குவதாக இருக்கும்.

ஐ.சி.எஸ் இயங்கு தளத்தில் இயங்கும் இந்த ஸ்மார்ட்போன் 1.5 ஜிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் டியூவல் கோர் குவால்காம் ஸ்னாப்டிராகன் எஸ்-4 பிராசஸர் வசதி கொண்டதாக இருக்கும்.

தரத்தில் சிறந்த வசிதளை கொடுத்து அசத்தும் இந்த எக்ஸ்பீரியா டி ஸ்மார்ட்போன் என்.எப்.சி தொழில் நுட்ப வசதிக்கு சிறப்பாக சப்போர்ட் செய்யும். இதன் மூலம் 4128 X 3096 பிக்ஸல் கமரா துல்லியத் தினைக் கொடுக்கும்.

இந்த எக்ஸ்பீரியா டி ஸ்மார்ட்போன் துல்லியமான ஒலியினைக் கொடுக்கும் என்பதற்கான (எச்டி வாய்ஸ் சர்டிஃபைட்) சான்றிதழையும் பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 மாதங்களில் காற்று மற்றும் நீரிலிருந்து 5 லீற்றர் பெட்ரோல் தயாரித்த இங்கிலாந்து பொறியியலாளர்கள்

இங்கிலாந்தில், ஏ.எப்.எஸ் என்னும் நிறுவனத்தில் பணிபுரியும் பொறியியலாளர்கள் காற்று மற்றும் நீரிலிருந்து பெட்ரோல் தயாரித்து சாதனை படைத்துள்ளனர். கடந்த மூன்று மாதங்களில் காற்று மற்றும் நீரிலிருந்து, அவர்கள் சுமார் ஐந்து லிட்டர் அளவுக்கு பெட்ரோல் தயாரித்துள்ளனர்.

காற்றிலிருந்து கார்பனையும், நீரிலிருந்து ஹைட்ரஜனையும் பிரித்தெடுத்த அவர்கள், கார்பன், ஹைட்ரஜனை உலையில் இட்டு, மெத்தனால் தயாரித்துள்ளனர். பின்னர் மெத்தனாலிலிருந்து பெட்ரோல் தயாரித்துள்ளனர்.

இது செயற்கை முறை என்பதால் இவ்வகையில் தயாரிக்கப்படும் பெட்ரோல் தூய்மையாக இருக்கும் எனவும், இதனால் காற்று மாசுபடுவதை தடுக்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், இவ்வகை பெட்ரோலின் விலை சாதாரண விலையை விட அதிகமாக இருக்கும் எனவும் பொறியியலாளர்கள் கூறினர். அடுத்த இரண்டு வருடங்களில் இதற்காக ஆலை ஒன்றை நிறுவப் போவதாகவும், அதன்மூலம் ஒரு நாளைக்கு 1200 லிட்டர் அளவுக்கு பெட்ரோல் தயாரிக்கப் போவதாகவும் அவர்கள் கூறினர்.

எனினும் இவ்வகையில் தயாரிக்கப்படும் பெட்ரோலின் விலை உயர்வாக இருக்கும் என்பதால், பெட்ரோல் தட்டுப்பாடாக இருக்கும் காலங்களில் இத்தகைய முறையை பயன்படுத்த இயலுமேதவிர, பெட்ரோல் விலையைக் குறைக்க இது எவ்வகையிலும் உதவாது.



# 45,000 மாணவர்களை உள்வாங்கி கின்னஸ் சாதனை படைத்த ஆரம்பப் பாடசாலை



பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக்கொள்வதில் இலங்கை பெற்றோர் பெறும் சிரமங்களை எதிர்கொள்கின்ற நிலையில் இந்தியாவில் உள்ள ஆரம்ப பாடசாலையொன்று 45,000 மாணவர்களை உள்வாங்கி கின்னஸ் சாதனை புரிந்துள்ளது. இதேவேளை, இப்பாடசாலையில் 2500 ஆசிரியர்கள் கடமையாற்றுவதுடன் 1,000 வகுப்பறைகள் இம்மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் லக்னோவ் பகுதியில் நகர் புறத்தில் இயங்கிவரும் பாடசாலையொன்றிலேயே இவ்வாறு 45,0000 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இப்பாடசலையில் கடந்த 2010 - 2011 வரை 39,437 மாணவர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே இத்தொகை 45,000 ஆக அதிகரித்துள்ளதாக பாடசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. மேற்படி பாடசாலையை 1959 ஆம் ஆண்டு ஜகதிஸ் காந்தி மற்றும் அவரது மனைவி பாரதி என்ற தம்பதியினர் 300 ரூபாய் வங்கி கடனினூடாக ஆரம்பித்துள்ளனர். ஆரம்பத்தில் இப்பாடசாலை 5 மாணவர்களை மட்டுமே கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தற்போது இப்பாடசாலையின் கிளைகள் 20 நகரங்களில் காணப்படுவதுடன் 3 வயதிலிருந்து 17 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்கு கல்வி நடவடிக்கையை வழங்கி வருகின்றது. இப்பாடசாலையின் குறிப்பிடத்தக்க இந்த வளர்ச்சியானது பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டும் என்று நினைத்ததின் பிரதிபலிப்பே என இப்பாடசலையின் நிறுவுனர் காந்தி (வயது 75) தெரிவித்துள்ளார். எமது மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் சிறந்த பெருபேறுகளை பெறுகின்றனர். இந்த சாதனையானது எமது வளர்ச்சிக்கு உற்சாகமூட்டுகின்றது. இதை அளவிட முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


இதோ! புலமைப் பரிசில் முன்னணிக் கையேடு வெளிவந்துவிட்டது

புலமை 02




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855


# நான்கு சூரியன்களுடன் புதிய கோள்



நான்கு சூரியன்களுடன் காணப்படும் புதிய கோளொன்றை சர்வதேச வானியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். நமது பூமியிலிருந்து 150 ஒளியாண்டுகளுக்கு அப்பால் பால்வெளிக்குள் கண்டுபிடிக்கப்பட்ட இப்புதிய கோளுக்கு பிஎச் 1 (பிளானட் ஹன்டர்ஸ் என்பதன் சுருக்கம்) என்று பெயரிட்டுள்ளனர்.

கொட்டன்வூட்டைச் சேர்ந்த ரொபேர்ட் கக்ளியானோ மற்றும் சன் பிறன்ஸிகோவைச் சேர்ந்த அரிஸ், கியான் ஜெக் ஆகிய வானியல் ஆராய்ச்சியாளர்களே மேற்படி நான்கு சூரியனைக் கொண்ட கோளினைக் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியைவிட ஆறுமடங்கு பெரிதான இக்கோளானது வாயுவினால் சூழப்பட்டதென நம்பப்படுகிறது. கக்ளியானோவும் ஜெக்கும் அமெரிக்காவின் யாலே பல்கலைக்கழகத்தின் பகுதிநேர கோள் கண்டுபிடிப்பாளர்களாக செயற்படுகின்றனர். நாசாவின் கப்லர் தொலைநோக்கியினூடாக வானியல் தரவுகளைப் பெற்று மக்களுக்கு தெளிவுபடுத்தும் திட்டத்தினூடாகவே இப்புதிய கோளினைக் கண்டுபிடித்துள்ளனர். இதற்காக தயாரிக்கப்பட்ட தொலைநோக்கியின் பெறுமதி 600 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

யாலே பல்கலைக்கழக வானியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த கோளானது ஹவாயில் இருக்கும் பிரிட்டன் மற்றும் அமெரிக்க ஆய்வாளர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆய்வு அறிக்கையை யாலே பல்கலைக்கழகத்தின் மெக் ஸ்குவம்ப், நவடாவில் நடந்த அமெரிக்க வானியலாளர் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கோளினது மாதிரி உருவத்தினை நாசா இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் ... பிறஸ் ஸ்தாபனத்தினால், 2012 ஒக்ரோபர் 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது.